
கல்கி



KALKI 31.3.1968 40 காசு


காஸெல்ஸ்

பஜாஜ்
எலெக்டிரிகல்ஸ்
லிமிடெட்

பொருத்தமான சீதோஷ்ண நிலையை உருவாக்கும்

...உழைப்பதற்கும் சரி-ஒய்வெடுப்பதற்கும் சரி,
ஒவ்வொரு காஸல்ஸ் விசிறியும்
மிக மிருதுவாக இயங்குகின்றது. விசிறியின் பட்டைகள்
காற்றை வீசித்தள்ளும் சப்தம்கூட ரகசியம் பேசுவதுபோல
நிசப்தமாக விளங்குகிறது.
மிகச் சிக்கனமாக இயங்கி ஒவ்வொரு யூனிட் மின் சக்தி
உபயோகத்திலும் அதிகமான அளவு காற்று வீசச்செய்கிறது.
மிகத் திறமையுடன் வேலைசெய்து ஆயுட்காலத்திற்கும்
உழைக்கின்றது.
இன்றே ஒரு காஸல்ஸ் விசிறியில் முதலீடு செய்து ஆண்டு
முழுவதிலும் சௌகரியமான சீதோஷ்ண நிலையில் வாழ்க.

**காஸல்ஸ் விசிறி ஒவ்வொருவர் தேவைக்கும்
உகந்த வகையில் கிடைக்கின்றது.**




கல்கி

பொருளடக்கம்

பிலவங்க பங்குனி 18 — மார்ச் 31

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



பட விளக்கம்
பக்கம் 18


அடுத்த பருவமழையும் பொய்த்தால் மொரார்ஜி வருணனுக்குப் பிரார்த்தனை செய்வார்.
ரஷியா
அமெரிக்கா
வன்செயல் புரியாதீர்!
அமெரிக்கா
தென்கிழக்காசியா
கம்யூனிஸம்



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 27 ☐ இதழ் 35

தொழில் வளர்ச்சியே தொழிலாளரின் நன்மைக்கு ஆணிவேர்

சென்ற இதழில் ராஜாஜி பின்வருமாறு எழுதியிருந்தார்கள் :

> தமிழக அரசாங்கத்தை நான் பாராட்டி வருகிறேன்; அதற்கு நட்புடன் உதவியும் அளித்து வருகிறேன்; எனினும் கம்யூனிஸ்ட் கட்சியுடன் அவர்கள் (தி. மு. க.வினர்) கொண்டுள்ள தொடர்பை நான் ஒப்புக் கொள்ளவில்லை.... தொழில் துறையின் இணக்கத்துக்கும், முன்னேற்றத்துக்கும் கம்யூனிஸ்ட்கள் தீவிர எதிரிகள்.

ராஜாஜியின் இக்கருத்தைத் தாங்கிய 'கல்கி' வெளியாகு முன்னரே இவ்விஷயமாக வெகு நல்லதொரு கருத்து வெளியாகியிருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறோம்.

இம்மாதம் 19ந் தேதியன்று தமிழக சட்டசபையில் பேசிய முதன் மந்திரி திரு அண்ணாதுரை அவர்கள், வன்செயல்களைத் தூண்டிவிடும் கம்யூனிஸ்ட் தோழர்கள் மீது தாம் கடுமையான நடவடிக்கை எடுக்க நேரிடும் என்று எச்சரித்திருப்பதைத்தான் குறிப்பிடுகிறோம். சட்ட ரீதியில் அமைதியான முறையில் வேலை நிறுத்தம் செய்வதைத் தாம் ஆதரித்த போதிலும், தொழிலாளர்கள் பலாத்காரங்களில் இறங்குவதை ஆதரிக்க முடியாது என்று முதல்வர் உறுதியாகக் கூறியுள்ளார். வேலைநிறுத்தங்களில் வன்செயல்கள் நிகழாமலும், கண்ணியமற்ற கண்டன கோஷங்கள் எழுப்பாமலும் பார்த்துக் கொள்ள வேண்டியது தொழிற்சங்கத் தலைவர்களின் பொறுப்பாகும் என்று அவர் கூறியுள்ளார். அமைதி முறையை மீறும் அங்கத்தினர்களைத் தொழிற் சங்கங்களிலிருந்தே வெளியேற்றிவிட வேண்டும் எனவும் தெரிவித்திருக்கிறார்.

கம்யூனிஸ்டுகளுடன் தேர்தல் ஒப்பந்தம் செய்து கொண்டதால் தி.மு.க. ஒரு தருமசங்கடமான நிலையில் இருப்பதாக நினைத்தவர்களுக்கெல்லாம் இது மிகுந்த ஆறுதல் தரும் விஷயம். தேர்தல் சௌகரியத்துக்காகக் கட்சி அடிப்படையில் செய்துகொண்ட ஓர் ஏற்பாட்டை ஒட்டித் தேச நலனுக்கு விரோதமாக நடந்துகொள்ள தி. மு. க. இசையாது என்பது தெளிவாகியுள்ளது.

இவ்வாறெல்லாம் முதலமைச்சர் கூறியிருப்பதைவிட, அவரிடம் இந்தக் கருத்துத் தோன்றியதற்கு ஆதாரமான பொருளாதார உணர்வைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறோம். தொழில் துறையில் அமைதி ஏற்பட்டு உற்பத்தி உயர்ந்தாலொழிய பொருளாதார மந்த நிலையை ராஜ்யம் கடக்க முடியாது என்று முதன் மந்திரி வற்புறுத்தியிருக்கிறார்.

உற்பத்தியைப் பெருக்குவதுதான் தேச சுபிட்சத்துக்கு வழி. உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய உற்சாகம் முதலீட்டாளர்களுக்கு ஏற்படக்கூடிய வழியைத் தோற்றுவிக்க வேண்டும்.

உற்பத்தி உயர்வின் மூலமே அடையக் கூடிய பொருளாதார வளர்ச்சி ... கம்யூனிஸ்டுகளுக்கு அக்கறையில்லை. இரு வர்க்கங்களுக்கு இடையே துவேஷத்தை விதைத்துத் தேசத்தின் வளர்ச்சிக்குக் குந்தகம் செய்வதும், அமைதியைக் குலைப்பதுமே கம்யூனிஸ்டுகளின் இலட்சியம்.

நியாயமான முறையில் தொழிலாளர் பெறவேண்டிய நலனையெல்லாம் உறுதிப்படுத்தித் தருவதும், அதிலும் முக்கியமாக ஏழைகளுக்கு விலைவாசி உயர்வினால் ஏற்படும் கஷ்டங்களை நீக்குவதும் அரசாங்கத்தின் பொறுப்பு. ஒரு பக்கத்துக்கு மட்டுமே அரசாங்கத்தின் ஆதரவு உண்டு என்ற எண்ணம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். முதலீடு செய்வதென்பது தேச வாழ்வுக்கு மிகவும் அவசியமான ஒரு பணி. அதற்குரிய

காமகோடியின் கருணைமொழி

உலகம் பொய், உலகம் பொய் என்று எதற்காகச் சொல்ல வேண்டும்? ஆண்டவன் ஒருத்தன்தான் மெய் என்று உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறோம். கல்வியினால் அந்த மெய்யான பொருளை அறிந்து கொள்ள வேண்டும். கல்வி என்பது அந்த மெய்யான பொருளை அறிவிப்பதுதான்.



லாபம் எதிர்பார்ப்பதும் நியாயமான மானுட இயற்கை. 'ஆரம்பத்தில் தொழிலதிபர்கள்பால் என்னுள்ளே ஒரு வெறுப்புணர்ச்சி பதுங்கியிருந்தது. ஆனால் அவர்களை நெருக்கமாக அறிந்து கொள்ளும் வாய்ப்புக்கள் கிடைத்தபின் அவர்கள் ராஜ்யத்தின் முன்னேற்றத்துக்கும் தொழிற் பெருக்கத்துக்கும் எவ்வளவு தேர்ந்த கவனத்துடன் திட்டமிட்டிருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது' என்று திரு அண்ணாதுரை அவர்கள் கூறியதாகச் சமீபத்தில் 'பவன்ஸ் ஜர்ன'லில் வெளியாகியிருந்ததை இங்கு குறிப்பிட வேண்டும். திறந்த உள்ளத்துடன் பிரச்னைகளை அணுகும் அண்ணாதுரை அவர்களின் தலைமையில் தி.மு.க.வின் கொள்கையில் நல்ல திருப்பம் ஏற்படும் என்றும், அதன் வழியே ராஜ்யத்தின் சுபிட்சத்துக்கு வழி பிறக்கும் என்றும் எதிர்பார்க்கிறோம்.

பயங்கர விபத்து!

ஹூப்ளிக்கு அருகே யால்விகியில் நடந்த ரயில் விபத்தைப் பற்றிப் படிக்கையிலேயே இரத்தம் சில்லிட்டுப் போகிறது. அதிகாரபூர்வமாக விசாரணை இனிதான் நடக்கப் போகிறது எனினும், ஒரு பாசஞ்சர் ரயில் பிளாட்பாரத்தில் நிற்கும்போது அதே பிளாட்பாரத்தில் எக்ஸ்பிரஸ் வண்டியொன்றும் வருவதற்கு அனுமதிக்கப்பட்டதுதான் விபரீதத்துக்குக் காரணம் என்பது தெளிவாகத் தெரிகிறது. ஒரு ரயில் இருந்த அதே பாதையில் இன்னொரு ரயிலை அனுமதித்த விசித்திரம் எப்படி நிகழ்ந்தது என்று புரியவில்லை. இந்த விசித்திரத்தினால்தான் ஐம்பதுக்கு மேற்பட்ட உயிர்களைப் பலி கொண்ட விபரீதம் ஏற்பட்டிருக்கிறது.

சில நாட்கள் முன்புதான் நெல்லூர் அருகே ஒரு லெவல்கிராஸிங் திறந்துவைக்கப்பட்டிருந்தபோதே ரயிலும் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டதால், ரயில் — பஸ் மோதல் ஏற்பட்டுப் பல உயிர்கள் பலி ஆயின.

மனித உயிர்கள் சம்பந்தப்பட்ட பணியில் ரயில்வேக்காரர்களின் பொறுப்பு எவ்வளவு நுணுக்கமாக ஆற்றப்பட வேண்டும் என்பதை இவ்விபத்துக்கள் பயங்கரமான முறையில் உணர்த்திவிட்டன.

எக்காரணத்தினாலோ சமீப காலமாக ரயில் விபத்துக்கள் பெருகி வருகின்றன. சுதந்திர பாரதத்தில் ரயில் பிரயாணம் என்றால் மக்கள் பீதி கொள்ளும் அளவுக்கு நிலைமை முற்றிவிடும்போலிருக்கிறது. ரயில்வேத் துறை கண்ணும் கருத்துமாக இருந்து, அதற்கு ஏற்பட்டுள்ள அபகீர்த்தியைப் போக்கிக்கொள்ளத் தருணம் வந்துள்ளது.

முக்கியத்துவம் நிறைந்த முடிவு

யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரீட்சைகளை எல்லாப் பிரதேச மொழிகளிலும் நடத்த வேண்டும் என்ற கருத்தைப் பார்லிமெண்டின் மதிப்பீட்டுக் குழு ஆட்சேபித்திருக்கிறது. இவ்வாறு செய்தால் எல்லா மாணவர்களையும் ஒரே அடிப்படையில் சீர்தூக்கிப் பார்த்து மதிப்பிட முடியாமல் போகுமென்றும், பிரதேச ரீதியில் சில தவறுதலான பட்சபாத முடிவுகள் ஏற்படக் கூடுமென்றும் குழு கூறியுள்ளது. இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு முடிவு. இதனை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு பிரதேச மொழிகளிலெல்லாம் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரீட்சைகளை நடத்தும் யோசனையைக் கைவிட வேண்டுமென விரும்புகிறோம். அரசாங்கப் பட்டங்கள் அகில இந்தியாவுக்கும் பொதுவாக இல்லாமல், அவரவர் தத்தம் பிரதேசத்துடன் முடக்கப்படும் நிலைமையை அரசாங்கம் ஒரு நாளும் ஏற்படுத்தக்கூடாது.

இதையொட்டி, கல்லூரி போதனை பிரதேச மொழியிலேயே நடக்க வேண்டும் என்பவர்களும் தங்கள் கருத்தைப் பரிசிலித்துப் பார்ப்பது அவசியம். அகில இந்திய சர்வீஸ் பரீட்சைகள் ஆங்கிலத்திலேயே நடத்தப்படுமாயின், பிரதேச மொழிகளில் கல்லூரிப் படிப்புப் பெற்றவர்கள் இப்பரீட்சைகளில் எப்படிக் கலந்து கொள்ள முடியும்?

எதிர்கால உதவி

சமீபத்தில் திரு டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் ருஷ்யா நமக்கு எவ்வளவு தூரம் உதவியிருக்கிறது என்பதை விளக்கியும் மேலும் அதனுடன் நேசத்தை நெருக்கமாக வளர்த்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை வற்புறுத்தியும் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் ஒரு நீண்ட கட்டுரை எழுதியுள்ளார்.

அதற்கு திரு பிலிப் ஸ்ப்ராட் அவர்கள் 'சுயராஜ்யா' பத்திரிகையில் அவர் கூற்றுக்களிலுள்ள பல தவறுகளை எடுத்துக்காட்டிப் பதில் எழுதியுள்ளார். ருஷ்யாவின் நட்பை இனியும் வளர்த்துக் கொள்வதில் விளையக் கூடிய ஆபத்தைச் சுட்டிக்காட்டி, நம் வெளிவிவகாரக் கொள்கையில் ஒரு புதிய புநோக்கே தேவைப்படலாம் என்பதை வற்றுத்தியிருக்கிறார்.

இப்பொழுது தென் வியட்நாமில் நிலவும் சூழ்நிலையைப் பார்த்தால், வெகு விரைவில் அமெரிக்கத் துருப்புக்கள் அதை விட்டு வெளியேற நேரலாம். அது கம்யூனிஸக் கொரில்லாப் போர் முறைக்கு வெற்றியாகவும் சீனாவுக்கு ஒரு வெற்றியாகவும் முடியும்.

சீன கம்யூனிஸம், வியட்நாமில் பரவி வெற்றி பெற்றவுடன் அடுத்து எங்கே தலை நீட்டலாம் என்று பார்க்கும். அதற்கு அஸ்ஸாமும் மேற்கு வங்காளமும் வாய்ப்பான இடங்களாகத் தோன்றலாம். அப்படி அங்கு சீனா கொரில்லாப் போரைத் தொடங்கினால் ருஷ்யா அதைத் தடுப்பதற்குப் பதில் உதவவே நேரும்.

தென் கிழக்கு ஆசியப் பகுதியில் தென் வியட்நாமில் சீனாவின் விஸ்தரிப்பை ருஷ்யா விரும்பவில்லைதான். எனினும் ருஷ்யா, வட வியட்நாமுக்கு உதவியே புரிந்து வந்துள்ளதல்லவா? அதேபோல் இந்தியாவின்மீது சீனா பாயும்போதும், ருஷ்யா தன் விருப்பத்துக்கு விரோதமாகச் சீனாவுக்கு உதவ நேரலாம்.

ஆகவே எதிர்காலப் போக்குகளை மனத்தில் கொண்டால் யாருடைய நட்பை வளர்த்துக் கொள்வது இந்தியாவின் சுதந்திரத்துக்கும் தற்காப்புக்கும் நல்லது என்பதைச் சொல்லத் தேவையில்லை அல்லவா?

அதிகாரிகளின் தொல்லை

சென்னை நகரசபை, சொத்து வரி வசூலிக்கும் ஊழியர்கள் தங்கள் பங்கை முழுமையாகச் செய்தால் ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும், ஒரு வருஷ ஊதிய உயர்வும் அளிப்பதாகத் தீர்மானித்திருக்கிறது. நூற்றுக்கு நூறு வசூல் செய்யாவிட்டாலும், 95 சதவிகிதம் வசூல் செய்தாலும் ஓர் ஆண்டு ஊதிய உயர்வு அளிக்கப்படும என்று அறிவிக்கிறது நகரசபை பட்ஜெட்.

மேற்கண்ட திட்டத்தின் மூலம் வரி வசூலிக்கும் உத்தியோகஸ்தர்களின் கெடுபிடியும் தொல்லையும் அதிகமாகும்; நடுத்தரக் குடும்பத்தினர் பல வகையான அவமானங்களுக்கும் மனத்தாங்கல்களுக்கும் உள்ளாவார்கள். பல இடங்களில் நல்ல சாலை வசதி, பாதாளச் சாக்கடை வசதி, இப்படிப் பல அடிப்படையான வசதிகள் செய்து தராமலே வீட்டு வரிக்கு மட்டும் விடாமல் தொந்தரவு செய்தால் மக்களுக்கு எரிச்சல்தான் உண்டாகும். நகரசபையின் நிதி நிலைமையை விளக்கி, கண்ணியமான முறையில் வரி வசூலிப்பதுதான் பண்பும் நாகரிகமும் மிக்க ஒரு நகரசபையின் கடமையாகும்.

வர்த்தக சங்கத்தின் புதிய தலைவர்

சென்னை வர்த்தக சங்கத்தின் நடப்பு ஆண்டுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்ரீ ஜெஃபர்ஸனுக்கு எமது மனமார்ந்த பாராட்டுக்கள்! சென்னை மாநகரின் சரித்திரத்துடன் இணைந்து நிற்பது 'பின்னி' என்ற பெயர் என்றால், இந்த ஸ்தாபனத்துடன் இணைந்து நிற்பது ஜெஃபர்ஸனின் பெயர். பின்னி என்றால் முதல்தர ஆடை நிறுவகள் என்பது நமது நாட்டில் மட்டுமின்றி அயல் நாடுகளிலும் பிரபலம். ஒரு பெரிய ஸ்தாபனத்தின் உயர் நிர்வாகி என்ற வகையிலே அடக்கத்துடன் ஆடம்பரமின்றிப் பணியாற்றுபவர் திரு ஜெஃபர்ஸ். தொழில்கள், அயல் நாட்டு வாணிபம் இவற்றின் நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் அபிவிருத்தி செய்து கொள்ளவும் செயல்பட்டுக் கொண்டிருப்பது சென்னை வர்த்தக சங்கம். சென்னை வர்த்தக சங்கம் தொழில் சமூகத்தினரின் பொது நலனை நாடி ஆலோசனைகள் வழங்கிச் சிறப்புப்பணியாற்றி வருகிறது. இச்சிறப்புப் பணி, அனுபவமும் ஆற்றலும் அறிவும் படைத்த ஜெஃபர்ஸனின் தலைமையில் மேலும் வளரும் என்று எதிர்பார்க்கலாம்.



திரு ஜெஃபர்ஸ்

என்ன சேதி?

புராணப் பாடம்

சென்னை சட்டசபையில் தி. மு. க. அங்கத்தினர் திரு தங்கப்பன் பின்வரும் கேள்வியைக் கேட்டார் :

''பாட புத்தகங்களில் புராணங்கள், இதிகாசங்கள் சம்பந்தமான பாடங்கள் இருப்பதை இந்த அரசு தவறு என்றோ குற்றம் என்றோ கருதுகிறதா ?''

இதற்கு மந்திரி திரு நெடுஞ்செழியன் பின்வரும் பதிலை அளித்திருக்கிறார்:

''புராண இதிகாசங்களைப் பலர் பல நோக்கங்களுக்காகப் படிக்கின்றனர். சிலர் கதைக்காகவும், சிலர் கருத்துக்காகவும், வேறு சிலர் அக்கால வாழ்க்கை நிலையைத் தெரிந்து கொள்ளவும் படிக்கிறார்கள். இந்த அரசு பாட புத்தகங்களில் புராண இதிகாசப் பாடங்கள் இருப்பதைத் தவறென்று கருதவில்லை.''

மேற்கண்ட பதில், ஒரு தி. மு. க. அங்கத்தினரே கேட்டு மந்திரி கொடுத்திருப்பதால், தி. மு. க. வுக்கும் இனி இந்தக் கொள்கையையே கடைப்பிடியுங்கள் என்று கூறியதாகக் கொள்ளலாம்.

அடுத்த ஆண்டுகளில் அரசாங்க பாட புத்தகங்கள் வெளியிடத் திட்டமிட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. மந்திரி திரு நெடுஞ்செழியன் சட்டசபையில் அளித்த வாக்குறுதியை அரசாங்கப் பாடபுத்தகத் தயாரிப்பாளர்களும் நினைவில் கொண்டு பாடங்களை அமைப்பார்கள் என்று நம்புகிறோம்.

சேலம்-தர்மபுரி தேர்தல்

காங்கிரஸ் கட்சி தற்போது எவ்வளவு சீர்கெட்ட நிலையில் இருக்கிறது என்பதை உணர்ந்து வருத்தப்படுபவர்கள்தான் உண்மைக் காங்கிரஸ்காரர்கள். இவர்கள் ஸி. ஆர். நரசிம்மன் அவர்களுக்கு சேலம் - தருமபுரி தேர்தலில் மேல்சபைக்கு வாக்கு அளிக்க வேண்டியது கடமை. காங்கிரஸ் என்ற பற்று மட்டும் வைத்துக்கொண்டு தேசத்தின் நன்மையை மறந்துவிட்டு காங்கிரஸ் அபேட்சகருக்கு வாக்களித்துவிடலாகாது.



அறவே பனை மரத்திலிருந்து கள் தயாரிக்காமல், அதைச் சர்க்கரை உற்பத்திக்குப் பயன்படுத்திக் கொண்டால் எவ்வளவோ நன்றாக இருக்கும். பனைவெல்லம் இன்றும் தெற்கு மாவட்ட மக்களால் உபயோகிக்கப் பட்டு வருகிறது.

இப்போதெல்லாம் எந்தப் பண்டத்தையும் வெள்ளையாக்கி விடுவதில் ஒரு மோகம் உள்ளது. பண்டங்களிலிருந்து அசுத்தத்தை அகற்றுவது நல்லதே எனினும், பனைவெல்லத்தின் பழுப்பு நிறத்தை மாற்றப் பார்ப்பது விவேகமல்ல. இந்த வெளுப்பு மோகத்தால் பனை வெல்லத்தின் வைடமின் சத்தில் ஓரளவை இழந்துவிடுவோம். அழுக்கில்லாத பழுப்புக்குத் தனியே ஓர் அழகுண்டு. வெளுப்பைவிடக்கூட இதற்கு அதிக அழகுண்டு. மேல்நாட்டார்கள் வெள்ளைச் சர்க்கரையையே செயற்கையாகப் பழுப்பாக்கி உட்கொள்ளும் காலம் விரைவில் வரக்கூடும். அவர்களிடமிருந்து அந்த 'ஃபாஷ'னைப் பின்பற்றுவதற்காக நாம் காத்துக் கொண்டிராமல், இப்போதிருந்தே பழுப்புக்கு நம்மைப் பழக்கிக் கொள்வோம்.

❖❖❖

உணவுத் தானியங்களைக் கிடங்குகளில் சேமித்து வைக்கும் விஷயத்தில் மத்தியசர்க்கார் கூர்ந்த கவனம் செலுத்துவது பற்றி மகிழ்ச்சி கொள்கிறேன். எனினும், உமி பிரிக்கப்படாத நெல்லை வரவழைத்து, கிடங்குகளில் சேமிப்பதிலுள்ள அநுகூலங்களை யாரும் உணரவில்லை என்று காண்கிறேன். உமி எடுக்காத அரிசிக்குக் கூடுதலாக எடை ஆகிறது என்பதும், அது அதிக இடத்தை அடைத்துக் கொள்கிறது என்பதும் உண்மை. என்றாலும், உமி இருப்பதால் தானியம் ஈரம் பட்டு மக்காமலும், பூச்சிகளால் அரிக்கப் படாமலும் காக்கப்படுகிறது. இந்த அநுகூலம் பிரதிகூலத்தைவிடப் பெரியது.

தானியத்தைக் காப்பதில் உள்ள கவலை காரணமாக, ரசாயனப் பூச்சிக் கொல்லிகளை அளவுக்கு அதிகமாக உபயோகித்து மக்கள் உணவில் நச்சு சேர்ந்துவிடாமல் பார்த்துக் கொள்வர் என நம்புகிறேன்.

❖❖❖

அமெரிக்காவில் உள்ள நீக்ரோக்கள் மேலும் மேலும் அமெரிக்கருடன் இணைந்து வாழ வேண்டுமா, அல்லது தங்கள் தனித் தன்மைகளைக் காத்துக் கொண்டு பிரிந்திருக்க வேண்டுமா என்பது கேள்வி.

அமெரிக்க நீக்ரோக்களை ஆப்பிரிக்காவுக்குத் திருப்பி அனுப்புவதற்கில்லை. அந்த அளவுக்கு அவர்கள் ஆப்பிரிக்கத் தொடர்பை இழந்து, அமெரிக்கத் தொடர்பைப் பெற்று விட்டனர்.

இவர்கள் தனித்து, பிரிந்து வாழ்வதால் அமெரிக்கரும் தனித்து, பிரிந்து வாழ்வதாகவே ஏற்படும். இவர்கள் அமெரிக்கருடன் இணைந்து வாழ்வதால் அமெரிக்கரும் தங்கள் நிறத்தையும், தனிப்பட்ட குறுகிய சயங்களையும் மறந்து வாழ வழி ஏற்படும். தனித்து நின்று உரிமைக்காப் போராடுவதில் பெருமிதம் உண்டு. தங்கள் நிற உணர்வையும் தனிப்பட்ட குறுகிய சயங்களையும் விடுவது சிரமம். எனினும், அமெரிக்க நீக்ரோக்கள் தனித்து வாழ்ந்து போராடுவதைவிட, அமெரிக்க சமூகமாகவே இணைந்து வாழ்ந்தால்தான் சரித்திரத்தின் நோக்கம் மகத்தான முறையில் நிறைவேறியதாகும். ஆபிரஹாம் லிங்கனை நினைத்தே 'சரித்திர நோக்கம்' என்று கூறுகிறேன். அவர் அமெரிக்காவைப் பயங்கர உள்நாட்டுப் போரில் ஈடுபடுத்தி நீக்ரோக்களுக்கு அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றுத் தந்தது, அவர்களைத் தனித்ததொரு இரண்டாம் பட்சக் குடிகளாக்கிவிடுவதற்கல்ல; அவர்களை அமெரிக்கப் பிரஜைகளாகவே செய்வதற்குத்தான் லிங்கன் போராடினார்.

அந்த மகாபுருஷனுக்கு மரியாதை தெரிவிக்குமுகமாக இன்றைய அமெரிக்காவிலுள்ள நீக்ரோ இளைஞர்கள், தாங்கள் அமெரிக்க சமூகத்துடன் கலக்கத்தான் முயல வேண்டுமேயன்றி, போராட்ட உணர்ச்சியுடன் தனி வாழ்வுக்கு முயலக் கூடாது. போராடும் எதிர்ப்பு உணர்ச்சி ஆரம்ப காலத்தில் அமுதமாயிருக்கும். ஆனால் போகப் போக விஷமாகி விடும்.

ஒருதலைப்பட்சமான எதிர்ப்புப் போராட்ட உணர்ச்சியில் இளைஞர்களுக்குக் கவர்ச்சி உண்டு. தனித்து வாழும் போராட்டத்தில் வேகமுண்டு. ஆனால் பிறருடன் ஒரு சமுதாயம் இசைந்து வாழ்வதென்பது இவ்வளவு வேகமாக நடைபெறாது. அதற்கு அதிகம் காலம் தேவைப்படும். ஆனால் இதுவே உத்தமமான இலட்சியம் — வெள்ளையர் நீக்ரோக்கள் இருவருக்குமே. இவ்விஷயத்தில் இந்தியா நம்பிக்கை ஊட்டும் சான்றுகளைக் காட்ட முடியும். இவ்வுபகண்டத்தின் தென் பகுதியே மிகவும் புராதனமானது என்று நிலவியல் அறிஞர் கூறுகின்றனர். இப்பகுதியில் எல்லா இனத்தவரும், எல்லா நிறத்தவரும் கலந்து விட்டதைக் காண்கிறோம். இது எப்படி நடந்தது என்று, சரித்திரம் கூறவில்லை. ஜாதி உணர்ச்சிகளும், வம்புச் சண்டைகளும் இன்னமும் இருப்பது வாஸ்தவம். ஆயினும் இவை இன அடிப்படையில் காணப்படும் நிறம் பற்றியனவோ, முக அமைப்புப் பற்றியனவோ அல்ல. தென்னிந்தியாவில் உள்ள எல்லா ஜாதியாரிலும் எல்லாவித நிற மாறுபாடுகளையும், முக

அமைப்பு மாறுபாடுகளையும் காண்கிறோம். இதற்குக் காரணமான வரலாறு நமக்குக் கிட்டவில்லை. ஆயினும் எவ்விதமோ பல வேறு இனங்களின் இசைவு ஏற்பட்டு அது உறுதியும் பெற்று விட்டதை நாம் காண முடிகிறது.

* * *

இந்தியாவிலுள்ள சர்க்கார் துறை தொழிலகங்களின் தோல்விகளைப் பற்றி ருஷியக் குழுவின் அறிக்கை வெளியாகியுள்ளது. நிர்வாகத் திறமையின்மையும், தொழிலாளரின் ஒழுக்கக் குறைவுமே நஷ்டங்களுக்குக் காரணம் என்பது தெளிவு. அதிகாரிகள் தொழில் நிர்வாகப் பொறுப்பு பெறுமல், தொழிலக அநுபவமும் திறமையும் வாய்ந்தவர்களிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட வேண்டும் என்று ருஷிய நிபுணர்கள் கூறுகின்றனர். நல்ல நிருவாகத்துக்கு உற்சாகம் அளிக்கும் முறையில் வெகுமதி தரவேண்டும் என்கின்றனர். சர்க்கார் துறையா, தனியார் துறையா என்கிற கொள்கை வாதம் உற்பத்தியின் தரத்தை நிர்ணயிக்கவில்லை. நல்ல நிருவாகமும், உற்சாகமூட்டும் வெகுமதிகளுமே உற்பத்தியை நிர்ணயிக்கின்றன. ஆக, ருஷியக் குழுவின் அறிக்கையைப் பார்த்தபின் ஆரம்ப ஸ்தானத்துக்கே திரும்புகிறோம்.

* * *

வியட்நாம் போரின் போக்கை மாற்றுவதற்காக ஒரு விசேஷக் குழு நியமித்தால் தாம் ஜான்ஸனுக்கு எதிராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடாமல் இருப்பதாக ராபர்ட் கென்னடி கூறியிருக்கிறார். இந்த யோசனையை ஏற்பதற்கில்லை என்று ஜான்ஸன் பதில் தந்திருக்கிறார். இதன்படி நடந்தால், அது ஹனாய்க்குப் புதிய ஊக்கம் தரும் என்றும், ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவதாகும் என்றும் ஜான்ஸன் கூறியுள்ளார்.

ராபர்ட் கென்னடி பெரிய அந்நிய விவகாரக் கொள்கைகளை இவ்வாறு தேர்தல் பிரசாரத்துக்கு விஷயமாக்கி இருப்பது விந்தை. ஜனாதிபதிப் பதவி வேட்டை விடுவதற்குப் பேரம் பேசும் விதத்திலா அந்நியக் கொள்கையைப் பயன் படுத்துவது?

* * *

மேற்கு ஜெர்மனியில் உள்ள தொழிற் சங்கங்கள் அரசியல் — சமூக உணர்ச்சியில் அடைந்துள்ள முதிர்ச்சியை 'டை வெல்ட்' பத்திரிகை எடுத்துக் காட்டுகிறது. 'பொருளாதாரத்தை விஸ்தரிப்பதற்காக ஊதிய உயர்வுக் கொள்கையை ஓரளவு பி[illegible]ங்கிக் கொள்ள வேண்டும்' என்றும், '[illegible]ற ஆண்டு பொருளாதாரத்தில் 'குழி' விழுந்து விட்டதால் இப்போது தொழிலகங்களுக்கு லாபம் சேருவதற்கு அநுமதிக்க வேண்டும்' என்றும் தொழிற்சங்கங்கள் கூறுகின்றன வெளில் இது அவற்றின் அறிவு முதிர்ச்சியையே காட்டுவதன்றோ?

''ஓரிரு ஆண்டுகளுக்குமுன்கூட தொழிற் சங்கத்தினர் இவ்வாறு எழுத அருவருத்திருப்பார்கள். ஏனெனில், அவர்கள் ஊதியங்களை உயர்த்திக் கொண்டே போவதால் தேச உற்பத்தி எல்லாருக்கும் மேன்மேலும் அதிகமாக விநியோகமாகும் என்ற பிரமையில் இருந்து வந்தனர். இப்போது இந்தப் பிரமை தகர்க்கப்பட்டுள்ளது'' என்று 'டை வெல்ட்' கூறுகிறது.




* * *



தேசிய மாணவர் படையாகிய என். ஸி. ஸி. என்பது அகில இந்திய விவகாரம். அதைப் பல மொழிகளின் அடிப்படையில் பல பிரிவுகளாகப் பிரித்தால் 'தேசியப் படை' என்ற பெயரே அதற்குப் பொருந்தாமற் போய்விடும். எனவே, என்.ஸி.ஸி.யில் சமீப காலத்தில் புகுத்தப்பட்ட ஹிந்திக் கட்டளைச் சொற்களை நீக்கிவிட்டு முன் போலவே நீண்டகால அந்நியச் சொற்களைப் பிரயோகிக்க வேண்டும் என்றே தமிழக அரசாங்கம் வற்புறுத்த வேண்டும். மொழி யாதாயினும் இக்கட்டளைச் சொற்கள் கூடிய வரையில் ஒரே அட்சரம் கொண்டவையாகவும், அழுத்தமான முடிவு உள்ளவையாகவும் இருத்தல் வேண்டும்.

பத்ராசலம் கும்பாபிஷேகம்

பரம பக்தரான ராமதாஸ் கும்பாபிஷேகம் செய்த பத்ராசல ராமபிரான் ஆலயத்துக்கு மீண்டும் சமீபத்தில் மிகச் சிறந்த முறையில் கும்பாபிஷேகமாயிற்று. ராமபிரானைப் போலவே தருமமூர்த்தமாக விளங்கும் ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராச்சாரிய சுவாமிகள் உடனிருந்து நடத்தி வைத்ததால் இக்கும்பாபிஷேகம் தனிப் பெருமை பெற்றது. மூலஸ்தானத்தின் மீது சுதர்சன சக்கரம் ஒன்றை வானமாமலை மடத்து ஜீயர் சுவாமிகளின் பிரதிநிதியாக வந்திருந்த சுவாமிகள் ஸ்தாபித்தார். கலியாண மண்டபத்தில் ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள் சுதர்சன சக்ரப்பிரதிஷ்டை செய்தார். ஸ்ரீ ராமமூர்த்தத்தையும், கும்பாபிஷேக விழாக் காட்சிகளையும், சுதர்சன சக்கரங்களுக்கு ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள் சங்கா அபிஷேகம் செய்வதையும் ஸ்ரீ ராமதாஸ் சந்நிதியில் ஆசாரியார் வீற்றிருப்பதையும் இங்கு புகைப்படங்களாகக் காண்கிறோம்.

புகைப்படங்கள்: 'இச்சாமி'

ஆண்டுக்கொருமுறை ரேடியோ நாடக விழா நடத்தி அந்நாடகங்களுக்கு விமர்சனம் எழுதுமாறு பத்திரிகைகளைக் கோருகிறது சென்னை வானொலி நிலையம். அப்படி அவர்கள் விமர்சனம் எழுதுமாறு கோராத ஒரு நாடகத்துக்கு இதோ ஒரு விமர்சனம்!

தாய்க்குலம் தலைகுனிகிறது!

மேலை நாடுகளில் 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்ற முன்னறிவிப்புடன் சில டெலிவிஷன் நிகழ்ச்சிகள் இரவு 10 மணிக்குப் பிறகு ஒளிபரப்பாகும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். குழந்தைகள் அந்த நிகழ்ச்சிகளைக் காணக் கூடாது என்பதே அவ்விதம் முன்னெச்சரிக்கை செய்வதன் நோக்கம். வானொலியில் ஒலிபரப்பாகும் சில தமிழ் நாடகங்களுக்கும் அம்மாதிரி எச்சரிக்கை விடுத்தால் நலமாயிருக்கும் என்று எனக்குத் தோன்றியது, 16–3–68 சனிக்கிழமை இரவு 8 மணிக்குச் சென்னை நிலையத்திலிருந்து ஒலிபரப்பான 'முன்பனி' என்ற நாடகத்தைக் கேட்ட பிறகு!

திரைப்படங்கள் பார்க்கும்போது, 'ஊப்' என்றால் என்ன தெரியுமா?' என்று ஒரு விளம்பரம் காண்பிக்கப்படுகிறதல்லவா? 'அப்படி என்றால் என்ன அம்மா?' என்று அருகிலுள்ள என் குழந்தைகள் எங்கே கேட்டுவிடுவார்களோ என்று என் மனம் அஞ்சித் துடிக்கும். தாய்மார்கள் பலர் அந்தக் கட்டத்தில் இந்த வேதனையை அனுபவித்திருப்பார்கள். அந்த விளம்பரத்துக்கு எவ்வளவோ கண்ணியத்தைத் தேடித் தந்துவிட்டது, கே. பி. ரங்காச்சாரி அவர்களின் வானொலி நாடகம் 'முன்பனி'! இரு குழந்தைகளுக்குத் தாயாக இருப்பவள் தன் கணவனுடன் உரையாடும் நாடக வசனத்தை இப்போது நினைத்தாலும் அருவருப்பாக இருக்கிறது; எழுதவும் கை கூசுகிறது! அந்த நாடகத்தைக் கேட்காத பெண்மணிகள் கொடுத்து வைத்தவர்கள்! வயது வந்த என் மகளும் மகனும் அருகில் இருக்கும் போது 'முன்பனி'யைக் கேட்க நேர்ந்தது ஒரு சோதனை. இதே நாடகாசிரியர் வேறு பல நல்ல நாடகங்கள், கதைகளை எழுதியிருக்கலாம். ஆனால் இந்த நாடகம் குடும்பக் கட்டுப்பாடு பிரசாரத்துக்காகவே எழுதப்பட்டதோ எனத் தோன்றுகிறது. குடும்பக் கட்டுப்பாடு பற்றிய பிரசாரத்தை மிக்க விரசமான முறையில் நாடகத்தில் புகுத்தியிருந்தார் நாடகாசிரியர். தயாரிப்பாளருக்கு இதில் பொறுப்பே இல்லையா? மேடை நாடகங்களுக்கும் திரைப்படங்களுக்கும் தணிக்கைக் குழுக்கள் இருப்பது போல் வானொலி நாடகங்களுக்கும் ஒன்று இருந்தால் நல்லது என்று நினைக்கத் தோன்றுகிறது. மனைவியை ஊருக்கு அனுப்பிவிட்டுத் தனிமையில் வாடும் பிரேமானந்திடம் கோவிந்த் என்ற பாத்திரம் உடற் பசியைப் போக்கிக் கொள்வது பற்றி உபதேசம் செய்வது ஆபாசத்திலும் ஆபாசம்! குழந்தைகளை எழுந்து போகச் சொல்லவும் முடியாமல் ரேடியோவை நிறுத்தவும் முடியாமல் நான் தவித்தது போல் எத்தனை தாய்மார்கள் தவித்தார்களோ, பாவம்!

சேலையில் சன்னமாகச் சில ஜரிகை இழைகள் அமைந்திருந்தால் அது சேலையின் மதிப்பை உயர்த்தும். அளவுக்கு மீறி ஜரிகை இழையோடினால் கண்ணை உறுத்தும். பிரசாரமும் அப்படித்தான். ஜாடையாகக் கோடி காட்டினால் போதும்; ரசிகர்கள் புரிந்து கொள்வார்கள். விரசமான மொழியில், விளக்கமாகப் பிரசாரத்தை நாடகத்தில் திணிப்பது பண்பட்ட ஓர் எழுத்தாளருக்கு அழகல்ல. 'முன்பனி' பெய்த ஒரு மணி நேரமும் தாய்க்குலம் அடைந்த வெட்கமும் வேதனையும் கூறத் தரமன்று. இதுபோன்ற பட்டவர்த்தனமான உரையாடல்கள் அடங்கிய தரக் குறைவான நாடகங்களை ஒலிபரப்பியே தீருவது என்று வானொலி நிலையத்தார் முடிவு செய்தால், இரவு 11 மணிக்கு மேல் ஒலிபரப்பட்டும்—'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்று முன்னெச்சரிக்கை செய்து விட்டு. குழந்தைகள் தூங்கிவிடுவார்கள், அந்த நேரத்துக்கு.

—ருக்மிணி பாலகிருஷ்ணன்



ஒரு முட்டாள் கடலில் ஒரு கல்லை எறிந்தால், நூறு அறிவாளிகள் சேர்ந்தாலும் அதை வெளியே எடுக்க முடியாது.

— பல்கேரியப் பழமொழி



உறங்கும் அழகி; உறங்காத கலை!

உறங்கும் அழகி கதை பெரியவர்கள் சிலருக்கு மறந்து போயிருக்கலாம். சிறுவர் சிறுமியரில் தூங்கும் அழகியின் கதை தெரியாதவர்கள் அதிகம் பேர் இருக்க முடியாது.

இந்தத் தூங்கும் அழகி கதையை ருஷ்யர்கள் திரைப்படமாக எடுத்திருக்கிறார்கள். சாமான்யமான முறையில் எடுக்காமல் பாலே நடனப் படமாகத் தயாரித்திருக்கிறார்கள். ருஷ்யப் படம் என்றதும் மொழிக் குழப்பம் ஏற்படுமோ என்று கவலைப்பட வேண்டாம். தூங்கும் அழகி ஓடும் ஒன்றரை மணி நேரமும் படத்தின் எந்தப் பாத்திரமும் எதுவும் பேசவேயில்லை. வசனமே இல்லாத விந்தைப் படம். எல்லாம் நடன பாவங்கள்தான். அந்தப் பாவங்களே நமக்குக் கதைப் போக்கை உணர்த்தி விடுகின்றன. காட்சி ஜோடனைகள் மிகச் சிறப்பாக இருக்கின்றன. 'பாலே' என்று குறிப்பிடப்படும் மேலை நாட்டு சாஸ்திரிய நடனத்துக்குப் பெயர் பெற்றவர்கள் ருஷ்யர்கள். எத்தனையோ பல ஆண்டுகளில் இந்தக் கலையை வளர்க்கக் கலா மேதைகள் தோன்றியிருக்கிறார்கள். எத்தனை ஆண்டுகளானாலும் அதன் மவுசு குன்றாத முறையில், அக்கலை படுத்துறங்கி விடாத வகையில் ஜீவ களையுடன் அதனை விளங்கச் செய்திருக்கிறார்கள்.

இந்தப் படத்தை லெனின்கிராட் ஆபரா பாலே தியேட்டரைச் சேர்ந்த கலைஞர்களைக் கொண்டு அழகாக எடுத்திருக்கிறார்கள். இளவரசி அரோராவாக அல்லா சிசோவா அற்புதமாக நடனமாடியிருக்கிறார். நல்ல தேவதையாக இரீனா பாலை நோவாவும், கெட்ட தேவதையாக நடலியா டுடின்ஸ்கயாவும் சிறப்பாக நடனமாடியிருக்கிறார்கள். 'பாலே' நடனத்தின் அழகை ரசிக்க விரும்புவோர் தூங்கும் அழகியைச் சீக்கிரமாகப் பார்க்க வேண்டும். ஏனெனில் பாலே நடனக் கலையின் சிறப்பை உணர்த்துவதற்காக எடுக்கப்பட்ட இப்படம் ரொம்ப நாட்கள் ஓடும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

மேனாட்டு இசையில் தரமான சாஸ்திரிய இசையை விரும்பி ரசிப்பவர்களுக்கு இப்படம் ஓர் அரிய விருந்து. உலகானுபவம் பெறாத குழந்தைகள் சிலர் நன்கு அனுபவித்து பாலே நடனமாடுவது இனிய கிளுகிளுப்பை ஏற்படுத்துகிறது.


K·T·R
லவ் பேர்ட்ஸ் பத்தி
சந்தனாதித் தைலம்
அரைக் கீரை விதைத் தைலம்
கோபுர மார்க் பன்னீர்
பொன்னாங்கண்ணித் தைலம்
K.T.R. வாசனாதி திரவியசாலை
விஜயபுரம் + திருவாரூர் + தமிழ்நாடு

விளையாட்டில் வீராங்கனை



ஆடுவதும் நானே! பாடுவதும் நானே!

பில்லியர்ட்ஸ், ஸ்நூக்கர் விளையாட்டுக்களில் ஆட்ட நுணுக்கங்களை நன்கு அறிந்து, ஆறுமாதம் தனித்து ஆடியே பயிற்சி பெற்றவர் ஸ்ரீமதி கமலா சந்திரபாபு. அவரது குரு சென்னை ராஜ்ய பில்லியர்ட்ஸ் கழகத் தோற்றத்துக்குக் காரணமான திரு டி.ஏ. சூரி.

பில்லியர்ட்ஸ் பிரபலமான 'இண்டோர்' விளையாட்டு. நாலரை அடி அகலமும் ஒன்பதடி நீளமும் உள்ள நீண்ட சதுரமான ஆறு பாக்கெட்டுகளுடன் கூடிய அழகிய மேஜையில் மூன்று தந்தப் பந்துகளைக் கொண்டு விளையாடப்படுவது. ஸ்நூக்கர் விளையாட்டை 15 சிவப்புப் பந்துகளும், கறுப்பு, பழுப்பு, நீலம், பச்சை, மஞ்சள், ரோஸ் வர்ணங்களுள்ள ஆறு பந்துகளும் கொண்டு ஆடுகிறார்கள். ஸ்ரீமதி கமலா சந்திரபாபு பில்லியர்ட்ஸில் 71 பாய்ண்டுகளும் ஸ்நூக்கரில் 47 பாயிண்டுகளும் எடுத்து அரிய சாதனையைச் செய்திருக்கிறார். பெங்களூரில் உலகச் சாம்பியன்களில் ஒருவரான பாப் மார்ஷலோடு 'எக்ஸிபிஷன் மாட்ச்' ஆடிப் பாராட்டைப் பெற்றவர் ஸ்ரீமதி சந்திரபாபு. (மேல் படம்)


சித்தூர் ஜில்லாவில் கார்வேட் நகரில் பிறந்த கமலா, சென்னை நகரசபை உதவி இன்ஜினியர் திரு சந்திரபாபுவை மணந்து கொண்டார். ஸ்ரீமதி கமலாவுக்கு அவர் ஊட்டிய உற்சாகம் பில்லியர்ட்ஸில் பல போட்டிகளில் வெற்றி பெற வாய்ப்பளித்தது. தென்னிந்தியப் பிரிவுப் போட்டியில் குவார்ட்டர் ஃபைனல் வரை சென்றார். அப்போது தோல்வியுற்றாலும், புகழ் பெற்ற பில்லியர்ட்ஸ் ஸ்நூக்கர் விற்பன்னர் திரு ஏ. செல்வராஜின் 'மோதிரக் கை'தான் அவரைக் 'குட்டி'யது.

ஆரம்பகால அனுபவங்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் ஒரு சமயம் இவர் பத்தொன்பது இருபது வயது மதிக்கத்தக்க வாலிபரோடு ஆட வேண்டியிருந்ததைச் சொல்கிறார். அந்த வாலிபர் இவரது திறமையைக் கண்டு கைநடுங்கி, பதறி ஆட்டத்தைக் கோட்டை விட்டு விட்டாராம்!

ஸ்ரீமதி கமலா சந்திரபாபு பின்னணிப் பாடியும் கூட. பல தெலுங்கு, தமிழ்ப் படங்களில் நடித்துமிருக்கிறார். டப்பிங் படங்களில் பத்மினி, சரோஜா தேவிக்குத் தெலுங்குக் குரல் கொடுத்திருக்கிறார். ரேடியோப் பாடகி; நாடகங்களில் நடிப்பவர். இப்படிப் பல கலைகளில் சிறந்து விளங்கும் ஸ்ரீமதி கமலாவுக்குக் கடவுள் பெருஞ் சோதனையைக் கொடுத்து விட்டார். அவரது அருமைக் கணவரைக் காலன் பறித்துச் சென்றுவிட்டான்! ஆனால் ஒரே புதல்வன் செல்வன் ஜயசந்திரன் ஸ்ரீமதி கமலா சந்திரபாபுவுக்கு ஆதரவாகவும் ஆறுதலாகவும் இருந்து வருகிறான். பி. எஸ்ஸி. படிக்கும் ஜயசந்திரன் விளையாட்டுக் கலையிலும் ஈடுபாடு மிக்கவன்.

''அம்மா! உன் துக்கத்தை மறக்க நீ ஏன் மறுபடியும் விளையாடக் கூடாது?'' என்று கூறி, சென்னபுரி ஆந்திர மகாசபாவுக்குத் தன் அன்னையை அழைத்துச் சென்று ஜயசந்திரன் மறுபடியும் ஆடவைத்து விட்டான். அவருடைய துக்கத்தை மறக்கடிக்கும் மருந்து விளையாட்டுத்தான் என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது!

''என் கணவர் காட்டிய ஆர்வத்தைப் போலவே என் புதல்வனும் பில்லியர்ட்ஸ், ஸ்நூக்கரில் ஈடுபாடு செலுத்துவதால் நான் மீண்டும் ஆடுகிறேன். சென்னபுரி ஆந்திர மகாசபையின் காரியதரிசிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன். பெண்களுக்கு நல்ல விளையாட்டு பில்லியர்ட்ஸ், ஸ்நூக்கர் இரண்டும். பெண்களுக்கு நல்ல கூர்மையான பார்வையும், பொறுமையும் இருந்தால் பில்லியர்ட்ஸ், ஸ்நூக்கர் விளையாட்டுக்களில் அவர்கள் சிறந்து விளங்கலாம்'' என்று யோசனை தெரிவித்தார் கமலா. - குண்டுமணி



இவ்வாண்டு மார்ச் 28ஆம் தேதியுடன் மாக்ஸிம் கார்க்கி பிறந்து நூறு ஆண்டுகள் ஆகின்றன.



எப்படி எழுதினேன்?



மாக்ஸிம் கார்க்கி

வறுமையும் அலுப்பும் மிக்க வாழ்க்கையின் அழுத்தத்தால் நான் எழுதினேன். நான் எழுதியாகவேண்டிய விஷயங்கள் எத்தனையோ இருந்தன; எனவே எழுதினேன்.

''பருந்தும் மூன் எலியும்'', வேகின்ற நெஞ்சத்தின் கதை'', ''புயல் பறவை'' ஆகியவை முதற் காரணத்தால் பிறந்தன.

''இருபத்தாறு ஆண்டுகளும் ஒரு பெண்ணும்'', 'ஆர்லோவ் குடும்பம்' ஆகியவை இரண்டாம் காரணத்தால் பிறந்தன.

என் இளமைப் பருவத்தில் நான் அயல் நாட்டு மொழிபெயர்ப்பு நாவல்களை நிரம்ப வாசித்தேன்.-டிக்கன்ஸ், பால்ஸாக், அய்ன்ஸ் வோர்த், பல்வர் — லிட்டன், டுமாஸ் ஆகியோரின் அருமையான நாவல்களை.

உறுதியான எண்ணங்களும், தெளிவான குணங்களுமுள்ள மக்களை, விதம்விதமான இன்பமும் துன்பமும் அனுபவிக்கும் மக்களை, பலத்த கருத்து வேறுபாடுகளால் மோதிக் கொள்ளும் மக்களை, இந்த நாவல்களில் சந்தித்தேன்.

என்னைச் சுற்றியுள்ள கடுகு உள்ளம் படைத்த ஆண் - பெண்கள், அற்ப வாழ்வு வாழ்ந்தனர். அற்பத்தனமான பேராசையும், பொறாமையும் கோபமும் கொண்டு சண்டை யிட்டனர். அடுத்த வீட்டுப் பையன் தங்கள் வீட்டுக் கோழி மீது கல்லை வீசி அதன் காலை ஒடித்து விட்டான் என்பதற்காகவோ அல்லது கண்ணாடிச் சில்லை உடைத்து விட்டான் என்பதற்காகவோ, அவர்கள் நீதிமன்றம் சென்றார்கள். ரொட்டி கருகிவிட்டது, இறைச்சி அதிகம் வெந்து விட்டது, பால் திரிந்து விட்டது என்னும் அற்பக் காரணங்களுக்காக அவர்கள் அலறித் துடிப்பார்கள்; 'ஆஹா, ஊஹூ'வென்று சாமியாடுவார்கள். ஒரு பவுண்டு வெல்லத்திலே கடைக்காரன் ஒரு காசு அதிகம் வாங்கிவிட்டால், அவர்கள் மணிக் கணக்காக ஒப்பாரி வைப்பார்கள். துணிக் கடைக்காரன் ஒரு கஜம் துணியின் விலையைக் கூட்டி விட்டால், அவர்கள் ஓயாமல் புலம்பிக் கொண்டிருப்பார்கள். அண்டை வீட்டுக்காரனுக்குச் சிறு துன்பம் நேர்ந்து விட்டால் அவர்களின் நெஞ்சம் குளிர்ந்துவிடும்; ஆனால் அதை உதட்டளவு அநுதாபமாக மாற்றிக் கொண்டு உறவாடுவார்கள்!

'எப்படி எழுதினேன்?' என்னும் கேள்விக்கு விடை இதுதான்:

வாழ்விலிருந்தும் புத்தகங்களிலிருந்தும் எனக்கு அநுபவங்கள் கிடைத்தன. வாழ்க்கை அநுபவம் கச்சாப் பொருளைப் போன்றது; புத்தக அநுபவம் அரை வேக்காட்டுப் பண்டம் போன்றது.

இதைக் கொச்சையாகச் சொன்னால், வாழ்க்கை அநுபவம் எருதைப் போன்றது; புத்தக அநுபவம், அழகாகப் பதனிடப்பட்ட எருதின் தோலைப் போன்றது.

நான் அயல்மொழி இலக்கியத்துக்கு, குறிப்பாகப் பிரெஞ்சு இலக்கியத்துக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு இருபது வயதானபோது, பிறருக்குச் சொல்லியாக வேண்டிய எத்தனை விஷயங்களை நான் பார்த்திருக்கிறேன், கேட்டிருக்கிறேன், அனுபவித்திருக்கிறேன் என்பதை உணர்ந்தேன். மற்றவர்களை விட மாறுபட்ட விதத்தில் நான் சில விஷயங்களை உணர்கிறேன், புரிந்துகொள்கிறேன் என்று

தோன்றியது. இது என்னை நிலைகொள்ளாமல் தத்தளிக்கச் செய்தது; பித்தனாக்கியது.

இந்தச் சமயத்தில் என்னை எல்லோரும் சுவையான 'கதை சொல்லி' என்று கருதினார்கள். துறைமுகத் தொழிலாளிகளும், ரொட்டி சுடுவோரும், நாடோடிகளும், தச்சர்களும், ரயில்வே ஊழியர்களும் 'புனித ஸ்தலங்களுக்கு யாத்திரை' செய்வோரும், நான் கதை சொல்லும்போது மிக ஈடுபாட்டுடன் கேட்பார்கள்.

நான் புத்தகத்தில் படித்த கதைகளையெல்லாம் அவர்களிடம் சொல்லுவேன். அப்படிச் சொல்கையில் அவை புத்தகக் கதைகளாக இரா; எனது அநுபவம் கலந்த கதைகளாக மாறிவிடும்! வெவ்வேறு கதைகளாக முளைத்து விடும்! ஏனெனில் வாழ்வும் இலக்கியமும் என்னுள் ஒன்ருகக் கலந்து விட்டன; புத்தகமும் மனிதனைப் போல் வாழ்க்கையின் பிரதிபலிப்புத்தான்; உயிரோடு உரையாடுகின்ற ஒன்றுதான்; மனிதனால் படைக்கப்பட்ட அல்லது படைக்கப்படவிருக்கின்ற பொருளைப் போல், அதுவும் ஒரு பொருள்தான். என் கதைகளைக் கேட்ட படிப்பாளிகள் ''எழுது! எழுதப் பழகு!'' என்ருர்கள்.

நான் ஊர் சுற்றிகளைப் பற்றி ஏன் எழுதுகிறேன் என்று பல இளைஞர்கள் கேட்கிருர்கள்.

ஊர் சுற்றிகளில் விநோதமானவர்கள் இருந்தனர். அவர்களைப் பற்றி எனக்குத் தெரியாத விஷயங்கள் எவ்வளவோ உண்டு. எனினும் அவர்களை நான் மிகவும் நேசித்தேன். ஏனெனில் அவர்கள் வாழ்க்கையைக் குறை கூற மாட்டார்கள்; மாருக, செல்வந்தர்களின் சுகபோக வாழ்வைப் பரிகசிப்பார்கள். அவர்களது பரிகாசம் மறைமுகமான பொறுமையாலோ, ஏமாற்றத்தாலோ பிறந்ததல்ல. தமது வாழ்க்கை நிலை மோசமென்ருலும், தாங்கள் செல்வந்தர்களை விடச் சிறந்தவர்கள் என்ற பெருமிதமே பரிகாசத்துக்குக் காரணம்!

எனக்கு மனிதனை விடச் சிறந்த கருத்துக்கள் இல்லை; மனிதன்தான், மனிதன் மட்டும்தான் எல்லாப் பொருள்களுக்கும், எல்லாக் கருத்துக்களுக்கும் படைப்பாளி; அவனே அற்புதம் செய்வோன்; அவனே இயற்கைச் சக்திகளின் எதிர்காலத் தலைவன்.

இவ்வுலகின் அதி அற்புத அழகுப் பொருள்கள் எல்லாம் உழைப்பால் ஆனவை; திறன் மிக்க மனிதக் கரங்களால் ஆனவை.

நமது சிந்தனைகள் எல்லாம், நமது கருத்துக்கள் எல்லாம், உழைப்பிலே பிறந்தவை என்பதைத்தான் கலை, விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றின் வரலாறு முழுதும் காண்கிறேம்.

உண்மைகளுக்குப் பிறகே, சிந்தனைகள் உதிக்கின்றன. நான் மனிதனுக்குத் தலை வணங்குகிறேன். ஏனெனில், மனித அறிவுக்கும் கற்பனைக்கும் அப்பால், நான் இவ்வுலகில் வேறென்றையும் காணவில்லை; உணரவில்லை.

தூய விஷயங்களைப் பற்றிப் பேச வேண்டுமாஞல், ஒன்று சொல்வேன்:

மனிதன் தன்மீதும் தனது இன்றைய முன்னேற்றத்தின்மீதும் அதிருப்தி கொள்வது தூய்மையானது; தான் படைத்த சிறுமைக் குப்பைகள் மீது அவன் வெறுப்புக் கொள்வது தூய்மையானது; பேராசையையும், பொறுமையையும் கயமையையும் பிணியையும், போரையும் இவ்வுலக மனிதரிடையேயுள்ள எல்லாப் பகைமைகளையும் ஒழிக்க வேண்டும் என்னும் அவனது அவா தூய்மையானது; அவனுடைய உழைப்பு தூய்மையானது!

பொருளடக்கப் பகுதியில் இடம் பெற்றுள்ள படத்தை இன்னெரு முறையும் பாருங்கள். விக்கட்டின் மீது உள்ள பெய்ல் பறப்பதும் ஸ்டம்ப் செய்த விக்கெட்கீப்பர் முகத்தில் மகிழ்ச்சியும் பெருமிதமும் சொட்டுவதும் 'ஸ்லிப்'பில் உள்ள சிறுவன் ஆனந்தத்துடன் துள்ளுவதும் எத்தனை இயற்கையாக அமைந்துள்ளன! விநாடிப் போது தாமதமாகி யிருந்தால் இந்த அரிய காட்சியைப் படமாக்கியிருக்க முடியுமா ?

புகைப்பட நிபுணர்கள்கூட எடுக்கச் சிரமப்படக்கூடிய இந்தக் காட்சியைப் படமெடுத்தது ஒரு சிறுவன், வயது பதினெென்று என்ருல் நம்புவது கடினம்தான்.

ஆனல் 1967ம் ஆண்டில் பிரிட்டனின் தலைசிறந்த ஜூனியர் புகைப்பட நிபுணனுகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளான் இந்தச் சிறுவன் என்பது உண்மை. ட்ரிவர் கிரே என்பது இவன் பெயர். அவன் எடுத்த அப்படத்துக்குத் தலைப்பு: ''ஹௌ இஸ் தட் ?''

எத்தனையோ பரிசுகள் பெற்றுள்ள சிறுவன் கிரே 'டபிள்செஞ்சுரி' போட வாழ்த்துவோம்!




இது போன்ற அழகான பன்னிரண்டு படங்களை எடுங்கள்



க்ளிக் III ...வாங்கிய நாளன்றே

- இலக்கு நோக்கி 'கிளிக்' குங்கள். சரிபடுத்தும் தொல்லையில்லை—தவறுகள் நேரவும் வாய்ப்பில்லை.
- 12 பெரிய (6x6 cm) படங்களை அளிக்கிறது ஒவ்வொரு 120 சுருளும்.
- எவர்-ரெடி உறை, போர்ட்ரெயிட் லென்ஸ் மற்றும் பிளாஷ் அமைப்பு தனி விலையில் கிடைக்கின்றன.



ஏகபோக விற்பனையாளர்கள்:

ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்

பம்பாய் · புது டில்லி · கல்கத்தா · சென்னை.

CMAG-103-203 TM

மகாபாரதம்

ராஜாஜி

"துரியோதனா! உன்னுடைய யோசனைகள் எதுவும் சரியில்லை. இந்தப் பாண்டவர்களைத் தந்திரத்தினால் ஜெயிக்க முடியாது. இவ்விடம் அவர்கள் இருந்த காலத்தில் இறகு முளைக்காத பறவைக் குஞ்சுகள் போல் இருந்தார்கள். அப்போதும்கூட உன்னால் அவர்களை ஏமாற்ற முடியவில்லையே? இப்போது அவர்கள் அனுபவம் மிகுந்து வேறு அரசனிடம் சரண் புகுந்திருக்கின்றனர். உன்னுடைய எண்ணங்கள் அவர்களுக்குத் தெரிந்து போயிற்று. தந்திரங்கள் இனிமேல் உதவாது. அவர்களை மித்திர பேதம் செய்து ஜெயிப்பது மிகவும் அசாத்தியம். துருபத ராஜன் யோக்கியமானவன். அவனை விலைக்கு வாங்க முடியாது. பாண்டவர்களை ஒருகாலும் விட்டுக் கொடுக்க மாட்டான். திரௌபதியும் அவர்கள் பேரில் ஒரு நாளும் வெறுப்புக் கொள்ள மாட்டாள். ஆகையால் நமக்கு இருக்கும் வழி ஒன்றே. இவர்களுடைய பலம் இன்னும் அதிகமாக வளருவதற்கு முன் நாம் இவர்களைத் தாக்கி யுத்தம் செய்து அழித்து விடுவதே வழி. அவர்களுடன் இன்னும் வேறு பல சிநேகிதர்கள் சீக்கிரத்தில் சேர்ந்துவிடுவார்கள். அதற்கு முன் தாக்க வேண்டும். கிருஷ்ணன் யாதவ சேனையோடு துருபதனுடைய தேசம் வந்து சேருவதற்கு முன், நாம் பாண்டவர்களையும் துருபதனையும் தாக்கி அழித்துவிட வேண்டும். துருபதன் எதிர்பார்க்காமல் இருக்கும் போதே நாம் அந்நகரத்தைத் தாக்க வேண்டும். பராக்கிரம முறையே க்ஷத்திரியர்களுக்குச் சிறந்த முறை. அதைக் கையாள வேண்டும். தந்திரங்கள் வீணாகும்" என்றான்.

கர்ணன் சொன்னதைக் கேட்ட திருதராஷ்டிரன் ஒன்றும் நிச்சயம் செய்ய முடியாதவனாகிப் பீஷ்மரையும் துரோணரையும் அழைத்து ஆலோசிக்கலானான்.

பாண்டவர்கள் உயிருடன் இருப்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைந்திருந்த பீஷ்மரைப் பார்த்துத் திருதராஷ்டிரன், "பீஷ்மரே! பாண்டவர்கள் உயிருடன் இருக்கிறதாக இப்போது தெரிகிறது. பாஞ்சால தேசத்தில் துருபதனிடம் இருக்கிறார்கள். என்ன செய்யலாம்?" என்று கேட்டான்.

"அந்த வீரர்களோடு சமாதானம் செய்துகொண்டு ராஜ்யத்தில் பாதியை அவர்களுக்குக் கொடுப்பதுதான் க்ஷேமம்.



இதுதான் நாட்டில் உள்ள ஜனங்களுக்கெல்லாம் விருப்பம். குலத்தின் பெயரைக் காப்பாற்றவும் இதுவே வழி. அரக்கு மாளிகை தீப்பற்றி எரிந்ததைப் பற்றி ஊரில் பலவாறாகப் பேசி வருகிறார்கள். உன்மேல் எல்லோரும் குற்றம் சொல்கிறார்கள். இப்போது நீ பாண்டவர்களை அழைத்துப் பாதி ராஜ்யம் கொடுத்துப் பட்டாபிஷேகம் செய்துவைத்தால், அந்தப் பழி நீங்கும். இதுவே என் யோசனை" என்று தருமமும் நீதியும் அறிந்த பீஷ்மர் சொன்னார்.

துரோணரும் அவ்வாறே சொன்னார். "நல்ல தூதனை அனுப்பிச் சமாதானம் பேசி அவர்களை வரவழைத்து யுதிஷ்டிரனுக்கு ராஜ்யாபிஷேகம் செய்து அவனுக்குப் பாதி தேசம் கொடுத்து விடுவதே மேலான யோசனை" என்று அவரும் சொன்னார்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த கர்ணனுக்குக் கோபாவேசம் வந்தது. அவனுக்குத் துரியோதனனிடம் அளவுகடந்த நட்பு. பாண்டவர்களுக்குப் பாதி ராஜ்யம் தரும் யோசனை அவனுக்குப் பிடிக்கவில்லை. திருதராஷ்டிரனைப் பார்த்து அவன் சொன்னதாவது :

"உம்மிடம் பொருளும் அந்தஸ்தும் பெற்ற துரோணர் இவ்விதம் யோசனை சொல்வது எனக்கு வியப்பாக இருக்கிறது. மந்திரிகளுடைய யோக்கியதையை நன்றாக ஆராய்ந்துதான் அவர்கள் சொல்லும் யோசனையை அரசன் பரிசீலனை செய்ய வேண்டும். பேச்சுக்கு மட்டும் மதிப்புக் கொடுத்து விடக் கூடாது."

இவ்வாறு கர்ணன் சொன்னதைக் கேட்ட துரோணருக்குப் பெருங்கோபம் வந்தது. "துஷ்டனே! நீ அரசனுக்குத் துன்மார்க்கத்தை உபதேசிக்கிறாய். மரியாதை தவறிப் பேசுகிறாய். நானும் பீஷ்மரும் சொன்னதைத் திருதராஷ்டிரன் கேட்காமற் போனால் கௌரவர்கள் சீக்கிரத்தில் அழிந்து போவார்கள் என்பது நிச்சயம்" என்றார்.

பிறகு திருதராஷ்டிரன் விதுரனைக் கேட்டான். "குலத்துக்குத் தலைவரான பீஷ்மரும் ஆசாரியரான துரோணரும் சொன்ன யோசனையே மேலானது. அறிவில் சிறந்த அவர்களது யோசனையைப் புறக்கணிக்க வேண்டாம். அவர்கள் எந்தக் காலத்திலும் நமக்கு நன்மையே செய்து வந்தவர்கள். துரியோதனன் முதலியவர்களைப் போலவே உமக்குப் பாண்டவர்களும்



புத்திரர்கள் ஆவார்கள். அவர்களுக்குத் தீங்கிழைக்க யாராவது யோசனை கூறினால், அவர்கள் குலத்தைக் கெடுக்க வந்தவர்கள் என்று நீர் கருத வேண்டும். துருபதனும் அவன் புத்திரர்களும், கிருஷ்ணனும், அவரைச் சேர்ந்த யாதவர்களும் பாண்டவர்களுக்குப் பெரும் பக்க பலமாக இருக்கிறார்கள். அவர்களை யுத்தத்தில் வெல்ல முடியாது. கர்ணன் சொல்லும் யோசனை பயனற்றது. பாண்டவர்களை அரக்கு மாளிகையில் வைத்து அவர்களைக் கொல்லப் பார்த்ததாகப் பழி நம்பேரில் ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பழியை முதலில் நீக்கிக் கொள்ள வேண்டும். நம்முடைய நகரத்திலும், நாட்டிலும் உள்ள ஜனங்கள் பாண்டவர் உயிருடன் இருப்பதைக் கேட்டு மகிழ்ந்து அவர்களை மறுபடியும் கண்ணால் பார்க்க வேண்டுமென்று ஆசை கொண்டிருக்கிறார்கள். துரியோதனனுடைய பேச்சைக் கேட்க வேண்டாம். பீஷ்மர் சொன்னதைச் செய். கர்ணனும் சகுனியும் சிறுவர்கள். இவர்களுக்கு ராஜ நீதி தெரியாது. இவர்கள் சொல்லும் யோசனைகள் பயன் தரமாட்டா'' என்றான் விதுரன்.

முடிவில் திருதராஷ்டிரன் பாண்டு புத்திரர்களுக்குப் பாதி ராஜ்யம் கொடுத்துச் சமாதானமாகப் போவதாகவே தீர்மானித்தான். பாண்டவர்களையும் திரௌபதியையும் அழைத்து வரப் பாஞ்சால தேசத்துக்கு விதுரனை அனுப்பினான்.

பலவகை ரத்தினங்களையும் ஏராளமான வேறு தானியங்களையும் எடுத்துக் கொண்டு விதுரன் துருபதனுடைய நகரத்துக்கு விசையான வாகனத்தில் ஏறிச் சென்றான்.

துருபதனைக் கண்டு கிரமப்படி மரியாதை செய்து, பாண்டவர்களையும் பாஞ்சாலியையும் ஹஸ்தினாபுரத்துக்கு அனுப்பித் தரவேண்டும் என்று திருதராஷ்டிரன் சார்பாக விதுரன் கேட்டுக் கொண்டான்.

துருபதனுக்குச் சந்தேகம்தான். அவன் திருதராஷ்டிரனை நம்பவில்லை. ''பாண்டவர்கள் இஷ்டம் எவ்வாறோ அவ்வாறே செய்யலாம்'' என்றான்.

விதுரன் குந்தி தேவியிடம் சென்று அடிபணிந்தான். ''விசித்திர வீரியனுடைய புத்திரனே! என் குழந்தைகளை நீ காப்பாற்றினாய். இவர்கள் உன் குழந்தைகள். உன்னையே நம்பியிருக்கிறேன். நீ எவ்விதம் சொல்கிறாயோ அவ்வாறு செய்வோம்'' என்றாள் குந்தி. அவளுக்குச் சந்தேகமே! பெற்ற பிள்ளைகளைப் பற்றிக் கவலைப்பட்டாள்.

விதுரன், ''குந்தியே! உன் மக்களுக்கு அழிவு கிடையாது. அவர்கள் ராஜ்ய பட்டாபிஷேகம் அடைவார்கள். உலகத்தில் பெரும் கீர்த்தி பெறுவார்கள். வா, போவோம்'' என்று சமாதானப்படுத்தினான். முடிவில் துருபதன் அனுமதியின் பேரில் எல்லோரையும் அழைத்துக்கொண்டு ஹஸ்தினாபுரம் சென்றான்.

தெருக்களெல்லாம் ஜலம் தெளித்து மலர் தூவி அலங்கரிக்கப்பட்டிருந்த ஹஸ்தினாபுரத்துக்குள் பாண்டவர்கள் திரௌபதியுடனும், தாயார் குந்தி தேவியுடனும் பிரவேசித்தார்கள். ஜனங்களின் மகிழ்ச்சி கரைபுரண்டு ஓடிற்று. மந்திராலோசனையில் முடிந்தபடியே, பாதி ராஜ்யம் பாண்டவர்களுக்குத் தரப்பட்டது. யுதிஷ்டிரனுக்கு முறைப்படி ராஜ்யாபிஷேகம் நடந்தது.

பட்டாபிஷேகம் பெற்ற யுதிஷ்டிரனைத் திருதராஷ்டிரன் ஆசிர்வதித்தான்.

''என் சகோதரன் பாண்டு இந்த ராஜ்யத்தை விருத்தி செய்தான். அவன் மகனான நீயும் கீர்த்தி பெற்றுச் சுகமாக இருப்பாயாக! பாண்டு ராஜன் என் கட்டளையை எப்போதும் சந்தோஷமாகச் செய்து வந்தான். அவ்வாறே நீயும் என்னிடம் அன்பாக இருக்க வேண்டும். என் மக்கள் துராத்மாக்கள். அகங்காரம் கொண்டவர்கள். இவர்களுடன் உங்களுக்கு விரோதம் வராமலிருப்பதற்காக நான் இந்த ஏற்பாடு செய்திருக்கிறேன். நீங்கள் காண்டவப் பிரஸ்தத்துக்குப் போய் அங்கே உங்கள் ராஜதானியை அமைத்துக் கொள்ளுங்கள். நம்முடைய முன்னோர்கள் புரூரவஸும், நகுஷனும் யயாதியும் அந்த நகரத்தில்தான் இருந்து ராஜ்ய பாரம் வகித்தார்கள். நம்முடைய வம்சத்துக்கு அதுதான் புராதன ராஜதானி. அதை நீ புனருத்தாரணம் செய்து புகழ் பெறுவாய்'' என்றான்.

இவ்வாறு திருதராஷ்டிரன், யுதிஷ்டிரனுக்கு நல்ல வார்த்தைகளைச் சொன்னான். பாண்டவர்களும் பாழாகக் கிடந்த காண்டவப் பிரஸ்தத்தை நிபுணர்களைக் கொண்டு புதுப்பித்து, மாளிகைகளும், கோட்டைகளும் கட்டி, இந்திரப்பிரஸ்தம் என்று பெயர் சூட்டி உலகமெல்லாம் வியக்கும்படியான அழகிய புது நகரம் உண்டாக்கினார்கள். அவ்விடத்தில் பாண்டவர்கள் இருபத்து மூன்று வருஷங்கள் தருமம் தவறாமல் அரசு புரிந்து கொண்டு, தாயாருடனும் திரௌபதியுடனும் சுகமாக இருந்து வந்தார்கள்.

19. சாரங்கக் குஞ்சுகள்

புராணக் கதைகளில் பறவையும் மிருகமும் மனிதர்களைப்போல் பேசும். உலக நீதியும் வேதாந்தமும்கூட உபதேசிக்கும். இதனுடன் ஆங்காங்கு அந்தப் பிராணிகளின் இயற்கை லட்சணங்களும் கதவுக்குள்ளிருந்து எட்டிப் பார்ப்பது போல் தோற்றம் காட்டவும் செய்யும்.

இயற்கையும் கற்பனையும் இவ்வாறு கலந்து நிற்பது புராண இலக்கியத்தின் தனியழகு. மகாபுத்திசாலியாகவும், நீதி நிபுணனுமாகவும் வருணிக்கப்பட்ட அனுமான், இராவணனுடைய அந்தப்புரத்தில் ஓர் அழகிய ஸ்திரீயைக் கண்டு அவள்தான் சீதை என்று எண்ணிக் கொண்டு குரங்கைப் போல் குதித்துக் கூத்தாடியது இராமாயணம் படிப்போரெல்லாம் அனுபவிக்கும் ஒரு கட்டம்.

பட்சிகளும் பசுக்களும் பேசும் கதைகளைக் குழந்தைகளுக்குச் சொல்வது சகஜம். ஆனால் முதியவர்களுக்குச் சொல்லப்படும் புராணக் கதைகளில் இவ்வாறான சம்பாஷணைகளுக்கு உண்மைத் தோற்றம் தருவதற்காக ஏதேனும் சப்பைக் கட்டுக் கட்ட வேண்டியதாகும். அதற்காகக் கையாளப்படும் முறை ஒன்று உண்டு. கதைகளில் வரும் பிராணிகளுக்கு ஒரு பூர்வ ஜன்ம விருத்தாந்தம் ஆக்கித் தந்து விடுவது புராண இலக்கிய முறை. ஒரு ரிஷி மானைப் பிறந்தார் என்றுவது, ஓர் அரசன் சாபத்தால் நரியாக ஜன்மம் எடுத்தான் என்றுவது கதை சொல்வது வழக்கம். அப்போது மானானது மான்போல் நடந்து கொள்ளும்; ரிஷி போலப் பேசும்; நரி, நரியாக இருந்தாலும் அனுபவம் பெற்ற அரசனாகவும் கூடவே காட்டிக் கொள்ளும். கதையும் ருசிக்கும்; அதன் மூலம் மிகப் பெரிய உண்மைகளும் புகட்டப்படும்.

ஃ ஃ ஃ


பாண்டவர்கள் காண்டவப் பிரஸ்தத்தில் குடியேறி, பாழாகக் கிடந்த இடத்தைப் புதுப்பித்து, நகரங்களும் கிராமங்களும் உண்டாக்கினார்கள். புதரும் முள்ளுமாக இருந்த அந்த வனம் முன் ஒரு காலத்தில் பெரிய நகரமாக இருந்ததாம். பாண்டவர்கள் அதை அடைந்தபோது ஒரே பயங்கரமான காடாக இருந்தது. பட்சிகளும் ஜந்துக்களும் அதைத் தங்கள் இருப்பிடமாகச் செய்து கொண்டிருந்தன. திருடர்களும், தீயவர்களும் அங்கே பதுங்கி இருந்து வழிப்போக்கர்களை இம்சித்துக்கொண்டிருந்தார்கள். இந்தக் காட்டைத் தீ வைத்துக் கொளுத்திவிட்டு இந்த இடத்தில் புது நகரம் கட்டி வைப்பதாகக் கிருஷ்ணனும் அர்ஜுனனும் தீர்மானித்தார்கள்.

அந்த வனத்திலிருந்த ஒரு மரத்தில் ஒரு சாரங்கப் பறவை சிறகு முளைக்காத நான்கு குஞ்சுகளுடன் வாசம் செய்தது. குஞ்சுகளையும் தாய்ப் பறவையையும் விட்டு விட்டு ஆண் பறவை வேறொரு பெண் பறவையுடன் உல்லாசமாக வனத்தில் திரிந்து கொண்டிருந்தது. தாய்ப் பறவை மட்டும் குஞ்சுகளுக்காக இரை தேடிக் கொண்டு வந்து காப்பாற்றிக் கொண்டிருந்தது. அச்சமயத்தில் கிருஷ்ணார்ச்சுனர்கள் தீர்மானித்து உத்தரவிட்டபடி காட்டில் தீப்பற்றிக் கொண்டது. நெருப்பானது பரவிக் காட்டையெல்லாம் அழித்து எல்லாப் பிராணிகளையும் துன்புறுத்திற்று. இதைக் கண்டு துயருற்ற சாரங்கம் கண்ணீர் விட்டுப் புலம்பிற்று.


''உலகத்தையெல்லாம் எரித்துக் கொண்டு நீ நெருங்கி வந்துகொண்டிருக்கிறதே! பயங்கரமான அனல் வரவர அதிகமாகிறதே! இன்னும் கொஞ்ச நேரத்தில் இங்கே வந்து நம்மையெல்லாம் எரித்து விடுமே! மரங்கள் பேரோசையுடன் விழுகிறதைக் கண்டு காட்டுப் பிராணிகள் எல்லாம் கலங்குகின்றனவே! சிறகும் கால்களும் இல்லாத குஞ்சுகளே! நீங்கள் தீக்கிரையாவீர்களே! நான் என்ன செய்வேன்? உங்கள் தகப்பன் நம்மை விட்டுப் போய்விட்டானே! இந்தக் குஞ்சுகளைத் தூக்கிக் கொண்டு பறந்து போக எனக்குச் சக்தி யில்லையே!'' என்று இவ்வாறு பரிதபித்துக் கொண்டிருக்கிற தாயைப் பார்த்துக் குஞ்சுகள் சொல்லின:

''தாயே! எங்கள் மேலுள்ள அன்பினால் பரிதபிக்காதே. நாங்கள் இங்கே இறந்து போனாலும் அதனால் ஒன்றும் குறைவில்லை; நாங்கள் நல்ல பதவியை அடைவோம். நீயும் எங்களுக்காக உயிர் நீத்தால் குலம் விருத்தியடையாமல் போகும். நீ அக்கினி இல்லாத வேறு இடத்துக்குப் போய் க்ஷேமமாக இரு. நாங்கள் இங்கே தீக்கு இரையானாலும் உனக்குப் பிள்ளைகள் உண்டாகும். அம்மா! நீ ஆராய்ந்து குலத்துக்கு எது அதிக க்ஷேமமோ அதைச் செய்.''

இவ்வாறு குஞ்சுகள் சொன்ன போதிலும் தாய்க்குக் குஞ்சுகளை விட்டுப் போக மனம் வரவில்லை. ''இங்கேயே உங்களுடன் நானும் தீக்கிரையாவேன்'' என்று இருந்தது. **(தொடரும்)**



லைப்பாய்



இருக்குமிடம்: அதுவே...
ஆரோக்கியம் இருக்குமிடம்

லைப்பாய் ஸ்நானம், உற்சாகப் பெருக்கு, உல்லாச ஊற்று..
ஒவ்வொரு குளியலும் உணர்த்தும்: நல்ல சோப்புக்குரிய நன்மைகள்
யாவும் பெறலாம், அதற்கு மேலும் பெறலாம் ஆரோக்கியமுடன்.

அழுக்கிலுள்ள கிருமிகளைக் கழுவிக் களைவது லைப்பாய்

லின்டாஸ்-L. 52-140 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

மதிய உணவு மகத்தான திட்டம்

"சென்னை நகராண்மைக்கழகத் துவக்கப் பள்ளிகளில் படிக்கும் சிறுவர்கள் பெரும்பாலோர் ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்பதைக் கூறத் தேவையில்லை. ஒரு நாளைக்கு ஒரு வேளை வயிறாரத் தங்கள் குழந்தைகளுக்கு உணவு படைப்பதே இவர்களுக்குச் சிரமம். பள்ளியில் வழங்கப்பெறும் இலவச மதிய உணவு ஏழைப் பெற்றோர்களின் சுமையை ஓரளவு குறைக்கிறது. பகலுணவுக்காகவே பல சிறுவர்கள் பள்ளிக்குச் செல்கின்றனர் என்பது உண்மை என்றே ஒப்புக் கொண்டாலும் அதனால் விளைவது நன்மைதானே? பள்ளிக்குத் தவறாமல் செல்லும் நல்ல பழக்கம் ஏற்படுகிறதல்லவா?" என்று கேட்கிறார் சென்னை நகராண்மைக் கழக கமிஷனர் திரு ஜே. ஏ. அம்பாசங்கர் ஐ. ஏ. எஸ். அவர்கள்.

"சென்னை நகரைப் பொறுத்தமட்டில் 35,000 பிள்ளைகளுக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது. ஒரு நாள் சாம்பார் சாதம், ஒரு நாள் புளியோதரை, ஒரு நாள் தயிர் சாதம் இப்படித் தினமும் உணவு வகையை மாற்றுகிறோம். தினமும் கறிகாய்கள் உண்டு. கோபாலபுரம், சிந்தாதிரிப்பேட்டை, பேசின் பிரிட்ஜ் ஆகிய மூன்று இடங்களில் உணவு தயாரிக்கப் பெற்று நகரின் பல்வேறு பகுதிகளிலுள்ள பள்ளிகளுக்கு 'வான்'களில் எடுத்துச் செல்லப்படுகிறது. அரிசியைச் சுத்தம் செய்து உலையிலிட்ட பிறகு கை படாமல்தான் உணவு தயாரிக்கப்படுகிறது. (கோபாலபுரத்தில் உணவு தயாரிக்குமிடத்துக்கு இந்த நிருபர் முன்னறிவிப்பின்றிச் சுகாதார அதிகாரியுடன் நேரில் சென்று



பார்த்தபோது பாத்திரங்களும், சமையலறையும் துப்புரவாகக் காட்சியளித்தன. ஈகூட உள்ளே நுழைய முடியாமல் வலைக் கம்பிகளால் சமையலறை பாதுகாக்கப்படுகிறது.) ஒரு குழந்தைக்கு வழங்கப்படும் (14 அவுன்சு எடையுள்ள) உணவு 12 முதல் 15 பைசா அடக்கமாகிறது. வெளியூர்களில் 10 பைசா பெறுமானமுள்ள உணவு வழங்கப்படுகிறது. சென்னை நகராண்மைக்



சென்னைநகர ஆணையாளர் திரு ஜே. ஏ. அம்பாசங்கர்

கழகப் பள்ளிகளுக்கு விநியோகிக்கப்படும் மதிய உணவுக்காகும் செலவை நகராண்மைக் கழகமே ஏற்றுக் கொள்ளுகிறது."

"இந்த வகையில் நகராண்மைக் கழகத்துக்கு ஆகும் மொத்தச் செலவு எவ்வளவு?"

"ஆண்டுக்குச் சுமார் இருநூறு நாட்களுக்கு உணவு வழங்கப் பத்து அல்லது பதினொரு லட்ச ரூபாய் செலவாகிறது."

"சர்க்கார் இந்தச் செலவில் ஒரு பகுதியைக்கூட ஏற்றுக் கொள்ளுவதில்லையா?"

"இல்லை. நாங்களும் கேட்கவில்லை. 1926 முதலே இத்திட்டம் அமுல் நடந்து வருகிறது. இன்றளவும் கார்ப்பொரேஷனின் செலவிலேயே தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இன்னும் சத்துள்ள உணவாகக் கொடுத்தால் நல்லதுதான். ஆனால் நிதி நிலைமை இடந்தரவில்லையே?" என்று குறைப்படுகிறார் கமிஷனர்.

"பகலுணவு வேண்டாம் என்று கூறும் பிள்ளைகள் இருக்கிறார்களா?"

"அநேகமாக இல்லை என்றே கூற வேண்டும். பகலுணவு சாப்பிடாதவர்களுக்கு இலவசமாகப் பால் வழங்குகிறோம். பால் பவுடர் 'கேர்' நிறுவனத்திடமிருந்து கிடைக்கிறது. கோதுமை, சோயாபீன்ஸ் எண்ணெய் இவைகளும் 'கேர்' நன்கொடையாக அளிப்பதுதான்.

"மேலை நாடுகளில் பள்ளிகளில் 'கான்டீன்' உண்டு. அங்கே குறைந்த விலைக்கு நல்ல

சத்துள்ள உணவை வழங்குவதை நான் நேரில் சென்று பார்த்திருக்கிறேன். சுமார் இருபது சென்ட் மதிப்புள்ள உணவை ஐந்து சென்டுக்கு அளிப்பதால் இடைவேளையில் குழந்தைகள் எல்லாருமே காண்டீனிலேயே சாப்பிடுகின்றனர். ஏழை பணக்காரர்கள் என்ற வேறுபாடின்றி எல்லாக் குழந்தைகளுமே பள்ளியில் உள்ள காண்டீனில் உணவு புசிக்கின்றனர். ஆனால் இங்கு தினமும் பத்து பைசாகூட உணவுக்காகச் செலவழிக்க முடியாதவர்களே அதிகம். எனவே, அது போன்ற திட்டம் இங்கு நடைமுறையில் சாத்தியமில்லை.''

''பள்ளிச் சிறுவர் — சிறுமியர் அனைவருமே மதிய உணவை ஏற்றுக் கொள்ளாததால் ஏழை — பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வுகளேயும் வேறுபாடுகளேயும் அவர்கள் உணர்ந்து கொள்ள இத்திட்டம் இடமளிக்கிறது என்பதை நீங்கள் ஒப்புக் கொள்ளுகிறீர்களா?''

''அத்தகைய மனப்பான்மை இளம் உள்ளங்களில் ஏற்படக் கூடாது என்பதுதான் நோக்கம். அதற்காக இந்தத் திட்டத்தினைக் கைவிடக்கூடாது. இது ஒரு மகத்தான இயக்கம். ஏழைப் பிள்ளைகளுள் புத்திசாலியான சிறுவர்கள் சிலர் இருக்கிறார்கள் அல்லவா? நூற்றுக்கு இரண்டு பேர்கள் இருப்பதாகவே வைத்துக் கொண்டாலும், நூறு பேர்களுக்கிடையில் இரு புத்திசாலிகளும் கல்வி பயிலும் வாய்ப்பினைப் பெறுகிறார்கள் அல்லவா? மதிய உணவுத் திட்டம் இல்லாவிட்டால், அத்தகைய பிள்ளைகள் ஒருகால் பள்ளிக்குப் போகாமலே இருத்தல் கூடும். ஆயிரத்தில் அல்லது லட்சத்தில் ஒரு மேதை இருக்கக் கூடும். அத்தகையதோர் மேதையின் சேவை இத்திட்டத்தின் மூலம் நாட்டுக்குக் கிடைக்கக் கூடுமல்லவா? மறைந்து கிடக்கும் ஒரு மேதையின் திறமை, மதிய உணவுத் திட்டத்தினால் வெளிப்படக் கூடுமானால் அதற்கென எவ்வளவு லட்சம் செலவானாலும் பரவாயில்லை!'' என்று கூறும்போது திரு அம்பா சங்கரின் முகத்தில் உற்சாகம் பொங்கியது. ஏழைச் சிறுவர்களிடம் அவருக்குள்ள கருணையும், அவர்கள் நல்ல முறையிலே கல்வி பயில வேண்டும் என்ற அவரது ஆர்வமும் அவருடைய ஒவ்வொரு சொல்லிலும் வெளிப்படுகின்றன.

பேட்டி: **பாணன்**

படித்துப் பாருங்கள்!

கோணல்கள்

இந்தப் புத்தகத்தின் அட்டைப் படத்தைப் பார்த்தவுடனேயே இது புதுமையை விரும்பும் எழுத்தாளன் அல்லது எழுத்தாளர்களின் படைப்பு என்பது புரிந்துபோகும். அட்டைப் படத்தில் இடம் பெற்றிருப்பது 'மாடர்ன் ஆர்ட்'.

சாதாரணமான முறையில் வளர்ந்து சகஜமான விதத்தில் காதல் வயப்பட்டு இணையும் ஜோடிகளை நாம் ஆயிரக்கணக்கில் பார்க்கிறோம், அவர்களைப் பற்றிப் படிக்கவும் செய்கிறோம். ஆனால் ஒருசில கோணல் காதல்களும் உண்டு. இந்த விநோதக் காதல்களை மனோவியாதிகள் என்றே சொல்ல வேண்டும். இத்தகையோரிடம் அருவருப்புக் கொண்டு ஒதுக்காமல் அநுதாபத்துடன் அணுக முயலுகின்றனர் இச்சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியர்கள்.

கதைகளைக் கூறிச் செல்லும் பாணியும் நடையழகும் இயல்பாக, இயற்கையாக சபாஷ் போடுமளவுக்கு உள்ளன. ஆனால் கதைகள் என்று பார்க்கும்போது இவற்றில் பல விழுந்து விடுகின்றன.

இதற்கு விதிவிலக்காக நா. கிருஷ்ணமூர்த்தியின் ''மனிதர்கள்'' என்ற சிறுகதையும், ம. இராஜாராமின் ''புதிய அத்தியாயம்'' என்ற சிறுகதையும் பிரமாதம் என்று கூறுமளவுக்கு உயர்வாக உள்ளன.

கடைசியாக ஒரு முக்கிய விஷயம். 'அடல்ட்ஸ் ஒன்லி' புத்தகம் இது. சிறுவர் சிறுமியர் கண்ணில் படாமல் பூட்டி வைக்கவும்.

பிரசுரம்: இலக்கியச் சங்கம், சென்னை—4; விற்பனை உரிமை: தமிழ்ப் புத்தகாலயம், 576, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை—5. விலை: ரூ. 4.00.

சீனத் தொழிலாளிகள்

நமது வடக்கெல்லையில் சீனர்களின் படையெடுப்பு நடந்த பிறகு செஞ்சீனாவுக்குள் நடப்பது பற்றி அறிந்து கொள்வதில் ஆர்வம் அதிகரித்திருக்கிறது நமக்கு. அந்தக் கம்யூனிஸ நாட்டுக்குள் சென்று நிலைமையை ஆராய அனுமதிக்கப்படுபவர்கள் வெகு சொற்பம். 1963ல் கே. ஈ. பிரீஸ்ட்லி என்பவர் எழுதிய நூலின் தமிழாக்கம், 'சீனத் தொழிலாளிகள்.'

தொழிலாளர்களின் கட்சி என்று கம்யூனிஸ்ட் கட்சி எப்போதுமே எங்குமே சொல்லி வருவது போலத்தான் சீனாவிலும் கூறியது. ஆனால் அங்கு அந்தத் தொழிலாளர் கட்சி பதவிக்கு வந்த பிறகு தொழிலாளர்கள் சகல உரிமைகளையும் இழந்து எப்படி அடிமைகளாக மாறிவிட்டார்கள் என்பதை விவரிக்கிறது 'சீனத் தொழிலாளிகள்' என்ற இந்நூல். வேலை இல்லாதிருக்க நேரிடும் என்ற பயம் போய், வேலை என்கிற தாங்கொணாச் சுமையாக மாறிவிட்டதைச் சொல்கிறது. இன்றைக்கு ஐந்தாண்டுகளுக்கு முன்பும் அதற்கும் முற்பட்ட காலத்திலும் நிகழ்ந்தவற்றைக் கூறும் இந்நூல், இன்றைய நோக்கில் முழுமை பெற்றதாகக் கூற முடியாது எனினும் ஆதார பூர்வமான நூல் என்பதால் முக்கியத்துவம் பெறுகிறது.

பிரசுரம்: நேஷனல் அகாடெமி, 9, அன்ஸாரி மார்க்கெட், தரியாகஞ்ச், டெல்லி—6. தமிழாக்கம்: எஸ். ராஜா; விலை: 75 காசு.

குடியிருந்த கோயில்

சேகர் — ஆனந்த் இருவரும் இரட்டையர். தாய் தந்தையர்களுடன் செல்வமாக வாழ்ந்து வரும் காலத்தில், ஒரு கொடியவன் குடும்பத் தலைவனைக் கொன்றுவிடுகிறான். அவனே சேகரைத் தூக்கிச் சென்று பெரிய கொள்ளைக்காரனாக வளர்க்கிறான். இரட்டையர் பிரிந்தால்தானே கதை? இரட்டையரில் ஒருவன் தீயவன்; ஒருவன் நல்லவன். இந்த இருதுருவங்களும் மோதுவதுதான் திரைக்கதையின் அடிப்படை. அலெக்ஸாந்தர் டூமாஸ் பெயரை நிலைநாட்ட உருவான சிரஞ்சீவிக் கருத்து.

இரு வேறு இயல்புகள் கொண்ட இரட்டையராக எம். ஜி. ராமச்சந்திரன் தோன்றுகிறார். அது அவருக்குக் கைவந்த பாத்திரம். ஆகிவந்த பாத்திரமும்கூட. விதம் விதமாக உடுத்தி, ஆடிப் பாடி ஆனந்தமாகத் திரிய ஒரு பாத்திரம்; உச்சி முகட்டில் ஏறி ஓட்டைப் பிரித்துக் குதித்துக் கொள்ளையடிக்க ஒரு பாத்திரம்; இந்த இரு வகைப் பாத்திரங்களிலும் நவரசங்களும் ததும்ப அருமையாக நடித்திருக்கிறார். சேகர் பாத்திரம் முரட்டுப் பாத்திரமானாலும் முழு உருவம் பெற்ற பாத்திரம். மூளை கலங்கிய நிலையிலும் முரட்டுப் போக்கு; ஆதரவு அளிப்பவர்களையே அள்ளியெறிந்து ஆட்டிப் படைக்கும் அசுரத்தனம். இவ்வியல்புகளை அநாயாசமாகத் தம் திறமையான நடிப்பின் மூலம் வெளிப்படுத்துகிறார் எம்ஜியார்; ஆனந்துக்கு ஜயலலிதா, சேகருக்கு ராஜஸ்ரீ— இரண்டு பெண்களுடனும், கும்மாளம் அடித்துக் 'காதல்' காட்சிகளில் சக்கைப் போடு போடுகிறார் மக்கள் திலகம். அடிதடி சண்டைகளில் அவருக்கு இணை அவர்தான் என்று நிலைநிறுத்திக் கொண்டவராயிற்றே! எங்க வீட்டுப் பிள்ளை மாதிரி நடித்து, ரகசியப் போலீசில் சேர்ந்து, குடியிருந்த கோயிலை உயர்த்தி வைக்கிறார் எம்ஜியார்!

ஒளிவு மறைவில்லாமல் உடையுடுத்தி, கையைக் காலைத் தூக்கிக் காட்டுமிராண்டி நடனம் ஆடிக் களிப்பூட்டுகிறார் ராஜஸ்ரீ! சல்லா உடையில் சரஸமாடும் ஜயலலிதா, 'மேல் நாட்டுப் படம் பார்க்கிறோமோ' என்று நம்மைப் பிரமிக்க வைக்கிறார்!

ஹாஸ்யத்துக்கு ஒரு நாகேஷ் இருக்கிறார். வி. கே. ராமசாமியுடன் சேர்ந்து கொண்டு சிரிப்பு வெடிகளை உதிர்க்கிறார்; பெண் வேடத்தில் கையில் துப்பாக்கியுடன் மிரட்டிக் கொள்ளையடிக்கிறார். இந்தக் காட்சிகளில் கொஞ்சம் அசடு வழிந்தாலும் படத்துக்குச் சிரிப்பும் தேவைப் படுகிறதே!

பண்டரிபாய் தான் குடியிருந்த கோயில்— தாய். அவர் நடிப்பில் அநுபவம் பேசுகிறது.

எம்.என். நம்பியாரிடம் பண்பட்ட பழைய வில்லனைக் காண முடிகிறது! எல். விஜயலட்சுமி நடனம் விறுவிறுப்பாயிருக்கிறது.

படத்தின் வண்ணக் காட்சிகள் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன.

''என்னைத் தெரியுமா?'', ''நான் யார்?'' என்ற பாடல்கள் நினைவில் தங்குகின்றன.

'கார்லிகன் பிரதர்'ஸில் ஆரம்பித்து 'எங்க வீட்டுப் பிள்ளை' வரை எத்தனையோ பல படங்களில் கையாளப்பட்ட மையக் கருத்து இனியும் உங்களை மகிழ்வூட்டக் கூடுமானால் 'குடியிருந்த கோயிலுக்கு'த் தாராளமாய்ப் போய்த் தரிசனம் செய்யலாம்.



அனுபவம் புதுமை


அறிவுக்கும் உண்டோ அடைக்கும் தாழ்?

கி.ராஜேந்திரன்



"அமெரிக்காவில் உன்னை மிகவும் கவர்ந்த ஒரு விஷயம் என்ன?" என்று என்னை யாரேனும் கேட்டால், "மற்ற எல்லாவற்றையும்விட என்னை மிக அதிகமாகக் கவர்ந்த விஷயம் அறிவுக்கு அங்கே அளிக்கப்படும் வரவேற்பு" என்று தயக்கமின்றிப் பதில் சொல்லிவிடுவேன்.

அமெரிக்காவில் உள்ள மக்கள் அமெரிக்கர்கள்தான். ஆனால் அவர்கள் எந்த நாட்டிலிருந்தெல்லாம் அங்கு வந்து குடியேறி அமெரிக்கப் பிரஜைகளாகி யிருக்கிறார்கள் என்று பார்த்தால் வியப்பாக இருக்கும். பெல்ஜியம், இத்தாலி, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, ஸ்பெயின், சீனா, ஜப்பான், ஆப்பிரிக்கா என்று அடுக்கிக் கொண்டே போகலாம். ஆதிகாலத்தில் அமெரிக்கா கண்டு பிடிக்கப்பட்ட சில ஆண்டுகளுக்குள் அங்கு வந்து குடியேறி அந்த நாட்டின் வளம் பெருக உழைத்தவர்கள் பலப்பல நாட்டவர். அதுபோக, சமீப காலத்திலும் கூட அமெரிக்காவில் போய்க் குடியேறி அமெரிக்கப் பிரஜைகளாகி யிருப்பவர்கள் அநேகம். அமெரிக்கப் பிரஜைகளாக மாறாமல், தங்கள் தங்கள்



நாட்டின் பிரஜாஉரிமையை விட்டுக்கொடுக்காமல் அமெரிக்காவில் வாழ்ந்து பணியாற்றுபவர் அனந்தம். இவ்விதம் அங்கு போய் உத்தியோகம் பார்ப்பவர்களில் பெரும்பாலோர் அறிஞர்கள், விஞ்ஞானப் பொறியியல் நிபுணர்கள்.

அறிஞர்களைக் கைநீட்டி வரவேற்பதிலும் அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதிலும் அமெரிக்கா முன்னணியில் நிற்கிற காரணத்தினாலேதான் அது இன்று உலக நாடுகள் வரிசையில் சகல துறைகளிலும் முன்னணியில் நிற்கிறது.

அமெரிக்காவின் பொருளாதார முன்னேற்றத்துக்குக் காரணம் அதன் இயற்கை வளம் என்று கூறுவோர் இருக்கிறார்கள். ஆனால் எந்த நாட்டிலும் எவ்வளவுதான் இயற்கை வளம் இருந்த போதிலும் அந்த இயற்கை வளத்தை மனித சமுதாயத்தின் முன்னேற்றத்துக்குச் சிறந்த வகையில் தீர்க்க திருஷ்டியுடன் பயன் செய்து கொடுக்க அறிஞர்கள் தேவை; அறிஞர்களின் சொல்லைச் செயலாக்கித் தர உழைப்பாளிகள் தேவை. இந்த இரண்டுமின்றி இயற்கை வளத்தினால் மட்டும் எந்த ஒரு நாடும் முன்னேறிவிட முடியாது.

அமெரிக்காவில் பணியாற்றும் இந்திய அறிஞர்கள் பலரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இவர்களில் பலர் விஞ்ஞானிகள்.

"இந்தியாவில் இல்லாமல் அமெரிக்காவில் வந்து இருந்து கொண்டு எங்களது விஞ்ஞானப் பணியைச் செய்வது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று என்னை இவர்கள் கேட்டார்கள்.

"இந்திய விஞ்ஞானிகள் பலர் இந்தியாவில் இல்லாமல் அயல் நாடுகளுக்குப் போய் விடுவது பற்றி இந்தியாவில் பலரிடையே அதிருப்தி நிலவுவது உண்மை. அதை நீங்களும் அறிந்திருக்கலாம். அதனால்தான் இந்தக் கேள்வியைக் கேட்கிறீர்கள் என்று நினைக்கிறேன். என்னைப் பொறுத்த வரையில்

உங்களைப் போன்ற விஞ்ஞானிகள் இந்தியாவுக்கோ அல்லது அமெரிக்காவுக்கோ உழைப்பதாக நான் கருதவில்லை. நீங்கள் விஞ்ஞானத்துக்காக உழைப்பதாகவே நான் கருதுகிறேன்'' என்றேன்.

''உங்களைப் போலவே இந்திய மக்கள் எல்லோரும் நினைப்பார்களா?'' என்று கேட்டார் ஒருவர்.

''மாட்டார்கள்! மக்கள் என்ன? உயர் நிலையில் உள்ள அதிகாரிகள், தலைவர்கள்கூட இப்படி எண்ண மாட்டார்கள். நீங்கள் தாய்நாட்டை மறந்து, அமெரிக்காவில் தஞ்சம் அடைந்துவிட்டதாகத்தான் நினைப்பார்கள்'' என்றேன்.

இதைத் தொடர்ந்து, இந்திய விஞ்ஞானிகள், பொறி இயல் நிபுணர்கள் பலர் அமெரிக்காவிலும், கனடாவிலும், பிரிட்டனிலும் போய் இருக்க நேருவது எதனால் என்பது பற்றி விரிவான சம்பாஷணை எங்களிடையே நடந்தது.

விசுவநாதன் என்ற நண்பரொருவர் நியூயார்க்கில் வாழ்கிறார். பலவிதமான 'லென்சு'களைத் தயாரிக்கும் கம்பெனியில் இவர் பணியாற்றுகிறார். மூக்குக் கண்ணாடி லென்சு முதல் டெலஸ்கோப், மைக்ரோஸ்கோப்பு, காமிரா லென்சுகள் வரை பல ரக லென்சுகளைத் தயாரிக்கும் ஸ்தாபனம் இது. இதே ஸ்தாபனம் அமெரிக்க அரசாங்கத்தின் விண்வெளி ஆராய்ச்சித் துறைக்கும் (NASA) உதவுகிற வகையில் சில அலுவல்களைச் செய்கிறது.

விண்வெளி வீரர்கள் விண்வெளியில் சகஜமாக உலவி வரும் காலம் வெகு தொலைவில் இல்லை. பூமியிலிருந்து ஆகாயத்தைப் பார்க்கும்போது, நட்சத்திரங்கள், கிரகங்கள் உள்ள கோணங்கள், நிலைகள் வேறு. விண்வெளியிலிருந்து நோக்கும்போது அவை அமைந்துள்ள கோணங்கள், நிலைகள் வேறு. மனிதன் விண்வெளிக்குச் சென்ற பின் அவன் காணக்கூடிய ஆகாய மண்டலத்தினை இங்கே பூமியிலேயே அவன் பார்த்து அனுபவம் பெறச் செயற்கை நட்சத்திர மண்டலங்களைச் சிருஷ்டிப்பது இந்தக் கம்பெனி ஏற்றுக் கொண்டுள்ள ஒரு முக்கிய அலுவல். விசுவநாதனும் தமது ஆராய்ச்சிகளால் இதற்குப் பேருதவி புரிந்து வருகிறார்.

பாலசுப்பிரமணியம் என்ற மற்றொரு நண்பர் மேலே குறிப்பிட்ட நாஸா நிறுவனத்திலே பணியாற்றுகிறார். விண்வெளியில் கதிரியக்கத்தினால் மனிதன் எந்த அளவுக்கு எந்த விதங்களில் பாதிக்கப்படலாம், பாதுகாப்புக்கு என்னென்ன முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்ற ஆராய்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்.

உடம்பில் தோன்றுகிற மச்சம் சில தருணங்களில் பெரிதாகிப் பெரிதாகிப் புற்றுநோய்த் தன்மை கொண்டதாக மாறிவிடுவதுண்டு. அமெரிக்காவில் இதுபோன்ற நோய் சமீபத்தில் அதிகமாகி வருவதை உணர்ந்து அத்துடன் போராட முயற்சி எடுத்து வருகிறார்கள்.

ஸ்டான்போர்டு சர்வகலாசாலையில் தாத்தாச்சாரி என்ற

படங்கள் : இடது பக்கம்: (1) மேளுட்டு இசையில் நிபுணராக விளங்கி ஆர்கெஸ்டிரா இயக்குனராகத் திகழும் இந்தியர் ஸுபின் மேத்தா அமெரிக்காவில் பெரிதும் போற்றப்படுகிறார் (2) பல்கலைக் கழகத்தில் டேப் ரிக்கார்டர்கள் துணையுடன் அந்நிய மொழிப் பயிற்சி பெறும் மாணவர்கள். இந்தப் பக்கத்தில் : (1) பட்டமளிப்பு விழாவுக்கு அணிவகுப்பு. (2) சாகித்ய அகாதமி உதவிக் காரியதரிசி பிரபாகர் மாச்வே ஓர் அமெரிக்கப் பல்கலைக் கழகத்துக்கு விஜயம் செய்தபோது. (3) நியூயார்க் சர்வகலாசாலை மாணவர்கள் விழாவில் இந்திய மாணவர்கள் உருவாக்கிய கண்காட்சி









''வைகுண்டத்துக்கு இங்கே டிக்கட் கிடையாது. வைகவுண்டுக்குத்தான் கிடைக்கும்!''

நண்பர் இத்தகைய 'மச்ச'த்தின் பௌதிகத் தன்மையை நுணுகி ஆராய்ந்து மருத்துவத்துக்கு உதவி வருகிறார்.

சிக்காகோ நகரில் உள்ள கட்டிடங்களிலெல்லாம் மிக உயரமானதொரு கட்டிடத்துக்கு வரைபடம் தயாரித்து அளித்த 'ஆர்க்கிடெக்ட் — இன்ஜினீயர்' ஒரு பாகிஸ்தானி.

இப்படியே எத்தனையோ பல துறைகளில் அயல்நாட்டவர் அமெரிக்காவில் பெரும் பணியாற்றி வருகின்றனர்.

இவர்களைப் போன்ற விஞ்ஞானிகள் இந்தியாவுக்கு வருவதனால் நமது நாட்டுக்கு ஏற்படக்கூடிய பயனை விட அவர்கள் அமெரிக்காவில் இருப்பதால் விண்வெளித் துறைக்கும் விஞ்ஞானத்துக்கும் அமெரிக்காவுக்கும் ஏற்படக்கூடிய லாபம் அதிகம். இந்தியாவில் விண்வெளித் துறை இன்னும் ஆரம்பக் கட்டத்தில்தானே இருக்கிறது. அதிலே போட்டி போட்டுக் கொண்டு நாம் முன்னேற வேண்டிய அவசியம்தான் என்ன, வேறு எத்தனையோ அவசரக் காரியங்கள் கவனிக்கப்பட வேண்டியது இருக்க? நூறு மாடிகள் கொண்ட கட்டிடங்களை நாம் எவ்வளவு கட்டிவிடப் போகிறோம் இந்நாட்டில்?

விஞ்ஞானிகள் தங்கள் ஆராய்ச்சிகளைத் தொடரத் தேவையான சாதனங்கள் பல இந்தியாவில் கிடைப்பது அரிதாக இருக்கிறது. இதனாலும் பலர் மேல் நாடுகளுக்குச் செல்கின்றனர்.

இதைச் சொன்னபோது தமிழ் நாட்டில் ஒரு நண்பர், ''இது ஒரு நொண்டிச் சாக்கு, ஸார்! அந்தச் சாதனங்களை விஞ்ஞானிகள் ஏன் இங்கேயே உருவாக்கிக் கொள்ள முயலக் கூடாது?'' என்றார்.

இதற்குப் பதில் சொல்வது எளிது. ஆராய்ச்சிக்குரிய சாதனங்களை இங்கே உருவாக்க விஞ்ஞானி அதற்கான ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டும். இதை எந்த விஞ்ஞானியும் விரும்ப மாட்டார். ஏற்கனவே 'கண்டு பிடிக்கப்பட்ட ஒரு விஷயம் பற்றி ஆராய்ச்சி செய்வதை வீண் கால விரயம் என்றே கருதுவார். மேலும் இந்த ஆராய்ச்சிக்கும் சாதனங்களின் தயாரிப்புக்கும் மூலதனம் வேண்டும். அதுவும் இந்தியாவில் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. ஆராய்ச்சிக்குப் பணம் தேவையென்றால் 'ஐந்தாவது திட்டம் முடியட்டும்' என்று சொல்கிறார்கள்.

விஞ்ஞானிகளுக்கு அமெரிக்காவில் நிறைய ஊதியம் கிடைக்கிறது, அதனால் அங்கு போய்விடுகிறார்கள் என்பது மற்றொரு குற்றச்சாட்டு. இதைப் போன்ற ஒரு முழுப் பொய் வேறு இருக்க முடியாது. ஏதோ ஒன்றிரண்டு பேர்கள் இப்படி இருக்கலாம். ஆனால் சந்தர்ப்பமும் வாய்ப்பும் கிடைத்தால் முக்காலே மூணு வீசம் விஞ்ஞானிகள் இந்தியாவுக்குத் திரும்பித் தாய்நாட்டுக்காக உழைக்கவே விரும்புவார்கள். அவர்களும், அவர்கள் குடும்பமும் சுகபோகத்துடன் வாழவேண்டுமென்பதில்லை; குறைந்தபட்ச வசதிகளுடன் சௌகரியமாக வாழ வசதி செய்து கொடுத்தால் போதும். ஆனால் அதுகூட இங்கு அவர்களுக்குக் கிடைப்பது அரிதாக இருக்கிறது. அதைவிட அரிதான விஷயம் மரியாதை.

அறிஞர்களை மதிக்கவும், மரியாதை செலுத்தவும் நாம் கற்றுக் கொள்ள வேண்டும். அதில் ஜாதி இன மத வேறுபாடுகளை நாம் மறந்துவிட வேண்டும். ஏற்றத் தாழ்வுகளை ஒதுக்கி வைத்துவிட வேண்டும்.

அமெரிக்காவில், ''அடடா! ஒரு இந்தியன் வந்து விண்வெளித் துறையில் உழைக்க இடம் தரலாமா?'' என்றோ, ''சே! ஒரு நீக்ரோவை நமது விவசாய ஆராய்ச்சியில் ஈடுபடச் செய்வதா?'' என்றோ யாரும் நினைப்பதில்லை. ''அமெரிக்கன் இருக்க வேண்டிய இடத்தில் அந்நியனை — ஜப்பானியனுக்கு அல்லது யூதனுக்கு இங்கு என்ன வேலை?'' என்று யாரும் எண்ணுவதில்லை. அறிஞர்களுக்கிடையில் பதவியில் ஏற்றத் தாழ்வுகள் இருக்கலாம். ஆனால் அறிவாற்றலில் அனைவரும் சமமாக எண்ணப்படுகிறார்கள், பழகுகிறார்கள்.

கான்ஸாஸ் சர்வகலாசாலையில் பௌதிகத் துறையில் ஆராய்ச்சிப் பணி புரியும் அன்பர் ஒருவர் இந்தியாவுக்குத் திரும்பிவிடவே விரும்பி மனுப் போட்டார்.

'டில்லிக்கு இண்டர்வியூவுக்கு வாருங்கள்' என்று பதில் வந்தது. தேதியும் குறிப்பிட்டிருந்தது. பம்பாயிலிருந்து டில்லிவரை போக வர இரண்டாவது வகுப்புக்கு ரயில் சத்தம் அவருக்குத் தரப்படும் என்றும் எழுதியிருந்தார்கள்!

அதாவது அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு இவர் தமது செலவில் போன பிறகு பம்பாய் — டில்லி ரயில் பிரயாணத்தை இரண்டாவது வகுப்பில் இந்திய அரசினர் செலவில் இவர் நடத்தலாம்! எவ்வளவு தாராளம் பாருங்கள்!

இண்டர்வியூவுக்குப் பிறகு அந்த உத்தியோகத்துக்கு இவர் ஏற்றுக் கொள்ளப்

படுவார் என்ற உறுதியும் இல்லே. பேட்டி காண்பதாக அவர்கள் குறிப்பிட்ட தேதி, அவர் அலுவல் பார்த்து வரும் 'பல்கலேக் கழகத்தில் தரப்படும் வருடாந்தர விடு முறை நாட்களுள் அடங்குவதாகவும் இல்லே.

சமீப காலமாக இந்த இனங்களில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இண்டர் வியூவைக் காருண்ய சர்க்கார் அமெரிக்காவி லேயே முடித்துவிடத் தயாரா யிருக்கிருர்கள்!

மற்ருெரு விஞ்ஞானி தமக்குத் தரப் பட்ட உத்தியோகத்தை ஏற்றுச் சென்னேக்கு வந்தேவிட்டார். வந்த பிறகு தமது ஆராய்ச்சிகளேத் தொடர அவருக்கு எந்த விதமான வாய்ப்போ வசதியோ இல்லே. பத்தாயிரம் ரூபாய்க்கு மனுப் போட்டால் ஐந்நூறு ரூபாய் ஒதுக்கினுர்கள். இதற் கிடையில் அவர் ஏற்கனவே தமது ஆராய்ச்சி களே நடத்தி வந்த அமெரிக்கப் பல்கலேக் கழகத்திலிருந்து நான்கு கடிதங்கள் வந்து விட்டன. அவர் நலமாக இருக்கிருரா என்று அன்புடன் விசாரித்து மீண்டும் என்ருவது ஒருநாள் அவருடன் சேர்ந்து உழைக்கும் நல்வாய்ப்புத் தமக்குக் கிட்டும் என்று தாம் நம்புவதாக அந்த ஆராய்ச்சித் துறையின் தலேவர் எழுதிக் கொண்டிருந்தார். அவர் எதிர்பார்த்தது வீண் போகவில்லே. அந்த நல்வாய்ப்பு அவருக்குக் கிடைத்தே விட்டது. ஒன்றும் உருப்படியாகச் செய்யாமல் கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்க எந்த உண்மையான விஞ்ஞானியால் முடியும்? அமெரிக்காவுக்கே திரும்பிப் போய்விட்டார் இந்தத் தமிழகத்து விஞ்ஞானி.

பம்பாயில் சர்க்கார் துறையைச் சேர்ந்த ஒரு பெரிய ஆராய்ச்சி நிலேயத்தில் கனடா வில் கற்றுத் தேறிய இந்திய விஞ்ஞானி ஒருவர் பதவி ஏற்ருர். சில நாட்களுக்குப் பிறகு அங்கு பணியாற்றும் விஞ்ஞானிகளின் ஒரு கூட்டம் நடைபெற்றது. குறிப்பிட்ட ஒரு பிரச்னேயை எப்படிச் சமாளிப்பது என் பது பற்றிய கூட்டம் அது. 'சேர்மே'னுக விளங்கியவருக்குத் தனியான ஓர் ஆசனம், அவரது உயர் அந்தஸ்தை விளக்கும் வகை யில் போடப்பட்டிருந்தது!

விவாதம் தொடங்கியதும் 'சேர்மென்' ஒரு கருத்தை வெளியிட்டார். கனடாவி லிருந்து வந்த இவர், சேர்மெனுடைய நோக் கில் தாம் ஒரு கற்றுக்குட்டி என்பதை மறந்து சேர்மென் வெளியிட்ட கருத்து பழை யது என்றும், அதைக் காட்டிலும் நவீன முறையில் பிரச்னேயைச் சமாளிக்க எளிய வழி யுண்டு என்றும் கூறினுர்.

அதற்கு 'சேர்மென்' கூறிய பதில்: ''நீ இந்த ஆசனத்தை ஆக்கிரமிக்கும்போது அந்தக் கருத்தை நடைமுறைக்குக் கொண்டு வரலாம். இப்போதைக்கு நான் சொன்ன கருத்தையே பின்பற்றுவோம்!''

இதைக் கேட்டவுடனே இவர் என்ன செய் தார்? 'கால் கடிதாக' கொடுத்துவிட்டுக் கிளம்பிவிட்டார் கனடாவுக்கு!


இவரை யதேச்சையாக டொராண்டோ வில் நான் சந்திக்க நேர்ந்தது. ''அதோ பார்த்தீர்களா, அவர்தான் இன்று நான் பணியாற்றும் ஆராய்ச்சி நிலேயத்தின் தலே வர்; அவரிடம் நான் பேசுவதைக் கொஞ்சம் கவனியுங்கள்'' என்று என்னிடம் கூறிவிட்டுத் தலேவரை நோக்கி நடந்தார் இவர்.

''நேற்றிரவு தூங்கப் போகும்போது, யோசித்துக் கொண்டிருந்தேன். நாம் ஏன் இப்படிச் செய்து பார்க்கக் கூடாது?'' என்று தொடங்கி எனக்குப் புரியாத ஒரு விஞ்ஞான விஷயத்தைப் பற்றிப் பேசினுர்.

கவனமாகக் கேட்டுக் கொண்ட தலேவர், ''நீ சொல்வதில் தர்க்க ரீதியான நியாயம் இருக்கிறது. இதே கோட்டைப் பிடித்துக் கொண்டு தொடர்ந்து ஆராய்ச்சியை நீ நடத்தலாமே?'' என்ருர். ''அவ்வப்போது உன் முன்னேற்றம் பற்றி எனக்குத் தகவல் கொடுத்துக் கொண்டிரு'' எனக் கூறி முது கில் அன்புடன் தட்டிவிட்டு விடை பெற்ருர்.

ஃ ஃ ஃ

இன, நிற, மத, தேச வேறுபாடின்றி அறிஞர்களே எப்படித் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்துகிருர்கள் அமெரிக்கா





மாமி : முதல் பெண்டாட்டியை 'டிவைவர்ஸ்' பண்ணிட்டு இரண்டாம் பெண்டாட்டியை 'மார்ட்கேஜ்' பண்ணிண்டிருக்காளாம். இதுதான் அவா வீட்டிலே பெரிய 'பாபுலரா' இருக்காம்.

காமுப் பாட்டி : ஏண்டி! இவ்வளவு நன்னா இங்கிலீஷ் பேச எங்கேடி கத்துண்டே! எனக்கு இங்கிலீஷ் தப்பாக்கூட பேச வரல்லேயே!

வில்! பி.ஏ. அல்லது எம்.ஏ. படிக்கும் மாணவன் திறமைசாலியாக இருக்கிறான் என்று முதலாண்டிலேயே தெரிந்து விட்டால் போதும், ஒரு தொழிலகம் அவனது இரண்டாவது ஆண்டுப் படிப்புச் செலவை மேற்கொள்ளத் தயாராக இருக்கிறது. அந்தத் தொழிலகத்தில் அவன் வேலைக்குச் செல்ல வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏதும் கிடையாது. ஆயினும் நன்றி உணர்ச்சி காரணமாக அத்தொழிலகத்தில் குறிப்பிட்ட சில வருஷங்கள் பணியாற்றப் பலர் சம்மதிப்பார்கள். அப்போது அவர்களில் ஒருவன் ஆராய்ச்சியில் ஈடுபடுவதில் ஆர்வம் காட்டுவானேயாகில் உடனே அந்த ஆராய்ச்சியில் அவன் லயிக்கச் சம்பளத்துடன் விடுமுறை அளிக்கிறது நிறுவனம்.

உயர் படிப்பில் டாக்டர் பட்டம் பெற்ற இத்தனை பேர்கள் எங்கள் நிறுவனத்தில் பணியாற்றுகிறார்கள் என்று சொல்லிக் கொள்வதில் பல ஸ்தாபனங்கள் பெருமை அடைகின்றன. இது அவர்களுக்கு நல்ல விளம்பரமாக அமைந்து 'காண்டிராக்டு'களும் பெற்றுத் தருகிறது.

இங்கிலாந்தில் கிழமை தோறும் தேசிய தினசரி பத்திரிகைகளைப் பிரித்தால் முதல் பத்துப் பதினைந்து பக்கங்களில் வேலை வாய்ப்பு விளம்பரங்களைப் பார்க்கலாம். எல்லாம் குறிப்பிட்ட பல துறைகளில் ஆராய்ச்சி புரிந்து பட்டம் பெற்றுள்ளவர்களுக்கு உள்ள வேலை வாய்ப்புக்களைப் பற்றிய விளம்பரங்கள். இருகாணித் தயாரிப்பு முதல் இருதய நோய்ச் சிகிச்சை வரையில் இன்று அமெரிக்காவில் சகலத்துக்கும் 'ஸ்பெஷலிஸ்டு'கள் தேவை!

* * *

பிரிட்டனில் பத்திரிகையாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக 'தாம்ஸன் ஃபௌண்டேஷன்' என்று ஒரு நிறுவனம் உள்ளது. இதன் இன்றைய இயக்குநர் ரோலண்ட்ஸ் என்பவர். இவர் வெஸ்டர்ன் மெயில் என்ற பத்திரிகையில் உதவி ஆசிரியராகத் தமது உத்தியோக வாழ்க்கையைத் தொடங்கினார். பிறகு ஊர் வம்புப் பகுதியை எழுதும் வேலையை மேற்கொண்டார். ஒரு நாள் அவர் எதை எழுதுவது என்று தெரியாமல் தவிக்கையில் ஜன்னல் வழியே பார்த்தார். ஜன்னல்களைச் சிலர் சுத்தம் செய்துகொண்டிருந்தனர். உயரமான பல அடுக்கு மாடிக் கட்டிடங்களில் அங்கெல்லாம் 'விண்டோ கிளீனர்ஸ்' உண்டு. குறுகலான பலகையைக் கயிற்றில் ஊஞ்சல் போலத் தொங்க விட்டு அதில் அமர்ந்து அவர்கள் தங்கள் பணியைச் செய்து கொண்டிருந்தனர். கீழே அதள பாதாளம். கொஞ்சம் தவறினால் மரணம் தான். இதைப் பார்த்ததும் ரோலண்ட்ஸ் அன்றைய இதழுக்கு ''விண்டோ கிளீனர்''களின் வாழ்க்கையை வைத்துக் கொண்டே ஊர் வம்பு பண்ணி விட்டார்.


அவர் எழுதியதை அச்சகத்திலே கொண்டு போய்க் கொடுத்தான் ஆபீஸ் பையன்—பியூன். அவன் இவரது திறமையை எண்ணி வியந்தான். 'கோல்' என்ற பெயர் கொண்ட அவன் எல்லோரிடமும் இவரது திறமை பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான். ''பாருங்கள்! ஊர் வம்பு எழுத அந்தண்டை இந்தண்டை போகாமல் இருந்த இடத்திலிருந்தபடி அருமையாக எழுதிவிட்டார்!'' என்று பாராட்டிக் கொண்டிருந்தான்.

நாட்கள் சென்றன. கோல் ஓய்வு நேரத்தில் பல்கலைக் கழகத்துக்குச் சென்று படித்துப் பட்டம் பெற்றான். படிப் படியாக உத்தியோக உயர்வும் கிட்டியது. ஆபீஸ் பையனாக இருந்தவன் திடும்மென்று ஒரு நாள் அந்தக் காரியாலயத்தின் மானேஜிங் டைரக்டராக விளங்கினான். அப்போது பத்திரிகை ஆசிரியராக யாரை நியமித்தான் என்கிறீர்கள்? முன்பு தான் பாராட்டிப் புகழ்ந்த ஊர் வம்பு எழுத்தாளர் ரோலண்ட்ஸ் அவர்களைத்தான்!


இதற்குப் பல வருஷங்களுக்குப் பிறகு அவர் ஆசிரியர் பதவியிலிருந்து விலகி 'தாம்ஸன் பவுண்டேஷன்' இயக்குனராகப் பதவி ஏற்றார்.

பத்திரிகைத் துறையில் மட்டுமல்ல, விஞ்ஞானம், தொழில், வர்த்தகம் போன்ற எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் பிரிட்டன், அமெரிக்கா போன்ற மேல் நாடுகளில் திறமைக்கு மதிப்பு உண்டு; தட்டிக் கொடுப்போர் உண்டு; முட்டுக்கட்டை கிடையாது.

'உம், அவன் என்னத்தைக் கிழித்து விட்டான்' என்று கூறும் எவரையும் அங்கு காண முடியாது. அதனால்தான் அந்நாடுகள் வேகமாக முன்னேறுகின்றன.


கோமகள் எழுதும்
இனிக்கும் நினைவுகள்
புதிய நாவல்
கல்கி
புத்தாண்டு மலரில்
ஆரம்பமாகிறது!
விஜயா





- ☐ பட்ஜெட்டில் ராஷ்டிரபதி காரியாலயத்துக்கு ஒதுக்கப்படுவது ரூ. 7 லட்சம், அவரது ராணுவக் காரியதரிசி காரியாலயத்துக்கு ரூ. 26 லட்சம்.

- ☐ ஏராளமான ராணுவ அதிகாரிகளின் சம்பளத்தைப் பாதுகாப்பு இலாகா ஏற்கிறது. ஐந்நூறு தோட்டக்காரர்களும் பல எஞ்ஜினியர்களும் கொண்ட பட்டாளத்துக்கு ஆகும் செலவை சி.பி.டபிள்யூ. பார்த்துக் கொள்கிறது. வெளிநாட்டு விவகார மந்திராலயம் பொறுப்பில் விருந்துகள் நடைபெறும்.

- ☐ உலகிலுள்ள பெரிய அரண்மனைகளுள் ஒன்று இந்த மாளிகை. இதிலே 445 அறைகள் உள்ளன. இவற்றுள் 145ல் மத்திய அரசு அதிகாரிகள் உள்ளனர். 79 அறைகளே ஜனாதிபதி பரிவாரங்களின் காரியாலயம். 118 அறைகள் சாமான் கிடங்குகளாகவும் 26 அறைகள் சமையல் சாப்பாட்டுக்கும் பயன்படுகின்றன.

- ☐ குடும்பப் பாங்கான வசதி உள்ளவை 63 அறைகள். இவற்றிலே மூன்று பெரிய அறைகளே (சூட்) ராஷ்டிரபதியின் வாழ்விடம். 23 அறைகள் விருந்தினருக்கு ஒதுக்கப்பட்டவை ; மற்றும் பதினெட்டிலே வேலைக்காரர் குடியிருப்பு.

- ☐ ராஷ்டிரபதி பவன் எஸ்டேட்டில் ஏராளமான பங்களாக்கள் உள்ளனவாம். இவற்றுள் பலவும் இன்று அலுவலர் விடுதிகள்.

- ☐ இங்குள்ள நிரந்தர ஊழியர் ஓராயிரம் பேர்.

- ☐ பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் ராஷ்டிரபதி பவன் வரவேற்பு என்றால் படாடோபமாகப் பட்சணங்கள் பரிமாறப்படும். இன்றோ சிக்கனம், சிக்கனம்! வெளிநாட்டுத் தூதரானாலும் சரி, தட்டிலே உருளைக் கிழங்கு வறுவல், கடலை, கோப்பையிலே தேநீர், அவ்வளவே. பகல் சாப்பாடு இரவு விருந்து என்றால் மட்டும் கனிசமாக இருக்கும்.

- ☐ மது? உண்டு. வெளிநாட்டு விருந்தாளிகளுக்கு மட்டும். அதுவும் அளவோடு. ஆனால் ஒரு நிபந்தனை. அவரவர் அறைக்குள்ளேதான் அருந்த வேண்டும்.


- ☐ குடியரசு தினம், சுதந்திர தினம் என்றால் வரவேற்புக்கு ஆறாயிரம் பேருக்கு அழைப்பு உண்டு. நாளொன்றுக்கு 3000 பேர் விதம், ஒவ்வொரு விழாவையும் இரண்டு நாள் விருந்தாக '**நிரவி**'க் கொள்கிறார்கள்.

டைம்ஸ் ஆப் இந்தியா — *தகவல் :* த. சீனிவாசன்

நாய்க்கும் உண்டு அழகு நிலையம்

நாய்களை வளர்க்கும் விதமும்
பராமரிப்பும் தனிக் கலை.
நாய்களைப் பராமரிக்கும்
விதத்தைத்
தெரிந்து கொள்ளலாமா ?







''சிகை அலங்காரம் மனிதர்களுக்கு மட்டுந்தானா? இல்லை. நாய்களுக்கும் உண்டு. மேலை நாடுகளில் உள்ளதுபோல் இங்கு பம்பாயிலும் நாய்களுக்கென அலங்கார நிலையங்கள் உள்ளன. பெங்களூர், சிம்லா முதலிய இடங்களிலும் உள்ளன. ஆனால், இவைகளெல்லாம் தனிப்பட்டவர்களால், நடத்தப்பெறும் நிறுவனங்கள். சென்னை நகரில் இத்தகைய அழகு நிலையங்கள் ஏதும் இல்லாத குறையைப் போக்கவே எஸ். பி. ஸி. ஏ.யின் ஆதரவில் நாய்களுக்கு ஓர் அழகு நிலையம் அமைக்க முடிவு செய்தோம்'' எனக் கூறுகிறார் திரு எஸ். என். ராஜா, எம்.ஏ. — உதவி செயலாளர், எஸ்.பி.ஸி. ஏ., சென்னை.


''பாமரேனியன், லாப்ரடார் முதலிய இனத்தைச் சேர்ந்த நாய்களுக்கு உடலில் ரோமம் மிகுதியாகவும் விரைவாகவும் வளர்கிறது. ஸில்கி ஸிட்னி, ஃபாக்ஸ் டெர்ரியர் முதலிய வகை நாய்களுக்கு ரோமம் முகத்தையே மறைக்கும். ரோமம் அளவுக்கு மீறி வளர்ந்தால், நாய்களின் உடலில் உண்ணிகள் பெருகி அதன் விளைவாகக் காமாலை முதலிய நோய்கள் தோன்றும். உண்ணிகள் நாயின் உடலிலுள்ள இரத்தத்தை உறிஞ்சி விடுவதால் நாய்க்குச் சோகை பிடிக்கும். புற்று நோய் தோன்றவும் இதுவே காரணமாக அமைகிறது. நாய்களை அவ்வப்போது குளிப்பாட்டுவதனால் மட்டும் உண்ணிகளை அறவே அகற்றிவிட இயலாது. ரோமத்தை அவ்வப்போது வெட்டிவிட வேண்டும். கோடை காலமாக இருந்தால், ரோமம் மிகக் குறைவாக இருப்பது நல்லது. நாய் வளர்ப்பவர்கள் எல்லோருக்குமே இந்த உண்மைகள் தெரிந்திருக்க முடியாது. தெரிந்தவர்களுக்கும், முடி வெட்டுவதற்கு வசதியில்லை. அநுபவம் இல்லாதவர்களைக் கொண்டு இதை நிறைவேற்றுவதில் பயனில்லை. இந்தத் துறையில் பயிற்சி உள்ளவர்கள் இப்பணியைக் கலையழகுடன் செய்வார்கள். நாய் வளர்ப்பவர்களுக்கும் ஒரு பெரும் பிரச்னை நீங்குமல்லவா ?'' என்கிறார் திரு ராஜா.

''நாய்களுக்கு மயிர் வெட்டுவது மட்டுந்தானா இந்த அழகு நிலையத்தின் பணி?''

''இன்னும் எவ்வளவோ உள்ளனவே ? நாய்களின் கால்களில் வளரும் நகத்தைச் சீராக வெட்டி விடுவது, செவிகளைச் சுத்தம் செய்தல், குளிப்பாட்டுவது, பிரஷ் போட்டு உடலைச் சுத்தம் செய்வது, நாய்களின் உடல் நலம் பேணுவது பற்றிய பயனுள்ள குறிப்

புக்கள் ஆலோசனைகள் கூறுவது — இவைகளும் இந்த நிலையத்தின் சேவைகளாக இருக்கும். நகங்களை அவ்வப்போது வெட்டா விட்டால் நாய்களுக்கும் தொல்லை, நமக்கும் தொல்லைதான்! நாய்கள் நடக்கும் போது வலி ஏற்படாமலிருக்கவும், நம்மோடு விளையாடுகையில் அதன் நீண்ட நகங்கள் நம் உடலைச் சிராய்த்து விடாமலிருக்கவும் நகம் வெட்டுவது அவசியமாகிறது. வலியில்லாமல் நகத்தை வெட்ட ரூ. 40 விலையுள்ள ஒரு கருவி (ஜெர்மனியில் செய்தது)யை வரவழைத்திருக்கிறோம். நாய்களைக் குளிப்பாட்டியபிறகு, சோப்பு நுரை சிறிதளவு கூட அதன் உடலில் தங்காமல் துடைத்தெடுக்க வேண்டியது மிகவும் முக்கியம். குளிக்க உபயோகிக்கும் நீரும் அதிகச் சூடாகவோ குளிர்ச்சியாகவோ இருக்கக் கூடாது. சுண்ணாம்புச் சத்து மிகுதியாக உள்ள சோப்புகளை நாய்களுக்குப் பயன்படுத்தக் கூடாது. நாய்களை அன்றாடம் குளிப்பாட்ட வேண்டிய அவசியமில்லை. இப்படி எவ்வளவோ விதிமுறைகள் உள்ளன. இவையெல்லாம் நாய் வளர்ப்பவர்கள் எல்லோருக்குமே தெரியுமா?''

''இந்தச் சேவைகளுக்கு எவ்வளவு கட்டணம் வசூலிக்கத் திட்டமிட்டிருக்கிறீர்கள்?''



''நாய் வளர்ப்போர் ஆண்டுக்கு ரூ. 20 செலுத்தி இந்த அழகு நிலையத்தில் சந்தாதாரர்களாகச் சேர்ந்தால் இந்தச் சேவைகள் எல்லாம் பெறலாம். முதலில் உறுப்பினர்களுக்குக் கார்டுகள் வழங்கப் போகிறோம். மயிர் வெட்டுவது, செவிகளைச் சுத்தம் செய்வது முதலிய பணிகள் இன்ன இன்ன தேதிகளில் செய்யப்படும் என்று கார்டுகளில் குறிப்பிடப்பெறும். இது நாய்களின் இனத்துக்குத் தக்கபடி மாறுபடும். ஆண்டுக்கு ஆறுதடவைகள் மயிர் வெட்டுவது, நகம் வெட்டுவது; மாதம் ஒரு முறை உண்ணிகள் இருந்தால் அப்புறப்படுத்துவது; மாதம் இருமுறை குளிப்பாட்டுவது — இது பொதுவான அட்டவணை. மயிர் வெட்டுவது, அல்லது நகம் வெட்டுவது — ஏதாவது ஒரு சேவை மட்டும் போதுமென்றால் அதற்கேற்பக் குறைந்த கட்டணம் வசூலிப்போம். அது இன்னும் முடிவு செய்யப்படவில்லை.''

''இவ்வளவு குறைந்த செலவில் இவ்வளவு சேவைகளும் கிடைக்கக் கூடுமானால் நடுத்தர வர்க்கத்தினரும் நாய் வளர்க்கலாம் போல் இருக்கிறதே?'' என்றேன்.

அதற்குத் திரு ராஜா கூறினார்: ''சென்னையில் நல்ல உயர்ந்த ஜாதி நாய்கள் ஏறக்குறைய 2000 உள்ளன. இவைகளின் சொந்தக்காரர்களில் பாதிப் பேர்கள் இந்த நிலையத்தின் சந்தாதாரர்களானால் போதும், அதிலிருந்து கிடைக்கும் தொகையில் ஒரு பகுதியை விலங்குகளின் பராமரிப்புக்கும் அவற்றுக்குக் கொடுமை இழைப்பதைத் தடுப்பதற்கும் பயன்படுத்தலாம்.''

சென்னை வேப்பேரி ஹைரோட்டில் உள்ள எஸ்.பி.ஸி.ஏ.வின் ஆதரவில் நாய்கள் பராமரிப்பு நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. நாய் வளர்ப்போர் வெளியூர் செல்ல நேர்ந்தால், நாய்களை அவர்கள் திரும்பி வரும் வரையில் பராமரிக்கும் பொறுப்பை இந்த நிறுவனம் ஏற்றுக் கொள்கிறது. ஒரே சமயத்தில் பத்து நாய்கள் இங்கு தங்கியிருக்க வசதியுள்ளது. ஒரு கால்நடை மருத்துவரின் முழு நேரச் சேவையையும் இந்த நிறுவனம் பயன்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டுள்ளது. நாய் வளர்ப்பவர்களுக்கு யோகந்தான்!

— ரா. பா.



இடது பக்கம்: சிகை அலங்காரம் நடக்கிறது

இந்தப் பக்கம்: நகம் வெட்டுகிறார்



பொன்னிவனத்துப் பூங்குயில்



அத்தியாயம் 12

"பகைவனுக்கருள்வாய்"

விலையும் விஷமும் ஏறினல் இறங்காது. வரியும், நோயும் வந்தால் போகாது என்பார்கள். வாள் முனையில் ஏறிய நஞ்சின் வேகம் பிரதாபசிம்மரைத் தாக்கிக் கொண்டே வந்தது. அவர் குரல் கம்மியது. விழிகள் பஞ்சடைந்தன. குபீரென்று வியர்த்தது. கால்கள் தள்ளாடின. இதைக் கண்ட முனிவர், ''இளவரசே! என்னைப் பாவியாக்கி விடாதீர்கள்'' என்று கவலை தாங்காமல் அலறினர். அந்த நிலையிலும்கூட இளவரசரின் வீரம் குறையவில்லை. அவர் வலக்கை ஆள்காட்டி விரலால் மருந்து அலமாரியில் ஓர் இடத்தைக் காட்டி, ''சஞ்சீவினி'' என்று ஒரு மூலிகையின் பெயரை முணுமுணுத்தார்.

அவர் காட்டிய இடத்திலிருந்து சருகுபோல் காய்ந்திருந்த பச்சிலைகளை எடுத்தார் முனிவர். தொங்கிய சீட்டில் எழுதியிருப்பதை வேகமாகப் படித்தார். கொதிக்கும் வெந்நீரை ஒரு குவளையில் எடுத்து அதற்குள்ளே அந்தச் சருகுகளைக் கொட்டினர். என்ன ஆச்சரியம்! சருகு உயிர் பெற்றது. அடிக் தண்டுகளிலிருந்து வெந்நீருக்குள் வேகமாக வேர்கள் இறங்கின. தலைப் பாகத்தில் புதிய துளிர்கள் துளிர்த்தன. அப்பொழுது தான் தரையில் இருந்து வேருடன் பிடுங்கியது போல் பச்சைப் பசேல் என்று ஆகிவிட்டது அச்சருகு. ''பட்ட செடி துளிர்க்கிறது'' என்றார் முனிவர். பிரதாப சிம்மர் தம் வாயைத் திறந்தார். முனிவர் கொடுத்த அந்த மூலிகையைத் தின்றார் காலனை வென்றார். அடுத்த கணத்தில் கலகலவென்று சிரித்தார். ''சுவாமி! இது கோவைச் சித்தர் கண்டு பிடித்த மூலிகை. கொடிய விஷங்களை மாற்றும் வல்லமை உடையது. இரும்பைக்கூடத் தாக்கும். இந்த நஞ்சு உடலில் ஏறியும் இந்தப் பூசாரி இன்னும் உயிரோடு இருக்கிறான்

கொத்தமங்கலம் சுப்பு

என்பதுதான் ஆச்சரியம். இதிலிருந்து இந்த நஞ்சைக் காட்டிலும் கொடிய நஞ்சு ஒன்று இவன் உடலில் முன்பே ஏற்றப்பட்டிருக்க வேண்டும். அதனால் தான் என்னைத் தாக்கிய விஷம் அவனைக் கடுமையாகத் தாக்கவில்லை என்று ஊகிக்கிறேன்'' என்று உரைத்தார். முனிவரோ இளவரசர் பிழைத்து எழுந்ததற்காக எல்லாக் கோவில்களையும் இதயத்தில் வணங்கிக் கொண்டிருந்தார்.

''முப்பா நாடியை முனை வோர் காக்க'' என்று நம்முடைய கந்த சஷ்டி கவசம் கூறுகிறது. மருந்து என்ற அதிகாரத்தில் திருவள்ளுவரும் நாடிகள் மூன்றையும் வைத்துப் பாடியிருக்கிறார்.


''நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்!''

நம்முடைய முன்னோர்கள் மருந்து வகைகளை எந்த அளவுக்கு எளிமையாகக் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்குக் கொடுத்து வந்தார்கள். நாகரிக மனிதன் நன்னைத்துச் சுமக்கத் தெரிந்துகொண்டு விட்டான். மூன்றாக இருந்த நோய்களை அவன் முந்நூறாகப் பிரித்துக் கொண்டான். முன்பு பித்தம், வாதம், சிலேத்துமம் என்று மனிதனுடைய உடற்கூறுகள் எல்லாவற்றையும் கணக்கிட்டு மூன்று நாடிகளுக்குள்ளே அடக்கி அந்த மூன்றுக்கு மாத்திரம் மருந்துகளைக் கொடுத்து நோய்களைத் தீர்த்தார்கள். இன்றைக்கோ காது, மூக்கு, தொண்டை வைத்தியர் ஒருவர்; கண் வைத்தியர் ஒருவர்; நரம்புகளின் வைத்தியர் ஒருவர்; முட வைத்தியர் ஒருவர்! இனிமேல் மனிதனுடைய நரம்புகள் எல்லாவற்றையும் கணக்கெடுத்துப் பார்த்து, ஒவ்வொரு நரம்புக்கும் ஒவ்வொரு வைத்தியர் வந்துவிடுவார். வெள்ளைக்காரன் அவனுடைய மருந்துகளை விற்பதற்காக அவனுடைய வைத்திய முறைகளை இங்கு புகுத்தினான். அதன் பயனாக வைட்டமின் 'ஏ' மாத்திரை, 'பி' மாத்திரை என்று மாத்திரைகள் வர ஆரம்பித்தன. இந்த மாத்திரைகளை வாங்கி வாங்கி விழுங்கினோம். தலைவலி மாத்திரை ஜெர்மனியிலிருந்து வந்தது; மூக்கு வலி மாத்திரை அமெரிக்காவிலிருந்து வந்தது; தொண்டையில் தடவும் மருந்து சீமையிலிருந்து வந்தது. ஆனால் நோயோ உள்ளூரிலேயே வந்து கொண்டிருந்தது. இப்போது ஒரு மகிழ்ச்சிகரமான மாறுதல்; நமது பணம் வெளி நாடுகளுக்குப் போவதில்லை. ஆனால் ஒன்றுக்குப் பத்தாக விலை கொடுத்து உள்ளூரிலேயே மருந்துகளை வாங்குகிறோம். என்ன செய்வது! நமது ஆசைகளோ அதிகம். அன்றாடம் காய்ச்சி உலகம். நிம்மதியாக உட்கார்ந்தால் நெய் போட்டுக் கொள்ள முடியாது. உழைக்க உடல் வேண்டும். உழைப்பின் வேகத்துக்குத் தக்கபடி மருந்தும் வேகமாக வேலை செய்ய வேண்டும். நாட்டு மருந்துகள் நாள் பட்டுத்தான் வேலை செய்யும். அதனால் தான் நாகரிக மனிதன் நாகரிக மருந்தை நம்புகிறான்.

பிரதாப சிம்மரின் காலத்திலே இந்த நாட்டிலே மூன்று நாடிகளுக்குள்ளே தான் வைத்தியம் அடங்கியிருந்தது. மருந்து அலமாரியைத் திறந்தார் பிரதாப சிம்மர். கடவுள் கரும்பையும் படைக்கிறார், வேம்பையும் படைக்கிறார், பெண்ணையும் படைக்கிறார், பேயையும் படைக்கிறார். இதைப் போலவே பேய்ப் பீர்க்கு, பேய் முசுட்டை, பேய்ப்புடல், பேய்க்குமட்டி என்று அவர் படைத்த பல மூலிகைகள் நம் நாட்டில் உள்ளன. பேய்க்குமட்டி என்று சொன்னால் சாதாரண மக்கள் அதைப் பிடுங்கித் தின்பதில்லை. அவை நஞ்சு என்பதற்காகவே பேய் என்ற பெயரையும் சேர்த்து வைத்தார்கள். பிரதாப சிம்மர் இந்தப் பேய் மருந்துகளில் ஐந்து வகை இலைகளைப் பொடி செய்த பஞ்ச பாணம் என்ற பொடியை எடுத்தார். எடுத்து அந்தத் தூளை ஒரு தொட்டித் தண்ணீரில் போட்டு அந்தத் தொட்டியிலே பூசாரியின் உடம்பைச் சற்று நேரம் சாய்த்து வைத்தார். அதற்குப் பிறகு அவருக்கு என்னமோ தோன்றியது. தோளிலே நீலமாக வந்த இடத்திலே குபீரென்று தம் வாயை வைத்து உறிஞ்சினார்.



'' இளவரசே! இது என்ன இது?'' என்று முனிவர் தடுக்கப் போகும்போது பிரதாப சிம்மர் கையை அமர்த்தினார். இது இந்திய மக்களின் பண்பு. தம்மைக் கொல்ல வந்த பகைவனைக் காப்பாற்றலிலேயே முனைந்தார் பிரதாப சிம்மர். அந்த ரத்தத்தை உறிஞ்சி உமிழ்ந்து விட்டு அவர் வாயைக்



கொப்பளித்தார். சற்று நேரத்துக்கெல்லாம் அந்தப் பூசாரியின் உடலில் ஒரு சிறு அசைவு வந்தது. மூக்கில் விரலை வைத்துக்கொண்டே வியப்போடு பார்த்துக்கொண்டிருந்தார் பண்டித முனிவர். ''சுவாமி! இவன் பேசுகிறானா என்று பார்க்கலாம்'' என்றார் பிரதாப சிம்மர்.

''பிரதாப சிம்மரே! அவனைப் பிழைக்க வைத்து விட்டீர்கள்! இனி உங்கள் நண்பனை நான் விடுதலை செய்ய வேண்டாமா?'' என்று முனிவர் பிரதாப சிம்மருக்கு அதை நினைவு படுத்திய பிறகுதான் பிரதாப சிம்மருக்குத் தம் நண்பனின் நினைவே வந்தது.

''ஆம், சுவாமி! விடுதலை செய்து விடவேண்டும்!'' என்றார்.

அப்போது முனிவர் பிரதாப சிம்மரின் அருகில் வந்து நின்றார். அவருடைய வயது முதிர்ந்த உடல் இலேசாக ஆடியது.

''பிரதாப சிம்மா! என்னை மன்னித்துவிடு. நான் சர்க்கரையைக் காரணமின்றிக் கைது செய்யவில்லை. இவன் தோளில் பாய்ந்த இந்த விஷ அம்பு சர்க்கரையின் மீது எய்யப்பட்ட அம்பு. சர்க்கரையின் காலில் கல் தடுக்கவில்லை. கடவுளே தடுத்திருக்கிறார். அதனால்தான் அது இவனைத் தாக்கியது. சர்க்கரை வெளியே யிருந்தால் அவனுக்கு மேலும் ஆபத்து விளைவிப்பார்கள் என்பதற்காகவே அவனைக் கைது செய்தேன்'' என்று சொல்லிக்கொண்டே முனிவர் பிரதாப சிம்மரை இறுகத் தழுவிக் கொண்டார்.

இதற்குள் பூசாரியையே கவனித்துக் கொண்டிருந்த இளவரசர், ''சற்றுப் பொறுங்கள். அவன் ஏதோ முனகுகிறான்'' என்றார்.

ஆம்! தொட்டியில் கிடந்த பூசாரி ஏதோ முனகினான். இருவரும் ஆவலோடு கீழே உட்கார்ந்து கொண்டு, அவன் என்ன பேசுகிறான் என்பதைக் கேட்டார்கள்.

''யுவராஜ்கி மங்கலம் உண்டாகுக!'' என்று மெல்லக் கூறினான் பூசாரி.

பிரதாப சிம்மரின் முகத்தில் ஆனந்தம் பொங்கியது. அவன் மேலும் பேசினான். ''கிழவருக்கு உடல் நலமில்லை. நான் அவருடைய சீடன்'' என்று கூறவே, பிரதாப சிம்மர் திடுக்கிட்டார். அமைச்சரோ அவர் முகத்தைப் பார்த்தார்.

''சுவாமி! மனிதனைக் கிளியாக்கி விட்டார்கள். மூளைக்கு மூளையடித்து விட்டார்கள். சித்தஸ்தம்பனம் செய்யப் பட்டிருக்கிறான். இவனுக்கு இந்த வார்த்தைகளைத் தவிர வேறு வார்த்தைகள் எதுவுமே பேச வராது. ஆயினும் அதிலும் ஒரு நன்மை. இதற்காகக் கொடுத்த இந்த மருந்தினால்தான் அந்த நஞ்சு வேலை செய்யவில்லை. இவனை இப்பொழுதே மருங்கப்பள்ளத்தில் இருக்கும் நம்முடைய மருத்துவர்களிடம் அனுப்புங்கள். அங்கு அவர்களுடைய பாதுகாப்பில் இவன் இரகசியமாக இருக்கட்டும்'' என்று கேட்டுக் கொண்டார் இளவரசர். ஏதோ இன்னிசையைக் கேட்டு இருவரும் திரும்பினர்.

அத்தியாயம் 13


"வாளுக்குப் பிறந்த மகன்!"

"கௌசல்யா சுப்ர ஜா, ராமா'' என்னும் தேனில் குழைத்த தீங்கவிதையாகிய வானமளந்த வால்மீகியின் வாக்கு ஏழு வீணைகளில் இசைக்கப்பட்டது. இதைக் கேட்டவுடன், ''மன்னர் பிரான் வந்து விட்டார்'' என்றார் முனிவர்.

ஆம். துகோஜி மகாராஜாவின் அந்தப்புர வாசலில் ஏழு மங்கையர்கள் வீணைகளைக் கையில் ஏந்தித் திருப்பள்ளி எழுச்சியை இசைத்துக் கொண்டிருந்தார்கள். துயில் எழும்போதே காது குளிர இசையைக் கேட்க வேண்டும்; அதுவும் இன்னிசையாக இருக்கவேண்டும். அதிலும் ஸ்ருதி குறைவு, பிசிறு, அவலயம் இல்லாமல் ஏழு வீணைகளும் ஒன்றுபோல் இசைக்கத் துகோஜி மன்னர் ஏற்பாடு செய்திருந்தார். வீணை தரித்த மேனகைகள் மெல்லிய குரலில்

பூவிரி தாழை புதுமலர் வீச
காவிரி வந்தாள் கண் திறவாய்!
பொழுது புலர்ந்தது போன்ஸிறமானது
போசல மன்னனே கண் திறவாய்!

என்று பூபாள ராகத்தில் துளசி பூபாலனை அருந்துயில் எழுப்பினர். அந்தப்புரத்தின் உள்ளே தஞ்சை ஊதுவத்திகளின் மணம் கமழ்ந்தது. அம்பர் வில்லைகளும், அரகஜா வில்லைகளும் அகில் தழலில் முகில் போல் எழுந்து நறுமணம் பரப்பிக் கொண்டிருந்தன. அரசரின் மஞ்சத்துக்கு எதிரில் ஒரு சிறிய பளிங்குக் கல் மேடையில் அஞ்சனை மைந்தனின் தங்கத் திருவுருவச்



சகோதரன் இன்றி உயிர் வாழலாம்; ஆனால் நண்பன் இல்லாமல் உயிர் வாழ முடியாது.

— ஜெர்மானியப் பழமொழி

சிலை ஒன்றும் அதன் முன் புதுக் கறவை நெய் இட்ட பொன் விளக்கு ஒன்றும் இருந்தன. தீப ஒளியில் நறுநெய் மணம் கமழ்ந்தது. மகாராஜா மஞ்சத்தில் சயனித்துக் கொண்டிருந்தார். அன்னப் பறவை போல அமைக்கப்பட்டிருந்த அந்த மஞ்சம் வாழ்க்கைக் கடலில் நீந்தும் மனிதன் உடம்பில் தண்ணீர் ஒட்டாமல், பற்றில்லாமல் வாழவேண்டும் என்று பகர்வது போல் இருந்தது. ஒட்டாமல் வாழ யோகிகளாலும் முடிவதில்லையே! அரசனால் முடியுமா? இரவு வெகு நேரம் கழித்து வந்த மன்னர் முதல் கேள்வியாக, 'பிரதாபன் வந்துவிட்டானா?' என்றுதான் மனைவியிடம் கேட்டார். அரண்மனையில் நடந்த விபரீத நிகழ்ச்சிகளைக் கேட்டவுடன் அவருடைய உடல் நடுங்கியது. அரசனானாலும் ஆசையும், பாசமும் இருக்குமல்லவா? பிள்ளைகளுக்கு வந்த ஆபத்தை நீக்கியதற்காகச் சந்திர மௌளீஸ்வரனை வணங்கினார். 'பிரதாபன் எப்போது உள்ளே வருவான், எப்போது அவனைக் காணலாம்?' என்று துடித்தது தந்தையின் மனம். இவ்வாறு நிம்மதியற்ற நிலையில் எந்தத் தகப்பனுக்காவது உறக்கம் வருமா? உறங்கவில்லை! ஆனால் அரண்மனை வழக்கத்துக்குள் அகப்பட்டுக் கொண்டு உறங்குவது போல் பஞ்சணையில் படுத்திருந்தார்.

பள்ளி எழுச்சி பாட ஆரம்பித்தவுடனே அவரது பட்டமகிஷிகளாகிய அர்ஜுனபாய், ராஜகுமார்பாய், லட்சுமிபாய், மோஹினிபாய், மனுபாய் ஆகிய ஐவரும் கணவனது தாளைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டு வேறு வழியாக அந்தப்புரத்துக்குள் சென்று விட்டனர். ஆசை மனைவிகளாகிய நாயுடு வகுப்பு நங்கையர் ஐவரும் அவரது வாளைத் தொட்டு வணங்கிவிட்டுச் சென்றனர். சேர்ந்தாற்போல இருபது பாதச் சிலம்புகளின் பன்மணி சதங்கைகள் ஒலிக்கவே அரசரும் எழுந்து எதிரில் இருந்த சித்திர வேலைப்பாடு அமைந்த நிலைக் கண்ணாடியில் கண்ணை விழித்துத் தம்மைத் தாமே ஒருமுறை பார்த்துக் கொண்டார். ''உன்னையே நீ எண்ணிப் பாரு. பிறகு உலகத்தைப் பற்றி உன் எண்ணத்தைக் கூறு'' என்று அவர் மனம் ஓர் ஆன்ம ஞானப் பாடலை இசைத்தது. ஒரு பெரிய தங்கத் தாம்பாளத்தில் இரண்டு தங்கப் பேலாக்களில் காராம் பசுவின் பாலை வார்த்துப் பட்டமகிஷி அர்ஜுனபாய் அரசர் திருமுகத்தின் முன் காட்டினார்கள். பளிங்கில் தம்மைப் பார்த்த மன்னர் பாலில் தம் முகத்தைப் பார்த்தார். ''உள்ளத்தைப் பால்போல் வைப்பாய், உன் ஊரார் செயலுக்கு உன்னை நகைப்பாய்'' என்று தமக்கே அரச நீதியைக் கூறிக் கொண்டார். பாலைப் பார்த்தவுடன் பட்டமகிஷியின் முகத்தைப் பார்த்தார். பட்டமகிஷி அர்ஜுனதேவியார் அவர் திருவடிகளில் வணங்கி, அவரைக் கைலாகு கொடுத்து ஆஞ்சநேயரின் திருவுருவத்தின் அருகில் அழைத்து வரவே இருவரும் மாருதியை வணங்கினார்கள்.

அப்பொழுது பக்கத்திலேயே இருந்த பொன் மணியைப் பட்டமகிஷியார் ஒலிக்கவே, வயது முதிர்ந்த வேதவித்துக்களாகிய அந்தணர்கள் இருவர் சாம வேதத்தை ஓதிக் கொண்டே நற்சகுனமாக உள்ளே நுழைந்தனர்.

ஏழு வீணைகள் ஒலிக்கப்பட்டவுடன் தந்தையைக் காண வேண்டும் என்ற ஆவலில் மைந்தர் பிரதாப சிம்மர் அவசரமாக மருத்துவ மஹாலை விட்டுத் தந்தையின் அந்தப்புரத்தை நோக்கி வந்தார். ஒரு நாள் முழுவதும் தந்தையைக் காணாது ஏங்கிக் கொண்டிருந்த மனமல்லவா? அவர் வெகு வேகமாக வந்து கொண்டிருந்தபோதுதான் 'கண் திறவாய்' என்ற அரிய பாடலை ஏழு பெண்களும் இசைத்தனர். அப்பனுக்கும் பிள்ளைக்கும் இடையே கூட அரண்மனை வழக்கம் தடுப்பதைக் கண்டார்; நகைத்துக் கொண்டார். அந்த வீணையில் ஒரு நயமிருந்தது. பிரதாப சிம்மர் எண்ணினார்:

'வீணையே! உன்னை வணங்குகிறேன். நீயன்றோ இசையை அழியாமல் எங்களுக்கு அளித்த தெய்வம். இன்று இசை, கடல்போல் வளர்ந்திருப்பது உன் இரு கொங்கைக் குடங்களிலும் சுரந்த ஞானப் பாலைப் பருகியதாலன்றோ. எழுதா மறையாகச் செவி வழியே வளர்ந்த இசைக் கலையின் ஒவ்வொரு அபிவிருத்தியையும் உன்னைக் கொண்டுதானே மகான்கள் ஆக்கியிருக்கிறார்கள். நாரதர் உன்னாலன்றோ மூவுலகத்திலும் நினைத்த மாத்திரத்தில் செல்லும் சக்தியைப் பெற்றார்! கைலாயம், வைகுண்டம், சத்யலோகம் ஆகிய

திருச்சபைகளின் கதவுகளை யெல்லாம் அவருக்குத் திறந்து வைத்தவள், நீயன்றோ! கைலயங்கிரியைப் பந்தாடிய ராவணனின் பலம் உன் பலமன்றோ. வேத வேள்விகளில் உனக்குத்தானே முதலிடம் அளிக்கப்படுகிறது. காளிதாசர் உன்னை முதற்கண் வைத்துத் தானே ''மாணிக்க வீணாம் உபலா லயந்தீம்'' என்று அம்பிகையைப் பாடினார். வாணியின் வீணை கச்சபி, நாரதரின் வீணை மஹதி, தும்புரு வீணை கலாவதி, விஸ்வாவஸுவின் யாழ் பிருஹதி, சிவபெருமானின் வீணை பிநாகம் என்றெல்லாம் இலக்கியங்கள் கூறுகின்றனவே. அரசரை மகிழ்விக்க இந்த நங்கையர் வீணை வாசிக்கிறார்கள். அந்த சம்ஹார மூர்த்திக்கும் சந்தோஷத்தைத் தருபவள் நீயன்றோ!

''வேயுறு தோளி பங்கன்
விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி''

என்கிறார் சம்பந்தர். ஞானக்குழந்தை வீணையில் மயங்குகிறது. ''இன்னிசை வீணையர் யாழினர் ஓர்பால்'' என்கிறார் மணிவாசகப் பெருமான். வாசகம், வாசிப்பில் மயங்குகிறது. ''மாசில் வீணையும்'' என்கிறார் நாவுக்கரசர். நாவைக் காட்டிலும் வீணை நரம்பு இனியது என்பதை அது காட்டுகிறது. அந்த இனிமையை உணர்ந்துதானே குழந்தையின் மழலையில் யாழுக்கு இடம் கொடுத்தார் திருவள்ளுவர். இசைத் தெய்வமே! அத்தனை தெய்வங்களின் திருவுருவமும் நீ. வீணையின் தண்டு சிவபெருமான். தந்திகள் உமையம்மை. அடிச் சட்டம் திருமால். நாபி கலைமகள். பிருடை ஆதிசேஷன். ஜீவா சந்திரன். ஸ்வர மெட்டுக்கள் சூரியன் என்றனர் பெரியோர். நீ ஆலயங்களுக்கு ஆலயமாக விளங்குகிறாய். உன்னில் எழும்பும் நாதம் தெய்வங்கள் உரையாடும் தீங்குரல் அன்றோ.

இந்த நங்கையர்கள்தான் எவ்வளவு அருமையாக வாசிக்கின்றனர்! நம் தந்தையார் இசையில் வல்லவர். பல பாடுபட்டு அரிய வித்வான்களிடம் அதை முறையாகக் கற்றவர்கள். இசை இலக்கணம் உலகத்துக்குக் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்திலே, ''சங்கீத சாராம்ருதம்'' என்ற நூலை எழுதியவர்கள். இதற்காக அவர்கள் வட நாட்டிலிருந்து பல வித்வான்களை வரவழைத்து அவர்களிடம் இந்துஸ்தானி சங்கீதத்தை மகாதேவி பட்டினத்தில் முறையே பயின்றார்கள். கர்நாடகம், தேசியம் இரண்டுக்கும் இலக்கணம் வகுத்தார்கள். அப்படிப் பட்டவருக்கு முன் வாசிக்கின்றவர்கள் வீணையைச் சுமாராகவா வாசிப்பார்கள்? தங்கள் வித்தையைத் தங்கள் குருநாதருக்கு அர்ப்பணம் செய்கிறார்கள். அதனால்தான் இவ்வளவு இனிமை. ''அடேயப்பா! அவர் வீணை வாசித்தால், அதில் சிம்ம கர்ஜனை கேட்கும்'' என்று சிலர் வீணையைப் பற்றிப் புகழ்கிறார்கள்.

வீணையிலே மகோன்னதமான நாதத்தை உண்டாக்குவது அரிய வித்தைதான். ஆனால் வீணையிலே இனிமைதான் பிறர் விரும்புவது. வீணை பெரியவர்கள் தாங்கள் வீணையோடு பாடும்போது தங்கள் குரலைப் பெண் குரல் போல் அமைத்துக் கொண்டு, வீணைத் தந்தியின் குழைவுக் கேற்பப் பாடுகிறார்கள். வீணையும் குரலும் அப்படி இணைந்திருக்க வேண்டும். சங்கீத விற்பன்னர்கள் வீணையின் வம்சத்திலே வந்தவர்களாக இருப்பார்களேயானால் அவர்களது இசைக்கே தனி மதிப்பு. அதிலே கமகம் இருக்கும்.



குழந்தை: அம்மா! என் பொம்மையைப் பார்த்து இனிமேல் நான் 'கை வீசம்மா கை வீசு; கடைக்குப் போகலாம் கை வீசு' என்று மட்டும்தான் பாடுவேன். 'மிட்டாய் வாங்கலாம் கை வீசு' என்றெல்லாம் மீதியைப் பாடமாட்டேன். அப்பா கோபிக்கிறார்!

— ''ஜொக்கி.''

ஆலாபனை அளவுக்கு மீறிப் போகாமல் கணக்கோடு இருக்கும். கணக்கு மாத்திரமல்ல. கன நயங்களும் இருக்கும். எடுத்த எடுப்பில் அந்த ராகத்தின் ஜீவ களை முழுவதும் தெரிந்துவிடும். இதுதான் வைணிக பரம்பரையின் சங்கீதம்.

'நம் தந்தையார் வாய்ப்பாட்டில் வல்லவர் என்பது மட்டுமல்ல. வீணை வாசிப்பதிலும் மிகவும் வல்லவர். அரிய வீணைகள், நல்ல தம்பூராக்கள், தபேலா, மிருதங்கம் இவைகளைச் செய்யும் தொழிலில் உலகிலேயே தஞ்சை முதலிடம் வகிக்கிறது என்றால் அதிலே பெரும் பங்கு நம் தந்தையாருக்கல்லவா?' என்று எண்ணிப் பெருமிதம் அடைந்தார் பிரதாப சிம்மர்.

இதற்குள் பொன்மணி நாதம் முழங்கிடவே, ''நாம் உள்ளே செல்லலாம். தந்தையார் எழுந்து விட்டார்கள்'' என்பதைத் தெரிந்து கொண்டு இரண்டடி எடுத்து வைத்தார் பிரதாபசிம்மர்.

அதற்குள் இரட்டைப் பிராமணர்கள் அந்தப்புரத்துக்குள் நுழைந்தார்கள். சம்பிரதாயத்துக்குக் குறுக்கே நாம் போய் நின்றால் அது சரியல்ல. பள்ளி எழுச்சி முடியாதபோது பிள்ளையைப் பார்க்கலாமா என்ற சர்ச்சையை ஒரு பண்டிதர் கிளப்புவார். இதற்காக நாற்பது நாட்கள் சபை நடக்கும்.— அதனால் மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டார் பிரதாப சிம்மர். சற்று ஒதுப்புறமாக நின்றார். உள்ளே சென்ற வேதியர்கள் வெளியே வந்தனர். உள்ளே அரசருடைய திருவடிகளில் ஒரு முத்துப் பாதரட்சையைப் போட்டாள் ஒரு பணிப் பெண். அரசர் ஆவலுடன் பிரதாபசிம்மரைப் பார்ப்பதற்காக பாவாஜியின் மன்மத விலாச மாளிகைக்குப் புறப்பட்டார். அப்பொழுது அருமை மகனே உள்ளே வரவே, ''பிரதாப சிம்மா!'' என்று அவரைத் தம் இரு கைகளாலும் மார்புறத் தழுவிக் கொண்டார் மன்னர். அணைத்த கைகளை எடுத்த பின்பும், தந்தையின் இதயம் அவரிடம் வரவில்லை. அது மகனிடமே ஒட்டிக் கொண்டிருந்தது. மைந்தனை ஏற இறங்கப் பார்த்தார். அந்தப் பார்வை மகனுடைய வலிமையையும், வனப்பையும் தம் இரு கண்களாகிய தராசினால் எடை போடுவது போலிருந்தது.

பிரதாபசிம்மர் அடக்க ஒடுக்கமாகத் தந்தையையே பார்த்துக் கொண்டிருந்தார். ''உன் அன்னை என்ன சொல்லி அனுப்பினாள்?'' என்று கேட்டார் மகாராஜா.

மகன்முகத்தில் ஆருயிர்க்காதலியையே கண்டார் அவர். அன்னபூர்ணா தேவியின் மகன் ஆண்மையில் பூரணமாக நின்றார். இருப்பினும் தமக்கு ஏதேனும் சொல்லி அனுப்பி யிருக்கிறாளா என்று மகன் வாயால் கேட்பதற்குத் தந்தை ஆவல் கொண்டார். அதற்கு மகன் அளித்த விடை இதுதான்:

'''பிரதாபா! அரண்மனை அடவி. அங்கு அரக்கர் பகை அதிகம். உன்னையே நம்பாதே; இரவில் தூங்காதே. பகலில் விழிக்காதே. அரசரின் வீர வாளுக்குத்தான் நான் மாலையிட்டேன். அவரது வாளுக்குப் பிறந்த மகன் நீ. ஆதலால் அவர் கையில் மற்றொரு வாளாக விளங்க வேண்டும் நீ. ஆளாக எண்ணிக் கொள்ளாதே! உரிமையைக் கேளாதே! ஊழியத்தை மறக்காதே' என்றுதான் கூறினார்கள்.''

இதைக் கேட்ட அரசர் பெருமிதம் அடைந்தார். தம் மனைவியின் அறிவும், ஆற்றலும் அடக்கமும் மகன் முகத்தில் விளையாடியதில் மகிழ்ந்தார். அவள் சொல்லி யனுப்பியதை அரசர் புரிந்து கொள்ள நேரமாகவில்லை.

''மகனே! அன்னபூர்ணா தேவியின் வயிற்றில் நீ பிறக்கக் கொடுத்துவைத்ததே பெரும் பாக்கியம். ஆனால் எனக்கு மகனாகப் பிறந்ததில் உனக்கு இன்னல்கள்தான் அதிகம். இல்லையேல் உன் மேல் பாம்பை ஏவியிருப்பார்களா?'' என்றபோது அவர் மனத்தில் அடக்க முடியாத கவலையையும் அதனால் அவர் குரல் கம்முவதையும் கண்டார் இளவரசர். (தொடரும்)



சைக்கிள் பிறந்த கதை!

150 ஆண்டுகளுக்கு முன்பு கார்ல் பிரடெரிக் டிராயிஸ் என்ற ஜெர்மானியர் முதன் முதலாகச் சைக்கிளை உருவாக்கினார். இரு சக்கரங்களை ஒரு மரப் பலகையினால் இணைத்து, கால்களினால் தள்ளிச் செல்லுவதின் மூலம் விரைவாகச் செல்ல முடியும் என இவர் காட்டினார். இந்த வாகனம் மேலும் சீர்திருத்தப்பட்டு, சைக்கிள் பிறந்தது!

(யு. பி. ஐ.)



மனிதர்கள் இரும்புப் பொருள் எதையாவது தவறி விழுங்கிவிட்டால் அதைக் காந்தத்தின் உதவியால் வெளியில் எடுத்துவிடுகின்றனர் அமெரிக்காவில். இரும்பை விழுங்கியவரை எக்ஸ்ரே கருவியின் முன் படுக்க வைத்து, இரும்பு எங்கிருக்கிறது என்று எக்ஸ்ரே திரையில்

இரும்பை விழுங்கிய இன்னல் நீங்கும்

பார்த்துக் கொண்டே மிகச் சக்தியுள்ள காந்தத்தை அதற்கு நேரே உடலின் மேல் பகுதியில் வைத்து, பிறகு காந்தத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக நகர்த்துவதன் மூலம் இரும்பையும் நகர்த்தி வெளியே கொண்டு வந்து விடுகின்றனர்!

தகவல்: ச. ஸ்ரீதரன்.
ஆதாரம்: 'வீக் எண்ட்.'

இந்த அதிசயப் பனைமரம் சென்னையில் அழகப்பச் செட்டியார் தொழில் நுணுக்கக் கல்லூரியின் விடுதியை ஒட்டி வளர்ந்துள்ளது.

—மு. இரவீந்திரன்.



ஓநாய்க் கோட்டை
12
கதை: வாண்டுமாமா
சித்திரம்: ஜெயா
பிளந்த வாயோடு ஆவேசமுடன் மேலே பாய்ந்த ஓநாயின் பற்கள் ஆனந்தனின் குரல் வளையில் பதியுமுன்பு, காற்றிலே 'விர்' என்ற ஓசையுடன் பளபளக்கும் ஆயுதம் ஒன்று பலிபீடத்தை நோக்கிப் பறந்து வந்தது.
பந்தாகச் சுருண்டு தரையில் உருண்டது ஓநாய். ஊளையிட்டபடியே.
ஆனந்தா நம்மைக் கொல்ல வந்த கொடிய ஓநாய் இறந்து விட்டது. அதன் குரல் வளையிலே ஒரு குத்துவாள்.
ஆண்டவன் தான் காப்பாற்றினார்... அதோ குத்துவாளை வீசியது யார்?
இன்னொரு குத்துவாள் மின்னியது
அந்தோ இன்னொரு குத்துவாள்... நம்மீதா?
பாய்ந்து வந்த வாள் பலிபீடத்தின் கருங்கல்லில் பட்டுக் கணீர் ஒலி எழுப்புகிறது. அதே சமயத்தில் இவர்களைக் கட்டியிருந்த கயிற்றை-யும் துண்டிக்கிறது.
என் கட்டுக்கள் தளர்ந்தன கந்தா. நம் நண்பர் யாரோதான் காப்பாற்றி இருக்க வேண்டும்.
இந்தக் கொடியவர்கள் வாழும் பகுதியில் நமக்கு நண்பர்களா? யாராக இருக்கும்?
ஆனந்தன் கந்தனின் கட்டுக்களையும் அவிழ்த்து விடுவிக்க இருவரும் வெளியே ஓடி வந்த போது..
அதோ அதோ போகிறதே அந்த உருவம்தான் நமக்கு விடுதலை வழங்கியவனாக இருக்க வேண்டும்
நாம் அவனை நிறுத்தி விசாரிக்க வேண்டும். பாம்பின் வாயிலிருந்து நம்மை மீட்க கட்டாரியை வீசியவனும் இவனாகத் தானிருக்குமோ?


ஓடிய உருவத்தை அவர்களால் பிடிக்க முடியவில்லை.
கந்தா... நம்மைக் காப்பாற்றிய அவனைப் பின் தொடர்ந்து இனிப் பயனில்லை. வா, போகலாம்.
மரணத்தின் வாசலிலிருந்து நம்மைக் காப்பாற்றிய அவன் தன்னைக் காட்டிக் கொள்ள விரும்பவில்லை. அவன் யாராக இருக்கும்?
யாராக இருந்தால் என்ன, நல்லவர்களுக்கு அழிவு தொல்லாமல் செய்வதும் போவதும்தான்!
ஆனந்தா, பயங்கரங்கள் நிறைந்த இந்த இடத்தை விட்டு நாம் உடனே கிளம்பவேண்டும்.
கிளம்பத்தான் வேண்டும். அந்தக் கொடியவர்கள் நம் குதிரைகளைக் கொண்டு போய் விட்டார்கள். ஆகவே இனிக் கால் நடைதான்.
கந்தா, இந்தப் பயங்கரமான பிரதேசத்தில் எத்தனை அபாயங்கள் இருந்தாலும் நான் தொடர்ந்து என் பிரயாணத்தை மேற்கொள்ளத்தான் போகிறேன். இந்நாய் மனிதர்களை ஒழிக்காமல், என் மனைவியைச் சிறை மீட்காமல் நான் திரும்பிப் போவதில்லை. உன்னையும் தொல்லைகளுக்கு உள்ளாக்க விருப்பமில்லை எனக்கு. ஆகவே...
ஆனந்தா, என்ன வார்த்தை சொல்லிவிட்டாய்? அதுவும் யாரைப் பார்த்து? இந்தக் கானகம் என் வீடு. இங்கு வந்துள்ள நீ என் விருந்தாளி. உன் வாழ்வு என் வாழ்வு. இனி இப்படியெல்லாம் பேசி என் மனத்தைப் புண்படுத்தாதே.
அதோ தூரத்தில் ஒளியும் புகையும் தெரிகின்றன. ஒருவேளை அங்கு மனித சஞ்சாரமிருக்கலாம்.
மனித சஞ்சாரமா அல்லது சம்ஹாரமா? தூரத்தே தெரியும் அந்தப் புகை மண்டலம் நொடிக்கு நொடி பெருகி எழுந்து சுழன்று பெருகுவதைக் காணும் போது அது அழிவின் ஆரவாரம் என்றே எண்ணுகிறேன்
சுருண்டெழும் புகையைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே ஆனந்தனின் மனதில் பயம் உருவாகிக் கொண்டிருந்தது.
தொடரும்....



முதலடிக்கு மறு அடி!


சிரி-வாசன்

புகழ்பெற்ற கவிதையின் முதலடி கீழேயிருக்கிறது. அடுத்த அடி தெரியவில்லையா? மறந்து போச்சா? கவலைப் படாதீர்கள்; மற்றவருக்கும் அப்படியே. அதனால் என்ன? மற்ற அடிகளை நாமே இட்டு நிரப்பிக் கொண்டால் போச்சு! இங்கே தரப்பட்ட 'மறு' அடிகள் பிடிக்காவிட்டால் நீங்களே வேறு எழுதிக் கொள்ளலாம்! ★



பாரதியார் :

பச்சைக் குழந்தையடி - கண்ணில்
பாவையடி சந்திரசேகர்
எச்சரிக்கை செய்து விட்டார்
இனி பெண்களுக்கு 'ஹாப்'பு
என்றார்!



ஔவையார் :

ஒரு நாள் உணவை
ஒழிஎன்றால் ஒழியாய்
இரு நாள் உபவாசம்
வேண்டாய் — இருந்தாலும்
சங்கச் செயலாளர்
பதவிக்குத் தகுதி என
எங்ஙனம் உரைப்பாய் இனி?



உலக நீதி :

மனம்போன போக்கெல்லாம்
போக வேண்டாம்
தினம்ஒன்றாய்ப் படம்பார்த்தால்
போதும் என்பேன்



கம்பன் :

மண் சுழன்றது,
மால்வரை சுழன்றது
எண்சுழன்றது,
கண்இரவெலாம் விழித்தலால்



தொண்டரடிப் பொடி :

குடதிசை முடியை வைத்து
குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பார்த்திருந்தால்
சீனரி நன்றாயில்லை.



கம்பன் :

நம்பியைக் காண நங்கைக்கு
ஆயிரம் நயனம் வேண்டும்
தம்பியைப் பார்த்துக்கொள்ள
ஆயிரம் கைகள் போதா



வெள்ளித் திரை வைபவம்

சிரிப்பாய்ச் சிரிக்கிற காட்சி!

காந்தன்

"ஹா ஹ ஹ ஹா" என்று வெங்கு பெரிதாகச் சிரித்தான். இம்மாதிரியே மூன்று முறை வாய் விட்டுச் சிரித்தான்; ஸ்டுடியோவே எதிரொலியிட்டது.

"என்னப்பா, வெங்கு, நீயே சிரித்து ஆனந்தப்பட்டுக் கொள்கிறாய்? என்ன சமாசாரம்?" கேட்டுக் கொண்டே வந்தார் டைரக்டர்.

"ஒன்றும் இல்லே, டைரக்டர் ஸார்! நம்ம படத்திலே புகுத்த வேண்டிய ஒரு சீனைப் பற்றி ரொம்ப நேரமாக யோசிச்சுக்கிட்டிருந்தேன். அந்த யோசனையின் பலனாக எனக்கே சிரிப்புத் தாங்கவில்லை. பொங்கி வரும் சிரிப்பைத் தாங்க முடியாமல் பெரிதாகச் சிரித்து விட்டேன்!" என்றான் வெங்கு.

"அதென்னப்பா, அப்படி ஒரேயடியாய்ச் சிரிப்பாய்ச் சிரிக்கிற சீன்!" என்று கேட்டார் டைரக்டர்.

"கரெக்ட் ஸார்! சிரிப்பு சீன்தான். ஹாஸ்யக் காட்சியைப் பற்றித்தான் யோசிச்சுக்கிட்டிருந்தேன்."

"உனக்கே சிரிப்புத் தாங்க முடியவில்லையா?"

"ஆமாம், ஸார்! பழைய காலத்து நாடகங்களிலேயிருந்து ஹாஸ்யத்துக்கு என்ன பண்ணிக் கொண்டு வந்திருக்காங்கன்னு பார்த்தால் எனக்குச் சிரிப்புத் தாங்க முடியாமல் வந்து விட்டது. 'பயங்கன்று இளம் அறியாது'ன்னு புரிகிறதா ஸார்?"

"பயங்கன்று இளமறியாதா? அப்படியென்றால்?" என்று கேட்டுவிட்டு டைரக்டர் விழித்தார்.

"புரியவில்லையா? இளங்கன்று பயம் அறியாது என்பதைத்தான் ஹாஸ்யமாக அப்படி மாற்றிச் சொன்னேன். இப்பொழுது சிரிப்பு வருகிறதா?"

"ஓகோ, அப்படியா? சிரிக்கிறதுக்கு இதிலே என்னப்பா இருக்கிறது?"

"இது ஆதிகாலத்து நாடக மேடை ஹாஸ்யம் ஸார்! இதைக் கேட்டு எத்தனையோ பேர் விழுந்து விழுந்து சிரித்து ரசித்திருக்கிறார்கள். இது மாத்திரமல்ல. ஸாமர், ரக்ஷ்மணர், சரதர் பத்ருக்னர் — என்று ராம லக்ஷ்மணர்களின் பெயர்களை மாற்றிச் சொல்லி ஹாஸ்யம் பண்ணுவார்கள். இதுவும் அந்தக் காலத்து ஹாஸ்யம்தான்!"

இதைக் கேட்டுக் கொண்டே வந்த படாதிபதி, "கரெக்ட், வெங்கு. எனக்குக்கூட அந்த நாட்கள் நல்லா ஞாபகம் இருக்கு! ஆனால் இப்போதெல்லாம் நகைச் சுவைக் காட்சியில் எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறோம்! நினைக்கவே ஆச்சரியமா யிருக்கு!" என்றார்.



"என்ன ஸார் பிரமாத முன்னேற்றம் கண்டுப்புட்டோம்?" என்றான் வெங்கு. "அந்த நாட்களிலே ஹாஸ்ய ரஸம்னு கோமாளித்தனம் பண்றதுன்னுதான் நினைச்சுக்கிட்டிருந்தாங்க. சர்க்கஸ் காட்சியிலே ஒரு பபூன் வந்து மற்ற ஆட்டக்காரர்கள் காட்டிவிட்டுப் போன வித்தைகளையே தத்துப் பித்துன்னு காட்டிவிட்டுப் 'பொதேர்

பொதேர்'னு விழுவான். அதைப் பார்த்து விட்டு ஜனங்கள் அடக்க முடியாமல் சிரிப்பாங்க. ஒருவன் கீழே விழுந்தால் அதைப் பார்த்துச் சிரிப்பதற்கு நம்ம ஊர்க்காரன்களுக்குச் சொல்லியா தரணும்?

"அப்புறம் பழைய படங்களிலே ஒரு சம்பிரதாயம் உண்டு. அதாவது கதாநாயகனைத் தொடர்ந்து அவன் செய்கிறதையெல்லாம் காமெடியனும் தத்துப்பித்துன்னு செய்து சிரிக்க வைப்பான். உதாரணமாக ஸ்ரீராமன் சிவதநுவை முறித்தால், அடுத்த காட்சியில் காமெடியன் பழைய மூங்கில் கதவை உதைத்து முறித்து விட்டுக் காதலியின் கரம் பற்றுவான். பட்டினத்தார் படத்தில், அவருக்கு நேர் மாறாகப் பணத்தாசை பிடித்தவனாகக் காமெடியன் தோன்றி அவர் உயர்வாக நடிக்கும் ஒவ்வொரு காட்சியின் அடுத்த காட்சியிலும் ரசாபாஸமாக என்னத்தையாவது செய்து வைப்பான். இப்படித்தான் நம்ம நாட்டுப் படங்களில் ஹாஸ்யம் இடம் பெற்று வந்திருக்கிறது."

"வாஸ்தவம் வெங்கு! ஆனால் இப்போதெல்லாம் அந்த மாதிரியா படம் எடுக்கிறார்கள்?"

"பின்னே எப்படி எடுக்கிறோம்? கதா-நாயகி லதாவுக்கு ஒரு தோழி. அவள் பெயர் சிங்காரி. அதே மாதிரி கதாநாயகனுக்கு ஒரு தோழன். அவன் பெயர் மன்மதன். கதாநாயகனும் கதாநாயகியும் சந்தித்துக் காதல் புரியும் காட்சிக்கு அடுத்த காட்சிகளில் மன்மதனும் சிங்காரியும் சந்தித்துக் கொள்வார்கள்; ஆடிப் பாடி மகிழ்வார்கள். கதாநாயகன் வில்லனின் முரட்டு ஆட்களோடு சண்டையிட்டு வெற்றி கொண்டால் காமெடியன் ஓர் அப்பாவி ஆசாமியைப் பிடித்து, மிரட்டி உருட்டி, விரட்டிவிட்டுக் கூத்தடிப்பான். கதாநாயகனைப் பற்றிய காட்சிகளை எழுதும்போதே சிறிது மாற்றி அசடு வழியும் காட்சிகளைக் காமெடியனுக்காகத் தயாரித்து விட்டால் ஹாஸ்யத்தைப் பற்றிய கவலை தீர்ந்தது."

டைரக்டர் கூறினார்: "நீ இதையெல்லாம் ரொம்ப நன்றாய் ஸ்டடி பண்ணி வைத்திருக்கிறாய். நம்ம படத்திலே நிச்சயமா நல்ல மாறுதல்களைச் செய்து விடுவோம்! ஹாஸ்யக் காட்சியென்று தனியாகச் சேர்க்க வேண்டாம். முக்கியமான கதாபாத்திரங்களே ஹாஸ்யமாகப் பேசி, நடித்தால் போதாதா?"

"ஒண்டர்ஃபுல், பிரமாதம்!" என்றார் படாதிபதி.

"எது? நீங்க ருசிச்சு உறிஞ்சினீங்களே இப்போ, அந்த ஆப்பிள் ஜூஸா?" என்று கேட்டான் வெங்கு.

"ஆப்பிள் ஜூஸ் நல்லாத்தான் இருக்கு. ஆனால் நான் டைரக்டர் கூறிய புதுமையான கருத்தை வரவேற்றுத்தான் பிரமாதம் என்றேன். அப்படியும்தான் செய்து பார்ப்போமே ஒரு முறை?" என்றார் படாதிபதி.

"செய்து பாருங்க! நாளைக்கே உங்க ரெண்டு பேர் வீட்டு வாசலிலேயும் ஆறுபேர் ஆணி அடிச்ச மாதிரி வந்து உக்காந்துக்கிடுவாங்க. உண்ணு விரதம்னு சொல்லிக்கிட்டு ஒழிகக் கூச்சலும் போடுவாங்க!"



"டேய்! உங்கம்மாவுக்கு ரயில் 'மிஸ்'ஸாகி விட்டதாம் நாளைக்கு அதே 'டைம்'முக்குக் கிளம்பி வராளாம். தந்தி வந்திருக்கு!"
"ஐயையோ!"
"ஏண்டா?"
"அதே நேரத்துக்குக் கிளம்பினால் அந்த ரயிலும் 'மிஸ்' ஆகி விடுமேப்பா!"

"நீ என்ன சொல்றே வெங்கு?"

"ஆமா, காமெடியைத் துண்டா நிக்கிற மாதிரி தனியா வைக்காமே கதைப் போக்கோடேயே இணைச்சுட்டா அப்புறம் காமெடியன்னு சொல்லிக்கிட்டு ஆறு பேர் வளைய வந்துக்கிட்டிருக்காங்களே அவங்க கதி என்ன ஆகிறது? சங்கம் அமைச்சுக்கிட்டு உரிமைக்குப் போராட மாட்டாங்களா?"

படாதிபதியும் டைரக்டரும் சிரித்தார்கள்.

"சிரிக்கிற விஷயமில்லே ஸார். இது சீரியஸ் மேட்டர்" என்றான் வெங்கு. "சம்பாஷணையிலே எல்லாம் ஹாஸ்யத்தைப் புகுத்தினால் நம்ம ஊர் ஜனங்களுக்குச் சரிப்பட்டு வராது. அவர்களுக்குப் பழக்கமாகி விட்ட காமெடியன்களைப் போட்டுக் கூத்தடித்தால்தான் ரசிப்பார்கள். செவிடனோடு ஒருவன் பேசுவான். அவன் கேட்கும் கேள்விகளுக்குச் செவிடன் சம்பந்தம் இல்லாமல் எதையாவது உளறுவான். அது ஹாஸ்யம். இன்னும் மனைவிக்கு அடங்கிய கணவன், பள்ளிக்கூட உபாத்தியாயர்கள், வைதிகப் பிராமணர்கள் இவர்களை வைத்துக் கொண்டு நிறைய நிறைய ஹாஸ்யங்களைத் தயார் பண்ணலாம். இவையெல்லாம் நமது திரை உலகிலே சிரஞ்சீவி ஹாஸ்யங்கள்!"

"இத்தனை சிரமப்பட்டும் கடைசியில் ஜனங்கள் சிரிக்காமல் போனால்?..." என்று சந்தேகம் கிளப்பினார் டைரக்டர்.

"அந்த மாதிரி ரசிகர்களைப் பழி வாங்கத்தான் நாடகங்களிலும், சினிமாக்களிலும் வருகிற காமெடியன்கள் தங்கள் ஹாஸ்யங்களுக்குத் தாங்களே வாய் விட்டுச் சிரித்து விடுகிறார்களே!" என்றான் வெங்கு.

இப்பொழுது படாதிபதியும், டைரக்டரும் 'ஹா ஹா ஹா' என்று வாய் விட்டுச் சிரித்தார்கள்.

மதுரை ரயில்வே ஸ்டேஷனிலிருந்து 'திருநெல்வேலி எக்ஸ்பிரஸ்' புறப்பட இன்னும் ஒரு சில நிமிடங்களே இருந்தன. மூன்றாம் வகுப்புப் பெட்டியின் ஓர் ஓரத்தில் வேலப்பன் உட்கார்ந்திருந்தான். பக்கத்தில் அமர்ந்திருந்த கண்ணனைத் திரும்பிப் பார்க்கவே அவனுக்குப் பிடிக்கவில்லை.

வேலப்பனுக்கு இது முற்றிலும் புதிய அனுபவம்.

'குழந்தைத் திருட்டு' அவனுக்கு ஆகி வந்த கலைதான். ஆனால் இந்தக் கண்ணன் இருக்கிறானே.....! அவன் என்ன குழந்தைதானா... அல்லது...?'

வேலப்பன் வெறுப்புடன்மெதுவாகத் திரும்பி, மூலையில் ஒடுங்கி அமர்ந்திருந்த அந்த நான்கு வயதுக் குழந்தையைப் பார்த்தான். களையான முகம்....... சுருண்ட கருங் கூந்தல். அந்தக் கண்கள்...!



வேலப்பன் சட்டென்று தன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

எவ்வளவோ திருடர்கள், கொலைகாரர்கள், போலீஸ்காரர்கள் கண்களை வேலப்பன் தைரியமாக உற்றுப் பார்த்திருக்கிறான். ஆனால் இந்தக் கண்ணனின் கண்களை அவனால் ஒரு விநாடி கூடப் பார்க்க முடியாததற்குக் காரணம் என்ன?

இதுதான் முன்தின மாலையிலிருந்து அவன் மனத்தை உறுத்தி எரிச்சலூட்டி வந்தது.

இந்தக் கண்ணனைக் கடத்திச் செல்ல, அவன் ஒரு மாதமாகத் திட்டமிட்டு, எவ்வளவு திறமையாக அதைச் செயலாற்றியிருக்கிறான்! அந்தப் பெருமிதத்தை எண்ணி எண்ணிச் சுவைக்க முடியாமல், மனத்தில் தோன்றும் உறுத்தலுக்கு, கண்ணனின் நடவடிக்கைதான் காரணம். இப்படி எண்ணும் போது. அந்தக் குழந்தையை அப்படியே கழுத்தை நெரித்துக் கொன்றுவிடலாமா என்றுகூட ஒவ்வொரு சமயம் வேலப்பன் மனம் எண்ணமிட்டது.

வேலப்பன் இந்தத் தொழிலில் இன்றோ நேற்றோ ஈடுபட்டவனல்ல. இத்துடன் பத்து வருடங்களாக, சுமார் ஐம்பது குழந்தைகளையாவது கடத்தியிருப்பான். பச்சைக் குழந்தையிலிருந்து பத்து வயதுப் பாலகன்வரை பலதரப்பட்டவர்கள், பலவித நிலையில் பல இடங்களிலிருந்து கடத்திக் கொண்டு வந்திருக்கிறான். இதனால் முதலாளியின் பாராட்டுதலுக்கும் நம்பிக்கைக்கும் உகந்தவனாக இருக்கிறான்.

திருநெல்வேலி கைலாசபுரத்தில் எட்டு வீடுகளுக்கும், மதராஸில் நான்கு ஜவுளிக் கடைகளுக்கும், பம்பாயில் இரண்டு தியேட்டர்களுக்கும், தில்லியில் பிரபல இரு ஹோட்டல்களுக்கும் சொந்தக்காரர்தான் வேலப்பனின் முதலாளி என்று சொன்னால், கேட்டவர்கள் சிரிப்பார்கள்.

அவ்வளவு பெரிய பிரமுகர் வேலப்பனின் முதலாளி! மிகவும் நம்பகமான ஐம்பது ஆட்கள் தேசத்தின் பல பாகங்களிலும் அவருக்காக இந்த வேலையைச் செய்து வருகிறார்கள்.

குழந்தைகளின் அழகு அந்தஸ்துக் கேற்ப, அது காதும் காதும் வைத்தாற்போல் விற்கப்பட்டு, இடம் மாறுவது யாருக்கும் தெரியாது.

இதோ இந்தக் கண்ணன், இரண்டு நாட்களில் உலகத்தில் ஏதாவது ஒரு மூலையில் ஏதாவது ஓர் ஊருக்கு மாற்றப்பட்டு விடுவான்.

முதலாளியின் பங்களாவில் அவருடைய அக்கா பேரன், மாமன் மகள், சித்தப்பா பிள்ளை என்று ஏதாவது உறவில், அடிக்கடி குழந்தைகள் காணப்படும்.

ஒருநாள் விமானத்தில் அழகாக முதலாளியுடன் பறந்து செல்லும். பிறகு எந்த ஊரில் எவ்விதம் விதி அவற்றைத் தள்ளிற்றோ, அது ஈசனுக்கும் முதலாளிக்கும் மட்டுமே தெரியும்!

நிறையக் குழந்தைகள் வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுவது கூட வேலப்பனுக்குத் தெரியும். வேலப்பன் இந்த விஷயங்கள் ஒன்றையும் கூர்ந்து கவனிப்பதில்லை. அவன் தன் வேலையை ஒழுங்காகச் செய்தான். முதலாளி கூலியை ஒழுங்காகக் கொடுத்தார். அவனுக்கு அது போதும்! வேலப்பன் மனத்தில் ஈவு, இரக்கம், தயை, தாட்சண்யம் என்ற குணங்களுக்குச் சிறிதும் இடமில்லை.

பல குழந்தைகள் இவன் அதட்டலுக்கும், மிரட்டலுக்கும் பணிந்து விடும். மற்றவை அடிக்கு அடங்கி விடும். அபூர்வமாகச் சில குழந்தைகளுக்கு மயக்க மருந்து புகட்டி அவர்களை உணர்விழக்கச் செய்து கடத்துவதும் உண்டு. ஆனால் இந்தக் கண்ணன்? இவன் பிரச்னை இந்த உபாயங்களில் அடங்காத பிரச்னை!

முந்தின மாலை, சென்னைக் கடற்கரையிலிருந்து கண்ணனைத் தூக்கி வந்ததிலிருந்து இதுவரை கண்ணன் அழாதது மட்டுமல்ல, ஏதோ பல நாட்கள் பழகியவனைப் போல் நடந்து கொண்டதுதான் வேலப்பனின் மனத்தை வருத்திச் சுட்டது.

''கண்ணன்...'' பொருத்தமான பெயர் தான். நல்ல அழகு... இந்தக் குழந்தையைக் கொண்டு போனால் முதலாளி மிகவும் சந்தோஷப்படுவார்.

அமெரிக்காவிலேயே பல வருடங்கள் தங்கியிருந்து தற்சமயம் தாய்நாட்டைப் பார்க்க வந்திருக்கும் இந்தியத் தம்பதிகளுக்கு இவன் சுவீகாரப் புத்திரனாக மாறிப் பத்து தினங்களில் அமெரிக்கா போய்ச் சேரலாம். அதற்காக முதலாளிக்குக் கிடைக்கும் கனிசமான தொகையில் வேலப்பனின் பங்கு சிறிது தாராளமாகவே இருக்கும்!

''பெரிய பணக்கார வீட்டுக் குழந்தை ஒன்றைக் கடத்தி வர வேண்டும்'' என்று முதலாளி அவன் காதில் போட்ட நாளாகச் சென்னைக் கடற்கரையைச் சுற்றிச் சுற்றி நோட்டமிட்டு, இந்தக் கண்ணனை அவன் தேர்ந்தெடுத்திருக்கிறான்.

தினமும் மாலை ஐந்து மணி சுமாருக்கு அந்தப் பெரிய கார் கடற்கரைக்கு வந்து விடும். டிரைவர், ஆயா இருவருடன் கண்ணன் குதி போட்டு மண்ணில் இறங்கி ஓடுவான். அலைகளின் அருகில் போய் நிற்பதென்றால் அவனுக்கு வெகு குஷி.

அநேகமாகக் கண்ணனுடைய தாயாரும் உடன் வருவாள்.

வேலப்பன் குழந்தையைக் குறி வைத்து விட்டான். திட்டம் உருவாகியது.

ஒரு ஞாயிற்றுக் கிழமை மாலை அந்தி மங்கி இருள் கவிக்கும் நேரத்தில் தன் திட்டத்தை அவன் செயலாக்கி விட்டான்.

''கண்ணு! வா... போகலாம், இருட்டி விட்டது!'' என்று கூறிக் கொண்டே கண்ணனின் தாயார் எழுந்தாள். பட்டுப் புடவையில் ஒட்டியிருந்த மணலைத் தட்டிக்கொண்டு மெதுவாகக் காரை நோக்கி நடந்தாள்.

ஆயா பரபரப்பாக நான்கு புறமும் சிதறிக் கிடந்த விளையாட்டுச் சாமான்களையெல்லாம் பொறுக்கி எடுத்தாள். சிறிய பிளாஸ்டிக் பக்கெட்டில் நிரம்பியிருந்த ஈர மணலைச் சிறிது தள்ளி, தான் கட்டிக் கொண்டிருந்த மணல் கோபுரத்தின் மீது கொட்டிவர எண்ணி, கண்ணன் 'குடுகுடு' வென்று ஓடினான்.

மெதுவாகப் பத்தடி நடந்த கண்ணனின் தாயார், திரும்பி நின்று, கண்ணனும் ஆயாவும் தன் பின்னால் வருகிறார்களா என்று நோட்டமிட்டாள். ஆயா, தன் புடவைத் தலைப்பில் வாரிக் குவித்திருந்த விளையாட்டுச் சாமான்கள் அனைத்தும் கீழே விழுந்து விடாமல் இருக்கப் புடவையை வரிந்து இடுப்பில் சொருகினாள்.



அப்பொழுதுதான் அந்தக் கூச்சல் அவர்களைத் திடுக்கிட வைத்தது.

'ஐயோ! குழந்தை... குழந்தை...! தண்ணீரில் விழுந்து விட்டதே!'

ஒரு நிமிஷம் காணப்பட்ட மங்கிய வெளிச்சம்கூட இப்போது மறைந்து விட்டது.

கண்ணனின் தாயாரும் ஆயாவும் அதிர்ந்து அருகில் விளையாடிக் கொண்டிருந்த கண்ணனைத் தேடினார்கள்.

''இதோ கண்ணன்!'' ஆயா ஓடிப்போய்ப் பிடித்தாள்.

இருட்டில் உற்றுப் பார்த்தபோதுதான், அது கண்ணன் வயதுள்ள வேறு குழந்தை என்று தெரிந்தது. பதற்றத்துடன் அடுத்துக் கும்பலாக மணலில் அமர்ந்திருந்தவர்கள் அருகில் நின்று கொண்டிருந்த குழந்தையை நோக்கி, ''கண்ணு!'' என்ற கூவலுடன் ஓடினாள்.

இரண்டே நிமிடங்களில் எஜமானியும் வேலைக்காரியும் தங்கள் கண்ணன் காணாததை உணர்ந்துகொண்டு விட்டனர்.

''கண்ணு! கண்ணு!'' என்று அவர்கள் போட்ட கூச்சல் சுற்றியிருந்தவர்களைக் கும்பலாகக் கூட வைத்து விட்டது.

அலைகளுக்கருகில் மற்றொரு கும்பல் கூடியிருந்தது. ஓர் ஆள் கையில் ஒரு சிறிய பக்கெட்டுடன் கூச்சலிட்டுக் கொண்டிருந்தான்.

அவன் கூறிய செய்தியைக் கேட்டு, கூட்டமே பிரமித்து நின்றபோது, பாவம்! கண்ணனின் தாயார் நிலைகுலைந்து மயங்கிக் கீழே சாய்ந்தாள்.

அந்த ஆள் திரும்பவும் ஒருவரிடம் விளக்கிக்கொண்டிருந்தான். ''நான் இங்கேதான் மணலிலே படுத்துக்கிட்டிருந்தேனுங்க. திடீரென்று முகத்தில் ஈர மணல் விழவும் கோபத்துடன் எழுந்து பார்த்தேன். சின்னப் பையன். நான்கு ஐந்து வயதிருக்கும். சிரித்துக்கொண்டே கையில் ஒரு பக்கெட்டுடன் அலையைப் பார்த்து ஓடிக்கிட்டிருந்தான். கண்ணில் மண் உறுத்தவே, மேல் துணியால் துடைத்து விட்டுப் பார்த்தபோது அந்தக் குழந்தை தண்ணியில் இறங்கி விட்டது. எனக்கு ஒண்ணுமே புரியல்லே. எழுந்து ஓடினேன். அதுக்குள்ளாறப் பெரிய அலை வந்து குழந்தையை அடிச்சுக்கிட்டுப் போயிடுச்சுங்க.... காலுலே ஏதோ மோதிச்சு. எடுத்துப் பார்த்தேன். அந்தக் குழந்தை கையிலே வச்சிருந்த பக்கெட் அகப்பட்டது.''

அநுதாபக் குரல்கள் எல்லாத் திசைகளிலிருந்தும் ஒரே சமயத்தில் எழுந்தன.

போலீஸ்... லைட்... தேடும் ஆட்கள்—இப்படியாகக் கடற்கரை அந்த இரவு வேளையில் அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்த போது, வேலப்பன், எழும்பூர் ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்ட ரயில் ஒன்றில் கண்ணனுடன் பத்திரமாக அமர்ந்திருந்தான்.

கண் இமைக்கும் நேரத்தில் இருளைப் பயன்படுத்திக் கொண்டு அவன் கண்ணனை இழுத்து, வாயைப் பொத்தி, தோளில் சாத்திக்கொண்டு நடந்தபோது, வேலப்பனின் கையாள் கண்ணனின் கையிலிருந்த பிளாஸ்டிக் பக்கெட்டைப் பிடுங்கிக் கொண்டு அலைகளை நோக்கி ஓடினான். குழந்தை கடலில் விழுந்து விட்டதாக அவன் கூறி நடிப்பதை அனைவரும் நம்பியே ஆக வேண்டும். வேறு வழியில்லை.

இட்டமிடாமல் கண்ணனைக் கடத்தியிருப்பது சாத்தியமே இல்லை. கண்ணனின் தாயாராகட்டும், ஆயாளாகட்டும் குழந்தையை ஜாக்கிரதையாகக் கண்காணிப்பதில் முதல்தரமானவர்கள். அவர்களுக்கு இது பேரிடிதான்! அவர்கள் இனிமேல் விதியைத்தான் நொந்துகொள்ள வேண்டும்!

வேலப்பன் தன் சிந்தனையிலிருந்து விடுபட்டு, முதன் முறையாகக் கண்ணனைத் திரும்பிப் பார்த்தான். அப்பொழுதான் அவன் மனத்தில் அந்த எண்ணம் எழுந்தது.

இதுவரை கண்ணன் சிறிதுகூட அழவில்லை. வேலப்பன் பிடியிலிருந்து திமிறவும் இல்லை!

வேலப்பன் வியப்புடன் குழந்தையை உற்றுப் பார்த்தபோது கண்ணனும் வேலப்பன் முகத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான்.

''மாமா... வணக்கம்!'' என்று மழலையில் மொழிந்தபோது வேலப்பனுக்குத் தலைமுதல் கால்வரையில் மின்னல் பாய்ந்த உணர்ச்சி ஏற்பட்டது.

வேலப்பனுக்கு இது புது அநுபவம்.

அவன் திருடி வந்த குழந்தை அவனைப் பார்த்துச் சிரித்து 'வணக்கம்' கூறுவதாவது!

கண்ணன் உரக்க அழுது, ஊரைக் கூட்டியிருந்தால்கூட.... வேலப்பனுக்கு அதைச் சமாளிக்கும் தைரியமும் சாமர்த்தியமும் உண்டு. ஆனால் அவனுடைய தந்திரங்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட இந்தச் சிரிப்பைக் கண்டு அவன் மலைத்துவிட்டான்.

இரவு முழுதும் இந்தப் பிரச்னையே அவன் மண்டையைக் குடைந்தது. இதுவரையில் எந்தக் குழந்தை மேலும் ஏற்படாத ஓர் ஆத்திரம் அவனுக்குக் கண்ணன் மேல் ஏற்பட்டது.

அந்த ஆத்திரத்தில் அவன் செய்தது, இரு முறை வழியில் தின்பண்டங்கள் வாங்கி, கண்ணன்முன் பிரித்து வைத்துக் கொண்டு ஒவ்வொன்றாகத் தானே சாப்பிட்டதுதான்!

குழந்தைக்கு நான்கு அல்லது ஐந்து வயது தானே இருக்கும்! கையை நீட்டாதோ! அல்லது கேட்காமல்..... தானே தின்பண்டத்தை எடுத்துக் கொள்ளாதோ...!

ஊஹூம்! கண்ணன் கைநீளவே இல்லை!

'நீளும் கையில் சுடச் சுட..... நான்கு அடி போட வேண்டும்' என்று ஆத்திரத்துடன் காத்திருந்த வேலப்பனுக்கு, இது மற்றோர் இடி..... ஏமாற்றம்!

அடித்தாலாவது... 'ஓ'வென்று கண்ணன் அழுவான். இவன் மனம் நிம்மதியடையுமென்று தோன்றியது.

சுற்றிலும் தூங்கி வழிந்த பிரயாணிகளை ஒரு கண்ணோட்டமிட்டுவிட்டு, சட்டென்று கண்ணனைப் பிடித்துப் பலகையில் தள்ளினான் வேலப்பன். தள்ளிய வேகத்தில் பலகை 'மடே'லென்று மண்டையில் பட்டுக் கண்ணன் மலங்க மலங்க வேலப்பனைப் பார்த்து விழித்தான்.

இப்பொழுதாவது அழ வேண்டுமே! ஊஹூம்......!

வேலப்பன் மனம் மேலும் கொதித்தது.





திருவஹீந்திரபுரம்

ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன்

ஏழாவது நூற்றாண்டு விழாக் கமிட்டி

திருவஹீந்திரபுரம், கடலூர்-2.

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்துக்கும் ஆஸ்திக உலகத்துக்கும் எண்ணிறந்த நூல்கள் இயற்றி பரம உபகாரம் செய்தவரும் ஒப்புயர்வற்ற பரமாசார்யரும் ஆன ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் இப்புவியில் அவதரித்து அந்த வருஷத்துடன் எழுநூறு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. அவருடைய பெருமைக்கும் நாம் அடைந்த பயனுக்கும் தக்க முறையில் மேற்படி ஏழாவது நூற்றாண்டு விழாவைக் கொண்டாட வேண்டியது மிகவும் அவசியம்.

அம்மஹாகுரு தவம் புரிந்து ஸ்ரீ ஹயக்ரீவன், ஸ்ரீ கருடன் ஆகியோர்களை ப்ரத்யக்ஷமாகக் கண்ட ஔஷத பர்வதமும் அவர் நீராடி அனுஷ்டானம் புரிந்த கருட நதியும், நாயிகாபாவத்தில் பாடி அனுபவித்த அடியவர்க்கு மெய்யனே அச்சுதன் அமரும் திருக்கோயிலும், அவர் வசித்த திருமாளிகையும், அவர்தம் திருக்கையால் கட்டிய கிணறும் அவரே நிர்மாணித்த நம் அர்ச்சா மூர்த்தியும் விளங்குமிடமான திருவஹீந்திரபுரத்தில் மேற்படி விழாவைக் கொண்டாட ஆஸ்திகர்களால் ஓர் கமிட்டி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஸ்ரீமத் ஆண்டவன் வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன் மேற்படி கமிட்டி நன்றாகச் செயல்பட்டு வெற்றிபெற வேண்டுமென்று அனுக்ரஹித்தாயிற்று.

மேற்படி கமிட்டியின் குறிக்கோள்களாவன:

1 ஸ்ரீ தேசிகனுக்கு ரத்தின கவசம் ஸமர்ப்பித்தல்

2 ஸ்ரீ தேசிகன் சரித்திரத்தை தேசிகன் திருமாளிகை சுவர்களில் சித்திர ரூபமாக எழுதுதல்.

3 திருமாளிகையில் சலவைக்கல் தளவரிசை அமைத்தல்.

4 தேசிக தர்சன ரக்ஷாமணி ஸ்ரீ எம். ஸுதர்சனம் ஐயங்காரால் ஏற்படுத்தப் பட்ட திருமாளிகை நந்தவனத்தைப் பாதுகாக்க ஒரு சாச்வத நிதி அமைத்தல்.

ஆஸ்திகர்கள் சிறந்த முறையில் பொருளுதவி புரிந்து மேற்படி கைங்கர்யங்களைப் பூர்த்திசெய்வித்து ஸ்ரீ தேசிகன் கிருபைக்கு பாத்திரர் ஆகவேண்டுமென்று பிரார்த்திக்கப்படுகிறார்கள்.

நன்கொடை அனுப்புவோர் கீழ்க்கண்ட விலாசதாரர்களில் ஒருவருக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. ஸ்ரீ வி. ஆர். ராஜகோபாலாசாரியார்,
   அட்வகேட், சங்கர நாயுடு வீதி, கடலூர்-2.

2. ஸ்ரீ T. E. ராமபத்ராசாரியார்,
   திருவஹீந்திரபுரம் B. O., கடலூர்-2.

திருவஹீந்திரபுரம்,
3-2-1968.

ஸ்ரீ தேசிக பக்தர்கள்.

தலையில் பட்ட அடிக்கு ஒரு சிணுங்கல் வேண்டாம்....!உம்....ஒன்றுமே நடக்காதது போல் இந்தப் புன்னகை....!

வேலப்பன் பற்களை 'நறநற'வென்று கடித்தான்.

கண்ணன் உதடு மெதுவாக அசைந்தது.

''மாமா....! குட்.... நைட்....!'' என்று கூறிவிட்டு, படபடக்கும் இமைகளைப் பட்டென்று மூடிக் கொண்டான் கண்ணன்.

வேலப்பன் விருட்டென்று எழுந்து உட்கார்ந்தான்.

வெளியிலிருந்து பேய்க்காற்று வீசியது. ஜன்னல் வழியாக ஊடுருவி வந்து அவன் உள்ளத்தில் அது பாய்ந்தது. உடம்பைத் துளைத்த வாடைக் காற்றையும் மீறி அவன் உடல் குப்பென்று வியர்த்தது.

அவன் தூக்கி வந்த குழந்தை அவனைப் பார்த்து 'குட்—நைட்' கூறுகிறது.

வேலப்பன் தலையைக் கலைத்துக் கொண்டு மெதுவாகச் சிரித்தான்.

''உம்... எனக்கு 'குட்நைட்'தான்... உனக்குத்தான்... இது 'பேட் நைட்' '' என்று அவன் வாய் மெல்ல முணுமுணுத்தது.

சிறிது நேரத்துக்குப் பிறகு, ஏதோ பேயைப் பார்ப்பவன் போல மிரண்டு, மெதுவாகத் திரும்பிக் கண்ணனைப் பார்த்தான்.

பஞ்சு மெத்தையில் படுத்துறங்க வேண்டிய பாலகன் தன் குஞ்சுக் கையை மடித்துத் தலையணையாக வைத்துப் பலகையில் படுத்திருந்த நேர்த்தி !

ரயிலின் கடகட சப்தத்தையும் மீறி, அவன் காதில் அந்த வார்த்தைகள் தெளிவாக விழுந்தன.

''சாமி......! காப்பாத்து....! சாமி.... அப்பாவைக் காப்பாத்து.... அம்மாவைக் காப்பாத்து.... சாமி! எல்லோரையும் காப்பாத்து......!''

வேலப்பன் ஏளனமாகச் சிரித்தான்.

''ஓ....! பெரிய வீட்டுப் பிள்ளையல்லவா ? தூங்கறதுக்கு முன்னாலே பிரார்த்தனை செய்யுது. செய்யட்டும் செய்யட்டும். இனிமேல் எந்தச் சாமி வந்தால்தான் என்ன? இந்த வேலப்பன்சாமிகிட்டே ஒண்ணும் வாலாட்ட முடியாது !''

மதுரை ஸ்டேஷனில் திருநெல்வேலி எக்ஸ்பிரஸ் வழக்கத்துக்கு விரோதமாகச் சிறிது அதிக நேரம் நின்றது.

இரவு முழுவதும் சரியாகத் தூங்காததால் வேலப்பன் கண்கள் இரத்தச் சிவப்பாகக் காணப்பட்டன. வயிற்றுப் பசியைத் தணிக்க, இட்டிலி, காப்பி தட்டுடன் வாங்கி மடியில் வைத்துக் கொண்டான் வேலப்பன்.

கண்ணன் எழுந்து ஜன்னலில் சாய்ந்து உட்கார்ந்து வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

நான்கு வயது குழந்தை முன்தின மாலையிலிருந்து பட்டினியாயிருந்தது. இட்டிலியைப் பார்த்ததும்.... பசி. பசி என்று பறக்காதோ!

வேலப்பனின் கல் மனத்திலும் சிறிது ஈரம் கசிந்தது.

தனியாக ஓர் இட்டிலியை எடுத்துத் தட்டில் வைத்து நகர்த்தினான்.

''ஏய்....! இந்தா.... தின்னு....!''



ஒரு கணத்தில் இழந்த மானத்தை ஓராயிரம் ஆண்டுகளாலும் பெற்றுவிட முடியாது.

— இந்தாலியப் பழமொழி

திடுக்கிட்டுத் திரும்பிய கண்ணன் முகத்தில் அதே புன்முறுவல் எழுந்தது. இப்பொழுது சிறிது பெரிதாக விரிந்தது.

சுற்று முற்றும் பார்த்துப் பயந்த குரலில், ''மாமா... பல் தேய்க்கணுமே?'' என்று மெதுவாகக் கூறினான்.

இதுவரை உள்ளடங்கியிருந்த வேலப்பனின் ஆத்திரம் வேகமாக பீறிட்டது.

''சீமான் மகனுக்குப் பல் தேய்க்காட்டா பலகாரம் இறங்காதோ ! சீ...! தின்னுடா கழுதை...!''

ஆவேசமாகக் கத்தியவன் தட்டிலிருந்த முழு இட்டிலியை அப்படியே எடுத்துக் குழந்தையின் வாயில் திணித்தான். கண்ணன் திக்குமுக்காடிப் போய்விட்டான்.

திறந்த வாயில் இட்டிலி அடைத்திருக்கப் பரிதாபமாகக் கண்களில் நீர் மல்க வேலப்பனை நிமிர்ந்து பார்த்தான்.

அதற்குள் சத்தம் கேட்டுத் திரும்பிய பக்கத்து பெஞ்சுக்காரக் கிழவி ''என்னப்பா, இது!'' என்று வியக்க, வேலப்பன் சிறிது சமாளித்துக் கொண்டு, ''பாருங்கம்மா...! நேற்றிலிருந்து பட்டினி. ஒண்ணும் இன்னமாட்டேன்னு அழும்பு பண்ணுது!'' என்று பதிலுரைத்தபோது அவன் குரலில் பொய்யான ஒரு குழைவு காணப்பட்டது.

''அதுக்கு இப்படியா முழுசா இட்டிலியை வாயிலே அடைப்பாங்க....! நல்லாயிருக்கு. விலகுங்க, தம்பி....!'' என்று கூறிய அந்தக் கிழவி கண்ணன் வாயிலிருந்து இட்டிலியை மெதுவாக எடுத்த போது, அவன் கண்களில் தேங்கியிருந்த கண்ணீரும் பொல பொலவென்று அத்துடன் சேர்ந்து கீழே உதிர்ந்தது.

வேலப்பன் முகத்தைத் திருப்பிக் கொண்டு குரூரமான திருப்தியுடன் சிரித்தான்.


''குழந்தைக்குப் பிடிச்சதைக் கொடுக்கணும் தம்பி!'' என்று ஏதேதோ பேசிக் கொண்டே அந்தக் கிழவி, தன் பையிலிருந்து ஒரு பழத்தை எடுத்து உரித்துக் கண்ணன் கையில் கொடுத்தாள்.

''சாப்பிடு குழந்தே!.... சாப்பிடு !'' என்று சமாதானப்படுத்தி விட்டு, அவள் நகர்ந்து தன் இடத்தில் சென்று அமர்ந்து கொண்டாள்.

வேலப்பன் ஏனோ அந்தப் பக்கமே முகத்தைத் திருப்பவில்லை. ஓடும் மரங்களையே பார்த்துக் கொண்டு அசையாமல் அமர்ந்திருந்தான்.

ஐந்து நிமிடங்கள் கழிந்த பிறகு, மெதுவாகக் குற்ற உணர்வுடன் கண்ணன் பக்கம் திரும்பிப் பார்த்தான்.

ஆச்சரியத்தில் அவன் விழிகள் விரிந்தன.



''நேத்து ராத்திரி தூக்கத்திலே 'வாலு போச்சு, கத்தி வந்தது டும் டும் டும்'ன்னு சொன்னீங்களே.... ஊருக்குத் திரும்பிப் போன என் தம்பியையும் நேத்து ஊர்லேந்து வந்த என் அம்மாவையும் தானே அப்படிச் சொன்னீங்க?''

* *

வலது கையில் ஒரு பாதிப் பழமும், இடது கையில் மறு பாதிப் பழமுமாகக் கண்ணன் வேலப்பன் திரும்புவதை எதிர்பார்த்துக் காத்திருப்பவன் போல் உட்கார்ந்திருந்தான்.

வேலப்பன் திரும்பியதைப் பார்த்ததும், அவன் முகம் மலர்ந்தது. சட்டென்று வலது கையில் இருந்த பாதிப் பழத்தை வேலப்பன் கையில் வைத்து, ''மாமா! சாப்பிடுங்க !'' என்று கண்ணன் கூறியபோது வேலப்பன் உடலெல்லாம் அவமானத்தில் நடுங்கியது.

நேற்றிலிருந்து இதுவரை மூன்று முறை, அந்தச் சிறு குழந்தை முன் அமர்ந்து வேலப்பன் தான் மட்டும் சாப்பிட்டிருக்கிறான்.

சிறிது நேரத்துக்குமுன், தன் ஆத்திரத்தைக் காட்டுவதற்கென்றே கொடுமையாகச் சிறுவன் வாயில் பலகாரத்தை அடைத்திருக்கிறான்! அப்படி இருந்தும் இந்தக் குழந்தை குழந்தையா இது?— வேலப்பன் கையிலிருந்த பழம், அவன் கையை மட்டும் சுடவில்லை. அவன் உடலையே சுட்டு இருதயத்தை எரித்தது.

யதேச்சையாகத் திரும்பிய கிழவி, ''அட, சமர்த்தே ! உனக்குப் பாதிப் பழம் தந்திடுச்சா, தம்பி!'' என்று ஆச்சரியக் குரல் எழுப்பவும் அசட்டுச் சிரிப்புடன் பழத்தை வாயில் போட்டுக் கொண்டபோது வேலப்பனுக்கு வாயெல்லாம் கசந்தது.

கிழவியைப் பார்த்துச் சிரித்த கண்ணன், ''ஆயா, இந்தாங்க.... உங்களுக்குப் பழம்!'' என்று கூறித் தன் கையிலிருந்த பழத் துண்டில் பாதியை விண்டு, அவள் கையில் வைக்கவும், ''அட, என் கண்ணு.....!'' என்று அவள் எழுந்து குழந்தையை அணைத்துக் கொண்ட போது அவள் வாயில் அந்தப் பழத் துண்டு கற்கண்டாக இனித்தது.

''மணியாச்சி....! மணியாச்சி.. .!''

தன்னை மறந்து சிறிது கண்ணயர்ந்து விட்ட வேலப்பன் திடுக்கிட்டு எழுந்து பார்த்தான். மதுரை ஸ்டேஷனிலிருந்து ஒவ்வொரு ஸ்டேஷனிலும் போலீஸ் நடமாட்டம் அதிகமாக இருப்பதாக அவனுக்குத் தோன்றியது. மதுரையில் ஏதோ ஒரு கைதி தப்பி ஓடி விட்டதாகக் கசமுசவென்று பேசிக் கொண்டார்கள்.

வேலப்பனின் குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்தது. கண்ணனை நன்றாக மறைத்துக் கொண்டு உட்கார்ந்தான்.

மணியாச்சியிலிருந்து புறப்பட்ட ரயில் அநாவசியமாகப் பல இடங்களில் நின்று நின்று மெதுவாக ஊர்ந்தது.

வேலப்பன் உஷாரானான். திருநெல்வேலி ஸ்டேஷனில் கண்டிப்பாகப் போலீஸ் கெடுபிடி நிறைய இருக்கும்.

ஓர் இடத்தில் ரயில் நின்ற போது, வேலப்பன் திடீர்த் தீர்மானத்துடன் கண்ணனையும் இழுத்துக் கொண்டு கீழே இறங்கிவிட்டான்.

ரஸ்தாவை வந்தடைந்த போதுதான் அவனுக்கு நிம்மதியாக மூச்சு வந்தது. அங்கிருந்து திருநெல்வேலி, எட்டு மைல் இருக்குமென்பதை அறிந்து, போலீஸ் கண்களில் படாமல் நடந்தே ஊர் போய்ச் சேரத் தீர்மானித்துக் கொண்டான்.

நடந்தே பழக்கமில்லாத குழந்தை, பதை பதைக்கும் வெய்யிலில் துவண்டு நடந்தான். வேலப்பன் குரூரமான ஆத்திரத்துடன், மிருகத்தனமாகக் கண்ணனை இழுத்துக் கொண்டு நடந்தான்.

ஒரு நாள் முழுவதும் பட்டினியாக இருந்த குழந்தை கால் தொய்யத் தொய்ய நடந்தது. சிவந்த பட்டுப் பாதங்கள், வெய்யில் பட்டுக் கன்றிவிட்டன.

குழந்தை தயங்கி நிற்கும்போதெல்லாம் வேலப்பன் தன் ஆத்திரம் தீரும் வரை கண்ணன் தலையில் 'நறுக்....நறுக்'கென்று ஓங்கிக் குட்டவும் தவறவில்லை.

மோசமான நிலையில் முதலாளியிடம் பையனை ஒப்படைத்தால் அவருக்குப் பிடிக்காது என்ற எண்ணமே வேலப்பனின் ஆத்திரத்துக்கு அவ்வப்போது அணை போட்டது.

கண்ணனின் சுருண்ட கூந்தலைப் பிடித்துத் தலையைக் குலுக்கி நிமிர்த்தினான். தீனமாக வேலப்பனை ஏறிட்டு நோக்கிய கண்ணனின் கண்களில், ''நான் உனக்கு என்ன தீங்கு செய்தேன்?'' என்ற கேள்வி பளபளக்கும் நீரினூடே பளிச்சென்று தெரிந்தது.

அடுத்தகணம் கண்ணன் மயங்கிக் கீழே சாய்ந்தான். வேலப்பன் சிறிது நேரம் மயங்கிக் கிடந்த குழந்தையையே வெறித்துப் பார்த்தான்.

அவன் இருதயத்தின் ஏதோ ஒரு மூலையில் இனம் தெரியாத ஒரு வேதனை மெதுவாக முளைவிட்டது. வெளிப்படையாக அவன் ஒப்புக் கொள்ளாவிடினும், அவன் உள்மனம், அந்தக் குழந்தையின் கட்டுப்பாடான ஒழுங்கான செய்கைகளையும் நடத்தையையும், பேச்சையும் எண்ணி எண்ணி வியக்கத் தெரியாமல் வியந்து கொண்டிருந்தது.

''பெரிய வீட்டுக் குழந்தை என்றால் பெரிய வீட்டுக் குழந்தைதான்!'' என்று

மனம் ஓலமிடுவதை ஒப்புக் கொள்ள விரும் பாதவன்போல் பலமாகத் தலையை ஆட்டிய வேலப்பன் மயங்கிக் கிடந்த குழந்தையைச் சலிப்புடன் எடுத்துத் தோளில் சாய்த்தபடி நடக்கலானான்.

வேலப்பன் ஊருக்குள் நுழைந்தபோது சூரி யன் மேற்குத் திசையில் மறைந்து கொண் டிருந்தான்.

ஆயிற்று. இன்னும் நான்கு தெருக்கள் தாண்டியதும் அவன் போக வேண்டிய இடம் வந்துவிடும். அடுத்த திருப்பத்தில் திரும்பிய போது எதிரே மேள தாளத்துடன் வந்த கும்பலைக் கண்டு சிறிது தயங்கி வீதியின் ஓரமாக ஒதுங்கி நின்றான்.

ஊரில் ஏதோ திருவிழா போல இருக்கிறது. சுவாமி புறப்பாடு எதிரே வந்து கொண் டிருக்கிறது. பெரிய சப்பரத்தில் சுவாமியும் அம்மனும் கொலு வீற்று, ஊர்வலம் வந்து கொண்டிருந்த காட்சி கண்கொள்ளாக் காட்சிதான். ஆனால் வேலப்பன் இதை ரசிக்கும் மனநிலையிலா இருந்தான்?

மேளச் சத்தம் நெருங்கியது.

மயங்கித் தோளில் சாய்ந்திருந்த கண்ணன் அசைந்தான். பிறகு மெதுவாகத் தலையைத் தூக்கிச் சுற்று முற்றும் பார்த்தான்.

அந்தக் கண்களில் பசியின் சோர்வையும், வெய்யிலின் கொடுமையையும், உடல் அசதி யையும் மீறி, ஓர் அலாதியான மகிழ்ச்சி பளிச்சிட்டது.

பிரயாசையுடன் தலையைத் திருப்பி, எதிரே நோக்கிய கண்ணனின் பிஞ்சுக் கரங்கள் தாமாகக் கூப்பிக் கொண்டன.

''சாமி.... காப்பாத்து!... அப்பாவைக் காப்பாத்து... அம்மாவைக் காப்பாத்து...'' மெதுவாக உச்சரித்தவன் பிறகு தயக்கத்து டன் வேலப்பன் முகத்தைப் பார்த்தவாறே ''சாமி! இந்த மாமாவையும் காப்பாத்து!'' என்று கூறிக் கொண்டே படபடவென்று தன் கைகளால் இரு கன்னங்களிலும் போட்டுக் கொண்டான்.

சுவாமி முன் வைக்கப்பட்ட அதிர்வேட்டு படீரென்று வெடித்தது.

வேலப்பன் கல் மனம் சுக்கல் சுக்கலாகப் பிளந்தது! அதிலிருந்து இரத்தக் கண்ணீர் ஆறாகப் பெருகியது.

ஸ்தம்பித்து மரமாக நின்றிருந்தவனின் உள்ளே ஒரு பிரளயமே உருவாகிக் கொண் டிருந்தது.

பிறந்த நாளிலிருந்து இன்றுவரை வேலப் பனுக்காக யாரும் கடவுளிடம் வேண்டியதை அவன் கண்டதில்லை.

அவன் மனைவி மக்கள் கூட அவனுடைய அபாயகரமான தொழிலில் ஈடுபட்டுச் சம் பாதித்துக் கொண்டு வரும் பணத்தையே பிரதானமாக எண்ணினார்களே தவிர, அவ னைப் பற்றியோ, அவன் சுகத்தைப் பற்றியோ சிறிதும் கவலைப்பட்டவர்களில்லை.

ஆனால் ஒன்றுமறியாத இந்தப் பாலகன் நான்கு வயதுப் பிள்ளை, அவன் செய்த



''உங்க வீட்டில் ஒரு தனி விசேஷம்! ஆறு வருஷமா நீங்க ஒரே சம்பளத்தைச் சொல்லிண் டிருக்கேள். உங்க மனைவி ஒரே வயதைச் சொல்லிண் டிருக்காள். உங்க மகன் ஒரே 'க்ளாஸை'ச் சொல் லிண்டிருக்கான்!''

அவ்வளவு கொடுமைகளையும் தாங்கிக் கொண்டு, அவனுக்காகச் சுவாமியிடம் பிரார்த்திக்கிறான்! அதுவும் எந்த நிலையில்?

வேலப்பன் கண்களில் கண்ணீர் கசிந்தது.

''எவ்வளவு கண்ணியமாக, கட்டுப் பாடாக வளர்க்கப்பட்டிருந்தால் ஒரு குழந்தை ஓர் அந்நியனிடம் இவ்வளவு மரியாதையாக நடந்துகொள்ளும்!

''ஆஹா! ஒரு மகத்தான குழந்தை! ஊர் உலகத்துக்கே பெருமை தேடித் தரக் கூடிய ஒரு 'ரத்தினம்'... இது குப்பை மேட்டை நோக்கிப் போவதா?

''இதோ இந்த மூன்றடுக்கு மாடி வீடு தான் முதலாளியின் பங்களா... குழந்தை யைப் பெற்றுக் கொண்டதும் முகம் சுளிக்கா மல் ஐந்நூறு ரூபாயைக் கையில் போடுவார்!

''ச்சீ! இது என்ன பிழைப்பு!''

வேலப்பன் ஆவேசமாகத் திரும்பிக் குழந் தையைப் பார்த்தான்.

கண்ணன் திரும்பவும் மயங்கி அவன் தோளில் சாய்ந்திருந்தான்.

முதன் முறையாக வேலப்பன் வாயி லிருந்து, ''கண்ணு...!'' என்ற சொல் கனிவுடன் வெளி வந்தது!

''கண்ணு... நீ ரத்தினமடா! ஒரு நாள் பழக்கத்திலேயே என் மனத்தைக் கரைத்துக் கவர்ந்த உன்னைப் பிரிந்த பெற்றோர் மனம் எப்படித் துடிக்கும்!... இன்றுடன் இந்த வேலைக்கு ஒரு முழுக்கு! உன்னை உன் வீட்டில் நானே பத்திரமாகக் கொண்டு போய்ச் சேர்ப்பேன் — அதுவரை நான் பிடிபடாமல் இருந்தால் நல்லது. பிடிபட்டாலும் நான் இதுவரையில் செய்த பாவங்களுக்கெல்லாம் பிராயச் சித்தமாகத் தண்டனையை ஏற்றுக் கொள்வேன்....''

முதலாளி வீடு இருந்த திசையைப் பார்த்து, 'த்தூ!' என்று வெறுப்புடன் உமிழ்ந்த வேலப்பன், ஆவேசமாக ரயில் நிலையத்தை நோக்கிப் போய்க் கொண் டிருந்தான்.


G.E.C.
பம்பு செட்டுகள்
குறைந்த செலவில்
அதிக ஜலம் இறைக்கின்றன

அல்டாப் அப்பாசாமி

இரும்பன்

''யோவ்! நீ என்ன புச்சா? சட்டுப்புட்டுனு டிக்கட்டைக் கிழிச்சுக் கொடுத்துட்டு வண்டியை விடுவியா? ஏதோ டிக்கட்டுக்கு வலிக்கும்போலத் தடவிக் கொடுத்துக்கிட்டிருக்கிறியே!'' கூட்டம் பிதுங்கி நின்ற பஸ்ஸில் உட்காரச் சௌகரியமாக இடம் பிடித்துக் கொண்டு விட்ட ஒருவர் வீண்டலாக நிமிண்டினார். அவர் அவசரம் அவருக்கு!

கண்டக்டருக்கோ வியர்த்து விறுவிறுத்தது; விழி பிதுங்கியது. காலும் ஓடவில்லை; கையும் ஓடவில்லை. பத்துப் பைசா டிக்கட் கேட்டவருக்கு முப்பது பைசா டிக்கட். இருபது பைசா டிக்கட் கேட்டவருக்குப் பத்துப் பைசா டிக்கட் என்று கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டாற்போலக் கிழித்தான். ஒன்று மட்டும் முதற்பாடமாகக் கற்றிருந்தான். ஆம், டிக்கட் கொடுப்பதற்கு முன், விரல்களை எச்சிலாக்கப் பழகி யிருந்தான்.

''தம்பி! ஸ்டாப்புக்கு ஸ்டாப் இப்படி நின்னேன்னு, இன்னிக்குப் போய்ச் சேர்ந்தாற்போலத்தான். ரைட் கொடுத்துட்டு டிக்கட்டைக் கொடு!'' என்றார் டிரைவர்.

இதைக் கண்ட அப்பாசாமிக்குக் கண்டக்டர்மேல் அநுதாபம் பிறந்தது. ''ஐயோவ்! கண்டக்டரும் உங்களைப் போல ஒரு ஆளுதான், ஐயா! ஆளுக்கு ஆள் தாக்காதீங்க!'' என்றவன், தொடர்ந்தான்: ''சார், நீங்களே சொல்லுங்க! கண்டக்டர் வேலை என்ன சாதாரணமான வேலையா? என்னைக் கேட்டால் சதாவதானம், அஷ்டாவதானம்கூட இலேசாகப் பண்ணிவிடலாம், ஐயா! இந்தக் கண்டக்டர் வேலை இருக்கே, இது ரொம்பச் சன்னைப்பிடிச்ச வேலை! எப்படீன்னு கேட்கிறீங்களா? வண்டியிலே ஏறிப்பிட்டா எந்த ஸ்டேஜிலிருந்து எந்த ஸ்டேஜுக்கு என்ன கட்டணம்னு நினைவு இருக்கணும்! வாங்கிப் போடற சில்லறையிலும் கண் இருக்கணும். நோட்டுக்குக் கொடுக்கிற சில்லறையிலும் கவனம் இருக்கணும்! 'டிங்'னு பெல் அடிப்பாங்க. டபிள் விசில் கொடுத்துடக் கூடாது. இறங்குகிற பிரயாணியை இறக்கிவிட்டு, ஏறுகிற பிரயாணிக்குத் திரிசங்கு சொர்க்கத்துக்கு வழி காட்டிவிட்டுப் பறக்கக் கூடாது! ஸ்டேஜ் பார்த்துக் குளோஸ் பண்ணிக்கணும். டிக்கட் 'பஞ்ச்' பண்றது இருக்கே, 'அப்'புக்கு 'டௌனு'ம், 'டௌனு'க்கு 'அப்'பும் பண்ணக் கூடாது. 'ஜம்பிங் ஸ்டேஜ்'னு ஒண்ணு. அதை வேறே நினைவு வச்சுக்கணும். இன்ஸ்பெக்டருங்க வந்தா விடுவானுக டோஸ்! அதனாலே என்னைக் கேட்டா, பஸ் கண்டக்டருங்க போன ஜன்மத்திலே அஷ்டாவதானி சதாவதானியா யிருந்திருக்கணும்!''

''உங்க பேச்சைப் பார்த்தால் நீங்க சஹஸ்ராவதானியா யிருக்கணும் போல் இருக்கே! ஒருவேளை நீங்க கண்டக்டர் பயிற்சிக் கூடத்துக்குத் தலைவரோ?''

''இல்லே, சார்! கண்டக்டர் வேலைக்கு மனுப் போட்டிருக்கேன். இன்னிக்கு 'இண்டர்வியூ!''

''உங்களுக்கு என்ன, ஜமாய்ச்சுடுவீங்க. வேலே உறுதி போங்க!''

இதற்குள் கண்டக்டர் நீண்ட விசில் கொடுத்தான்.

''ஏன், அப்பா! ஸ்டேஜ் 'குளோஸ்' பண்ணலியா?''

''இன்னும் டிக்கட்டே கொடுத்து முடியலீங்களே!'' என்றான் கண்டக்டர்.

'''ஸ்டேஜ்' தாண்டி விட்டதே!—டிரைவர்! ஹோல்டான் பிளீஸ்!'' — அப்பாசாமி உரக்கக் கத்தினான்.

இது 'ஸ்டாப்பிங்' இல்லே என்று கையை ஆட்டிய டிரைவர் அடுத்த ஸ்டாப்பில் கொண்டு போய்த்தான் நிறுத்தினான்.

அப்பாசாமி ஏறும் வழியாகவே இறங்கி டிரைவர் உட்கார்ந்திருந்த இடத்துக்கு வந்தான். ''சார், கண்டக்டர் இன்னும் டிக்கட் கொடுத்து முடியலே. வண்டியைக் கொஞ்சம் 'ஆஃப்' பண்ணிக்குங்க!'' என்றான்.



'ஆஃப்' ஆன வண்டி அரை மணிக்கப்புறம் கண்டக்டர் பல இரட்டை விசில்கள் கொடுத்தும் புறப்படவில்லை. 'எல்லோரும் இறங்கித் தள்ளினால்தான் ஓடும்' என்று டிரைவர் கூறவே, பலர் இறங்கி வண்டியைத் தள்ளினார்கள். முனைந்து தள்ளியவர்களில் அப்பாசாமி முக்கியமானவன். அவன் சரியான நேரத்துக்கு இண்டர்வியூவுக்குப் போயாக வேண்டுமே! அதனால் முழு மூச்சுடன் முனைந்தான். வண்டி 'ஸ்டார்ட்' ஆனதும் எல்லோரும் முண்டி அடித்துக் கொண்டு ஏறினார்கள். இப்போதே தன்னை முக்காலே மூணு வீசம் கண்டக்டராகப் பாவித்துக் கொண்டு விட்ட அப்பாசாமி மட்டும் கடைசியில் ஏறிக் கொள்ளலாம் என்று அல்டாப்பாக இருந்தான். பலன், வண்டி அவன் கண்களில் டீஸல் புகையைத் தூவிவிட்டுப் பறந்துவிட்டது.

பையிலிருக்கும் சில்லறைகளை யெல்லாம் பைசா விடாமல் எண்ணிப் பார்த்தவாறே, 'டாக்ஸி! டாக்ஸி!' என்று கூவிக் கொண்டு தெருவில் இங்குமங்கும் ஓடினான் அப்பாசாமி. 'இண்டர்வியூ'வுக்கு லேட் ஆகக்கூடாதே என்ற கவலை அவனுக்கு. ஆனால், அது டாக்ஸி கிடைக்கும் வேளையா?

மாது பேசிவிட்டான்!

மயிலை மூர்த்தி



"ஏய், மாது! சீக்கிரம் போய்ப் பந்திப் பாயைப் போட்டு டம்ளர்களை எடுத்து வை. ம்...... சீக்கிரம்!''

''இதோ வந்துட்டேன், மாமா !''

ஹெட் குக் வைத்தாவின் உத்தரவுகளைச் சிரமேல் தாங்கிப் பம்பரமாகச் சுழன்றுகொண்டிருந்தான் மாது. அந்தக் கல்யாணத்துக்கு வந்திருந்த சமையற்காரர்களில், வயதில் அநுபவத்தில் சிறியவனான ப வை வைத்தாவுடன் சேர்த்து கொண்ட மற்ற மூன்று பேரும்கூட இந்த இரண்டு நாட்களாக ஆட்டி வைத்துக் கொண்டிருந்தனர். வந்த அன்று சமையலறையில் நுழைந்ததிலிருந்து, இந்த நிமிஷம் வரை முகம் சுளிக்காமல் ஈடு கொடுத்துவிட்டான் மாது. சும்மாவா ! ஒரு நாள் கூலி இரண்டரை ரூபாயாயிற்றே ? ஒரு சிறு தவறு செய்து விட்டாலும் வேலை போய் விடுமே ! வைத்தாவின் முன்கோபம் அந்தத் தொழிலில் உள்ளவர்களுக்கு அவ்வளவு பிரசித்தமான ஒரு விஷயம்.

பெரிய இடத்துக் கல்யாணம்; ஒரு தரம் பார்த்தவரை மறுமுறை பார்க்க முடியாத கூட்டம். மாப்பிள்ளை அழைப்பன்று, சமையலறையையும், அதை ஒட்டின டைனிங் ஹாலையும் தொழிற்கூடமாகக் கொண்டு உள்ளே நுழைந்தவன்தான் மாது. இதோ ஓர் இரவு, ஒரு பகலைத் தாண்டியாகிவிட்டது. சண்டை பூசல் எதுவும் இல்லாமல், சம்பந்தி விட்டார்களிடையேதான் ஏதோ சுசமுசவாம். சம்பந்திகளுக்குக் காப்பி எடுத்துக் கொண்டு போன சங்கரன் வந்து ஏதேதோ உளறிக் கொண்டிருந்தான். ஆனால் வைத்தா மட்டும் இதையெல்லாம் காதில் போட்டுக் கொள்ளாமல், ''வந்த இடத்தில் வேலையைப் பார்க்காமல் இதெல்லாம் என்னடா?'' என்று அடிக்கடி சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்.

மாதுவுக்குத்தான் சற்று வேதனை. ஆம்; பகலில் கஞ்சி வடிப்பதற்காக, ஆள் உயரச் சாப்பாட்டுத் தவலையைச் சாய்த்த போது, எங்கோ கவனமாக இருந்ததன் பலனாக, தவலை அவன் மீது சாய்ந்து கொதிக்கும் கஞ்சி வலக் கையில் வடிந்துவிட்டது. கையிலே எரிச்சல். மனத்தில் தாங்க முடியாத வேதனை. தவித்துக் கொண்டே பரிமாறினான் மாது. வைத்தாவுக்கு விஷயம் தெரியாது. சொல்லியிருக்கலாம்; ஆனால் வேலையாக வேண்டும் என்று, வேறு ஆளை அந்த நிமிஷம் முதல் அமர்த்திக் கொண்டு விட்டால் என்ன செய்வது? இந்தத் தொழிலில்கூட போட்டிக்காகக் குறைந்த கூலிக்கு வருவதற்கு எவ்வளவோ பேர் காத்திருந்தனர் என்பதுதான் எல்லோருக்கும் தெரிந்த ரகசியமாயிற்றே !

அது மட்டுந்தான் காரணமா ? இல்லை. இந்தக் கவனக் குறைவுக்கு இன்னும் ஏதாவது காரணம் இருந்ததா? அதைத்தான் அவனால் சொல்ல முடியவில்லை. ஆனால் மனத்தில் ஏதோ ஒரு புழுக்கம். எப்படி ஏற்பட்டது? ஆமாம், இப்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாகப் புரிய ஆரம்பித்தது. அன்று காலையில் நடந்த சம்பவம் அது.

கூடத்தில் கெட்டி மேளம் ஒலித்துக் கொண்டிருந்தது. பெண்ணுக்குத் தாலி கட்டி விட்டார்கள். அந்தச் சமயத்தில் வேகமாகச் சமையலறைக்கு வந்த அந்த அம்மாள், ''இந்தாருங்கோ, யாரையாவது அனுப்பி, எல்லோருக்கும் பானகம் கேட்கச் சொல்லுங்கோ; தாலி கட்டியாச்சு'' என்று பரபரத்த போது, வைத்தா சாம்பார் அடுக்கைக் கிளறியவாறே, 'இதோ அனுப்பறேன் மாமி' மன்று கூறிவிட்டு, 'மாது, அதைப் போய்க் கவனி'' என்ற போது, அறையிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த அந்த அம்மாள், சட்டென்று திரும்பித் தன்னை ஒரு முறை பார்த்துவிட்டு ஏன்

போக வேண்டும்? அந்த ஒரு கணச் சந்திப்பு மனத்தில் ஏற்படுத்திய சஞ்சலம் தானே அது? அது ஏன் இந்தச் சிறிய மனத்தை, இப்படி உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும்?

''மாது! ஹாலில் போய்ப் பாரு. இலையை எடுத்து விட்டு அடுத்த பந்திக்கு ஏற்பாடு செய். மணி ஒன்பதரை ஆகிறது. இன்னிக்காவது கொஞ்சம் 'ரெஸ்ட்' எடுத்தால்தான் நாளைக்குக் காலையில் கட்டுச் சாதக் கூடைக்கு ஏற்பாடு செய்து விட்டு ஆச்சுன்னு நிம்மதியாகப் போகலாம்.''

''இதோ போறேன், மாமா!'' — வழக்கமான பதில்தான்.


இலைகளை எடுத்துவிட்டு, அந்த இடத்தைப் பெருக்கிக் கொண்டு வந்த மாதுவின் கண்களில் காற்றில் அடித்துக் கொண்டு வந்த அந்தக் கல்யாணப் பத்திரிகை தட்டுப்பட்டது. யாரோ வைத்து விட்டுப் போய் விட்டார்கள். விபூதி மடிப்பதற்காக அவனே ஒரு காகிதத்தைத்தேடிக்கொண்டிருந்தான். நல்ல காலம், இதோ கிடைத்துவிட்டது. அதை எடுத்து மடியில் பத்திரப்படுத்திக் கொண்டவன் தொடர்ந்து தன்னுடைய வேலைகளைக் கவனித்தான்.

இரவு நல்ல கூட்டம். கடைசிப் பந்தி முடியும் போது மணி பத்து. அதற்கு மேல் கிணற்றடிக்குச் சென்று, வாளியில் நீரை இழுத்து, நடுக்கும் குளிரில் மடமடவென்று தலையில் கொட்டிக் கொண்டான் மாது. குளித்து விட்டுச் சமைய[illegible]வன், [illegible]ட்டிலிருந்து விபூதியை எடுத்து, நீரில் குழைத்து, பட்டை,பட்டையாக அணிந்து கொண்டு தன்னுடைய மணிபர்ஸை எடுத்து அறையின் ஒரு பக்கத்தில் வைத்து அதன் முன் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி எழுந்தான். காரணம் அந்தச் சிறிய பர்ஸில் முருகன் படம் ஒன்று வைத்திருந்தான் மாது. பர்ஸில் கோயில் கொண்டிருந்த அந்தச் சிறிய முருகன் மீது அவனுக்கு அவ்வளவு பக்தி! அவனுடைய அந்த ஒரு வழக்கம்தான் வைத்தாவுக்கு அவன் மீது அளவுகடந்த அன்பு ஏற்பட்டதற்கு ஒரு காரணம். கடந்த சில வருஷங்களாக, வைத்தாவின் கோஷ்டியில் மாதுவுக்கு நிரந்தரமாக ஓர் இடத்தைத் தேடிக் கொடுத்ததும், மாதுவின் இந்தச் செய்கைதான்.

இரவு அவ்வளவு நேரத்துக்கு மேல் வெறும் மோர் சாதத்தை மட்டும் ஒரு வாய் சாப்பிட்டுவிட்டு ஹாலின் ஓர் ஓரத்தில் கிடந்த பந்திப் பாயை விரித்து அதன்மீது படுத்துக் கண்ணயர்ந்தான் மாது.

மறு நாள் காலை.

சம்பந்தி வீட்டுக்காரர்களுக்காகப் பலவித சித்ரான்னங்கள் தயாராகிக் கொண்டிருந்தன. எல்லாவற்றையும்



எடுத்து ஒரு 'பெரிய கூடையில் வைத்து, பிள்ளை வீட்டவர்கள் தங்கியிருந்த இடத்துக்குச் சுமந்து சென்று கொண்டிருந்தான் மாது. அவன் போகும்போது அங்கே பிரிவுபசாரம் நடந்து கொண்டிருந்தது.

மணப் பெண், கலங்கிய கண்களோடு, ஒவ்வொருவராக விழுந்து வணங்கி விடை பெற்றுக் கொண்டிருந்தாள். யார் யாரோ பெரியவர்கள், பெண்மணிகள் அவளுக்கு ஏதேதோ உபதேசம் செய்து கொண்டிருந்தனர். அவர்களையெல்லாம் கடந்து, அந்தச் சிறிய அறையின் முகப்பில், புடவைத் தலைப்பால் வாய் பொத்தி, கண்களில் நீர் வழிய நின்று கொண்டிருந்த அந்த வயதான அம்மாள் முன் விழுந்து வணங்கி எழுந்த மணப் பெண்ணை, அந்த அம்மாள் அப்படியே கட்டிக் கொண்டு விட்டாள்.

திடல் சென்னை போன் — இதற்கு என்ன அர்த்தம்?

16—3—68 சனிக்கிழமை ஒரு தினசரியில் வெளியான விளம்பரத்தின் வாசகம் :

The Mylapore Fine Arts Club (Regd)
(Phone: 72660)
Grounds Madras Ph. 38683 Matinee
to-day and to-morrow at 3 30
Rates by Sri Madurai Mani Iyer with Sri. T. N. Krishnan and Vellore Ramabadran.

இதையே தமிழில் எழுதுவதானல் :
மயிலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் கிளப்
(ரெஜிஸ்டர்ட்)
(போன்: 72660)
திடல் சென்னை—போன்: 38683
பிற்பகல் காட்சி இன்றும் நாளையும் — 3—30
கட்டணங்கள் : ஸ்ரீ மதுரை மணி அய்யர் ஸ்ரீ டி. என் கிருஷ்ணன், வேலூர் ராம பத்ரனுடன்.

ஒன்றும் புரியவில்லையா? கீழேயுள்ளதைப் படியுங்கள். விளங்கிவிடும்.



அதற்கு அர்த்தம் இதுதான் :

''விளம்பரத்தைப் பார்த்துவிட்டு 'மாட்டினி'க்கு நாலைந்து பேர்கள் எங்கள் சபாவுக்கு நேரில் வந்து விட்டார்கள், டிக்கெட் வாங்க ! சிலர் எங்கள் காரியதரிசிக்குப் போன் செய்து, 'இன்றும் நாளையும்—இரண்டு நாளுமே இக்கச்சேரி ஏற்பாடு செய்திருக்கிறீர்களா?' என்று விசாரிக்கத் தொடங்கினர்!'' என்று கூறினர் மயிலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் கிளப்பின் நிர்வாகக் குழு உறுப்பினர் திரு சங்கர சுப்பிரமணியன்.

குழப்பத்தின் காரணம் அத்தினசரியில் குறிப்பிட்ட விளம்பரத்தின் கீழ் வெளியாகியுள்ள கிரேட் ஈஸ்டர்ன் சர்க்கஸ் விளம்பர வாசகத்தின் ஒரு பகுதி தவறுதலாக அதில் இடம் பெற்றதே !

தூண் ஒன்றில் சாய்ந்தவாறே இந்தக் காட்சியைக் கண்டு கொண்டிருந்த மாதுவுக்கு அங்கு கூட்டத்திலிருந்த யாரோ ஒருவர் குடிக்கத் தண்ணீர் கேட்டது காதில் விழுவதற்கு நியாயமே இல்லே. ஆனல் கருமமே கண்ணாக அங்கே பிரசன்னமாயிருந்த 'ஹெட்குக்' வைத்தாவின் காதுகளில் விழாமல் இருக்குமா ?

''மாது!'' — ஒரு பலத்த குரல். மாது திரும்பாமல் இன்னும் அந்தப் பெண்ணையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஏய், மாது, என்னடா, எங்கே கவனம்?'' வைத்தா தூண் அருகில் வந்து விட்டார். ஆனல் மாதுவோ திரும்பவே இல்லே.

''ஏய், மாதுாவ.... இங்கே பார், அவாளுக்குத் தீர்த்தம் வேணுமாம். போய் ஒரு....... ''

''அட, போய்யா அப்பாலே !'' — குரல் மாதுவின் வாயிலிருந்துதான் வெளிப்பட்டிருக்க வேண்டும்.

''ஏலே, என்ன சொன்னே?'' — வைத்தாவின் கோபம் மாதுவின் கன்னத்தில் பிரதிபலித்தது.

''இந்தா, உனக்குச் சேர வேண்டிய காசை வாங்கிக் கொண்டு நட இங்கிருந்து. ஏய், இந்த வைத்தா எதை வேண்டுமானலும் பொறுத்துக் கொள்வாண்டா. ஆனல், தொழிலே அலட்சியம் செய்யறதை ஒரு நாளும் பொறுக்கவே மாட்டான். அதை இப்போ தெரிஞ்சுக்கோ. இந்தா, பிடி, மூணு நாள் சம்பளம்.'' — வைத்தாவின் கை மடியைத் துழாவியது.

கண நேரத்தில் தன் நிலைக்குத் திரும்பிய மாது வைத்தாவின் கால்களில் இப்போது விழுந்து விட்டான்.

''மாமா! என்னை மன்னிச்சிடுங்கோ. ஏதோ உணர்ச்சிவசப் பட்டுட்டேன்''— விருட்டென்று சென்ற மாது அருகிலிருந்த நீர்க் கூஜாவைத் தூக்கிக் கொண்டு வந்தான். வைத்தா அசுரச் சிரிப்பொன்று சிரித்தார்.

''உனக்கு என்னடா உணர்ச்சிவசம் ! இதைப் போல் எவ்வளவோ கல்யாணம். நமக்கு இது தொழிலடா. அவாளுக்கு, அதுவும் பெண்ணை பெற்று வளர்த்து, ஒருத்தன் கையிலே ஒப்படைச்சுட்டு, இனிமேல் அவள் வேறொருத்தருக்குச் சொந்தமானவள் என்கிற உண்மையை உணர்ந்து, ஆனல் தாங்க முடியாமல் தவிக்கிறாளே, அந்தத் தாயாருக்குத்தாண்டா உணர்ச்சி. நம்மைப் போன்றவர்களுக்கு இங்கே உணர்ச்சிக்கே இடமில்லே. போடா, போய் அவாளுக்கு — யாரோ கேட்டாளே அவாளுக்குத் தீர்த்தத்தைக் கொடுத்துட்டு வா.''

''மாமா! நீங்க சொல்ற உணர்ச்சி எனக்கும் புரியறது மாமா. ஆனல் சகோதர பாசத்தை உங்களாலே புரிஞ்சுக்கவே முடியாது. ஆமாம், அந்தத் தாய்ப் பாச உணர்ச்சிக்கு எந்த விதத்திலும் குறைஞ்சது இல்லே மாமா!'' — மாது விசும்ப ஆரம்பித்தான். வைத்தா திகைப்போடு அவனையே பார்த்துக்கொண்டு நின்றார்.

''என்னடா சொல்றே நீ?''

''ஆமாம் மாமா, அந்த உணர்ச்சியைத் தான் நான் அனுபவித்துக் கொண்டிருக்

கேன் இப்போ. இதோ இந்தக் கல்யாணப் பெண் கமலி இருக்காளே, அவ என் தங்கை மாமா, என் தங்கை.''

''டேய், டேய், மாது. இந்தப் பக்கம் வாடா, யார் காதிலேயாவது விழப் போறது. என்னடா பேத்தல் இதெல்லாம்?''

''பேத்தல் இல்லே மாமா. நூற்றுக்கு நூறு சத்தியம். இந்தா இந்தப் பத்திரிகையைப் பாருங்க''. — மடியில் விபூதி மடிப்பதற்காக வைத்திருந்த கல்யாணப் பத்திரிகையை எடுத்துப் பிரித்தான் மாது.

''சங்கரன்கிட்டே கொடுத்துப் படிக்கச் சொன்னேன் மாமா. அதிலே போட்டிருக்கு பாருங்கோ. காலஞ்சென்ற மேலப்பாளையம் வாத்தியார் அண்ணுசாமி அய்யர் குமாரி கமலி என்ற கமலாவுக்கு... அப்படீன்னு. சாக்ஷாத் மேலப்பாளையம் வாத்தியார் அண்ணுசாமி அய்யர் மூத்த குமாரன்தான் மாமா இதோ உங்க எதிரே அழுக்குத் துண்டைக் கட்டிக்கொண்டு, இரண்டரை ரூபாய் சம்பளத்துக்குக் கஞ்சியைக் கையில் கொட்டிக் கொண்டு, சாகவும் முடியாமல், வாழவும் பிடிக்காமல் தவிக்கிறேனே, இந்த மாது!'' வைத்தாவின் கை மெது வாக மாதுவை அரவணைத்தது.

''வருத்தப்படாதே மாது!'' — தட்டிக் கொடுத்தார் அவர்.

''மாமா, நேற்றுக் காலையில் முகூர்த்தத் தின்போது, பானகம் கேட்டுக் கொண்டு ஒரு பெரிய அம்மாள் உள்ளே வந்தாளே உங்களுக்கு நினைவிருக்கிறதா?''— வைத்தா தலையை அசைத்தார்.

''நீங்கள் என் பெயரைச் சொல்லி அழைத்தவுடன் அறையை விட்டு வெளியே போய்க் கொண்டிருந்த அந்த அம்மாள் திரும்பிப் பார்த்த அந்த ஒரு கணம்: மனத் தில் பதிந்து தடுமாற வைத்த அந்த உருவம். இரவெல்லாம் தவித்து, கண்டு பிடித்து விட்டேன், மாமா. ஆம், என்னைப் பெற்ற தெய்வம் மாமா அது. அந்த விநாடி முதல் நான் தவிக்கும் தவிப்பு இருக்கிறதே! எப்படி மாமா அதை உங்களுக்குப் புரியும்படி சொல்வது!

''அது மட்டுமா, பகல் சாப்பாட்டுக்குப் பிறகு சம்பந்தி வீட்டவர்கள் வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தபோது கொஞ்சம் பாக்கு எடுப்பதற்காக அங்கே போன என் காதுகளில் அங்கு நடந்த அந்த சம்பாஷணை சயத்தைக் காய்ச்சி ஊற்றுவது போல் இருந் தது மாமா. சம்பந்தி வீட்டுப் பெரியவர் ஒருவர் என்ன சொல்லிக் கொண்டிருந்தார் தெரியுமா?

'இந்தப் பெண்ணுக்கு ஓர் அண்ணன் இருந்தானும். அவன் சிறு வயதிலேயே தறுதலையாக, ஒன்றுக்கும் உதவாமல் ஊரை விட்டே ஓடி விட்டானும். இருக்கானோ, இறந்து விட்டானோ தெரியவில்லை. ஆனால் பெண் அதிர்ஷ்டசாலிதான். அழகோடு அடக்கமும் கூடியிருக்கிறது என்கிற ஒரே காரணத்துக்காகத்தான் எல்லாச் செலவுகளை யும் நாங்களே ஏற்றுச் செய்து கொள்ளு கிறோம்.'

''அதற்கு மேலே கேட்கப் பிடிக்கவில்லை. அந்த இடத்தை விட்டே வந்து விட்டேன்,



“உயர்ந்துபோச்சு அண்ணாச்சி!”

கோ. கந்தசாமி

கார்டுவிலை உயர்ந்துபோச்சு அண்ணாச்சி — உனக்குக்
கடிதம் எழுதும் பழக்கம்இனி நின்னுச்சு!
ஊர்த்தகவல் நான் மறக்கும் நிலையாச்சு — இதற்கு
யார்காரணம்? என்று நினைத்தாய் — மொரார்ஜி

வாரந்தோறும் எழுதுவதைக் குறைத்தாச்சு — இனி
வருஷத்துக்கு ஒருமுறைதான் நினைத்தாச்சு!
ஊருக்குள்ளே நடமாடும் கடுதாசி — அது
ஒரேமூச்சில் ஐந்து காசு ஏறிடிச்சு!

பத்திலிருந்து புத்தக அஞ்சல் பதினஞ்சாச்சி — பல
பத்திரிகைக்கு எத்தனை செலவு வந்தாச்சு?
கத்திரிபோல செய்தித் துறைக்குக் கஷ்டமாச்சு—இதைக்
கருத்தில்வைத்துப் பார்க்காமல் அவர் இஷ்டமாச்சு!

ஒருருபாய்க்கு அரை ருபாயா வரியாச்சு — நம்ம
ஊருமக்களுக்கு இது மனக் குறையாச்சு!
அரசாங்கமே இப்படி விலையைக் கூட்டிடுச்சு — அது
அடுத்தவர்க்கு வழியைத் தானா வகுத்திடுச்சு!



மாமா. நான் உயிர் வாழ்வதில் இனிமேல் அர்த்தமே இல்லை.''


''வருத்தப்படாதே மாது. எவ்வளவோ அதிசயங்களிலே இது ஒண்ணு. கவலைப் படாதே. நீ சொல்கிறாயே, அந்த வயதான அம்மாள், உன் தாயார், அவளிடம் இதோ இப்பவே சென்று, 'உங்கள் பையன் எங்கும் போகவில்லை. இதோ உங்கள் எதிரில், உங்களுடனேயே இருக்கிறான் என்று சொல்லி விட்டு வந்து விடுகிறேன்' என்றுகூறி வைத்தா அடியெடுத்து வைத்தார். மாது அவர் கைகளை கெட்டியாகப் பிடித்துக்கொண்டான்.

''மாமா, எல்லாம் தெரிந்த நீங்களா இப்படிச் சொல்கிறீர்கள்? ஏன் மாமா, அவர்கள் தான் நான் இறந்து விட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்களே, அதை மாற்றி, இந்த நிலையில், நான் — மாது உயிரோடுதான் இருக்கிறேன் என்று அவர்கள் முன் பிரசன்னமாகி அறிமுகப்படுத்திக் கொள்வதால் இவ்வளவு சீருஞ் சிறப்புடனும் கணவன் வீடு செல்லும் என் தங்கையின் கௌரவம் உயரும் என்று நினைக்கிறீர்களா மாமா?''— முகத்தோடு முகம் உராய்வது போல் பேசிய மாதுவின் உஷ்ணமான பெருமூச்சு, வைத்தாவின் முகத்தில் பட்டு வியர்க்கவைத்தது. விழியோரம் துளித்துப் பெருகிய நீர் முத்துக்களை விரல் நுனியால் சுண்டி எறிந்தார் வைத்தா.

''மாது! நாளெல்லாம் நெருப்பில் வெந்து வேலை செய்தாலும் என் இதயத்தில்கூட ஈரப் பசை இருக்குடா. போன வருஷம், இதே வயதில் என் பெண்ணை வேறொருவர் கையில் ஒப்படைத்த போது, இந்த உணர்ச்சிகளை நானும் அனுபவித்தேன். ஆனால் உன் நிலை இருக்கிறதே...

''மாது, மனத்தைத் திறந்து நானும் ஒன்று சொல்கிறேன். இவ்வளவு நாட்களாக ஒரு தந்தையின் நிலையில் என்னைப் பாவித்துக் கொண்டு, உன்னையும் பிள்ளைக்கு மேலாகக் கண்டிப்புடன் நடத்தியபோது, நீ ஏன் இப்படிக் கலகலவென்று இல்லாமல் எப்பொழுதும் உம்மணா மூஞ்சியாக இருக்கிறாய் என்று பல தடவைகள் நான் சங்கடப்பட்டதுண்டு. ஆனால், இன்று உன்னுடைய பேச்சைக் கேட்ட பிறகு, நீ ஏன் பேசினேன்னு வருத்தப் படறேன், மாது... இதயத்தைக் கல்லாக்கிக் கொண்டு, அதற்குள் மலர் போன்ற இதயத்தைப் போற்றிப் பாதுகாத்து வந்திருக்கிறாய், இவ்வளவு நாட்களாக. உன் சகோதர பாசம் கூட எனக்கு இப்போது புரிகிறது மாது. நீ இங்கேயே இருந்து, உன் தங்கையை வழியனுப்பிவிட்டு வா, நான் சமையலறைக்குப் போகிறேன்!'' — மாதுவின் கையிலிருந்த நீர் நிரம்பிய கூஜாவைத் தம் கையில் வாங்கிக் கொண்டார், வைத்தா.

சம்பந்திகள் விடைபெற்றனர். மாதுவும் தன் தங்கைக்கு விடை கொடுத்தான் மானசீகமாக. அங்கு சற்று முன் பெருகி, இப்போது நிலைத்துவிட்ட வருத்தம் கலந்த ஆனந்தக் கண்ணீர் கடலில் இரண்டு ஜோடிக் கண்களிலிருந்து பெருகிய நீர் முத்துக்களும் இப்போது சங்கமமாகிக்கொண்டிருந்தன, ஒருவரும் அறியாமல்தான்.



(நீலகண்டன் வேகமாக மார்க்கட்டிலிருந்து கறிகாய்ப் பையுடன் உள்ளே வருகிறார்.)

நீலகண்டன்: டேய், வேணு ! நீலா....! யார் வந்து தேடினாலும் நான் வீட்டில் இல்லை என்று சொல்லி அனுப்பணும்... அசடு வழியாமல் இந்தக் காரியத்தைச் செய்யணும்.... தலையை உள்ளே நீட்டி 'என்ன சொல்றது?'ன்னு கேட்கப்படாது !

(கறிகாய்ப் பையை மேஜையின் மீது வைக்கிறார்.)

நீலா: அண்ணா ! நீயே இப்போ ஒரு விசிலைக் கையில் எடுத்துக்கோ! அப்பா பேரைச் சொல்லி யாரு வாசலில் நின்று கூப்பிட்டாலும் டபிள் விசில் அடி !

வேணு: ஏனப்பா ! டெலிபோனில் யாரும் உங்களைக் கூப்பிட்டால்....

நீலகண்டன்: உன் அருமைத் தங்கை யோசனை சொன்னாப்போலே டெலிபோனிலும் இரட்டை பிகில் ஊது!...... போடா இடியட் ! டெலிபோனில் கூப்பிட்டால் நான் பேசிக் கொள்கிறேன்....!

நீலா: அதிலேயும் ஒரு டேஞ்சர் இருக்கு ! நீங்க யாருகூடவாவது டெலிபோனிலே பேசிக்கொண்டிருக்கும் போது, தேடிக் கொண்டு வருபவர் நேரே உள்ளே வந்துவிட்டால் ...

வேணு: அப்போ அப்பாவே 'மிஸ்டர் நீலகண்டன் வீட்டிலே இல்லை'ன்னு சொல்லிவிடுவார்!....

நீலகண்டன் : ஏண்டா ! உங்களுக்குக் கிண்டலாகவா இருக்கு....? அப்படியே டெலிபோனில் யார் கூப்பிட்டாலும் நான் இல்லைன்னு சொல்லிடுங்கோ ! போதுமா ? யாரோ கல்யாணப் பிள்ளையைப் பார்க்கப் போகணுமாம்! நான் துணைக்கு வரணுமாம்! என்னவோ சொல்லிக் கழுத்தை அறுத்தான். யாருக்கு நேரம் இருக்கு. இதற்கெல்லாம்...நம்ப வேலையைக் கவனிக்க வேண்டாமா? முடியாதுன்னு சொல்லத் தாட்சிண்யம் இடம் கொடுக்கலே! அதனாலே இப்படிச் சில மணி நேரங்கள் தலை மறைவாகப் போய்த் தொலைக்க வேண்டியிருக்கு!....

வேணு : இடது பக்கத்து ஸ்டோர் ரூமிலா? இல்லை வலது பக்கத்துச் சமையலறையிலா ?

நீலகண்டன்: என்னடா, பொடி வைக்கப் பேசறே! நான் ரைட்டிஸ்டுமில்லே லெப்டிஸ்டுமில்லே !....

நீலா: ஹைடிஸ்ட் ! அதாவது ஒளிஞ்சுக்கறவர் ! ஏனப்பா !.... யாரு உங்களைத் துணைக்குக் கூப்பிட்டவர் ?

நீலகண்டன்: அந்த இழவுதான் இப்போ மறந்து போச்சு !.... சரி, சரி ! நான் உள்ளே போறேன் !

வேணு: நம்ப சாட்டர்ஜியோ, பலதேவ்சிங்கோ வந்தால்....

நீலகண்டன்: சமாளிச்சு அனுப்பிச்சுடு.... சாயங்காலமாக அவர்களுடன் பேசிக் கொள்கிறேன்......!

(கறிகாய்ப் பையுடன் உள்ளே போகிறார்.)

நீலா: இந்தச் சின்ன விஷயத்துக்கு அப்பா ஏன் ஒதுங்கறார் ? ஒளியறார் ? பெண்ணை பார்க்கவோ பிள்ளை பார்க்கவோ துணைக்குப் போனால் காப்பி டிபனை முழுங்கிவிட்டு வரலாமே?


வேணு : அப்பா டாக்ஸியிலே போகணும்னு சொல்லியிருப்பார் ! அந்த மனுஷன் பஸ்லே போகலாம்னு கஞ்சத்தனம் பண்ணியிருப்பான் ! அப்பா 'பிரஸ்டிஜ்' ஆங்கிளிலே நழுவுவார் !

நீலா: கரெக்ட் ! கரெக்ட் ! நாளைக்கே நம்ப வீட்டுக்கு வரலங்க, அப்பாவை இந்தச் சம்பவத்தின் அடிப்படையில் எடை போடப்படாதே !

(சாட்டர்ஜி எட்டிப் பார்க்கிறார்.)

சாட்டர்ஜி: மிஸ்டர் வேணு! அப்பா இருக்காரா.....?

வேணு: வாங்கோ சாட்டர்ஜி! வாங்கோ! அப்பா இருக்கார்! உள்ளே ஆசனப் பயிற்சி செய்து கொண்டிருக்கிறார் ! ஏதாவது அர்ஜண்ட் மாட்டாரா?



சாட்டர்ஜி: நீலகண்டஜீ ஒரு ஆசன எக்ஸ்பெர்ட்டும் கூடவா? தெரியாமல் போச்சே ? அவர்கிட்டே சில சந்தேகங்களைப் போக்கிக் கொண்டிருக்கலாமே?.... மிஸ்டர் வேணு! இந்த மயூராசனம் இருக்கே.....

வேணு: மயில் ஆசனம் ஏதோ டில்லி நவாப்கிட்டேயிருந்து......

நீலா: அண்ணா ! உன் சரித்திர அஞ்ஞானத்தைக் காட்டாதே ! சாட்டர்ஜி சார் மயூராசனத்தைப் பற்றிக் கேட்கிறார் ! சாட்டர்ஜி சார் ! எங்க அப்பா இதையெல்லாம் கொஞ்ச நாளா விட்டிருந்தார்....! இன்றைக்குத்தான் மறுபடியும்....

சாட்டர்ஜி: அடடா! நம்ப கேஸ்தான் போலிருக்கு! எனக்கும் உங்க அப்பாவுக்கும் என்ன ஒற்றுமை.....

வேணு : உங்களையும் யாராவது தேடிக் கொண்டு வரப் போகிறார்களா ?....

சாட்டர்ஜீ : என்ன? என்ன?.... என்னை எதற்கு.......!

வேணு : ஐ ஆம் சாரி....! எங்க அப்பாவுக்கு யாரோ திடீரென்று இந்த ஆசனப்பிஸினெஸை நினைவுபடுத்தி விட்டார்கள் ! நேராக என்னை வந்து தலைகீழாக நிற்கிறார்! அது மாதிரி உங்களையும் யாரோ....

சாட்டர்ஜீ : நோ! நோ...! நானும் கொஞ்ச நாளாக இந்த ஆசனப் பயிற்சியை நிறுத்திவிருந்தேன். உங்க பாதரே இப்போ ஆரம்பிச்சுட்டார் ! நானும் தொடர வேண்டியதுதான் !.... நான் அப்புறம் வருகிறேன்!....

(போகிறார்.)

வேணு: நீலா! பார்த்தியா! எப்படிச் சமாளிச்சேன்? ஸ்டோர் ரூமிலே சம்மணம் கொட்டிச் சிவனேன்னு உட்கார்ந்திருக்கிற அப்பாவை ஆசனம் போடறார்னு சொன்னேன்!...பொய் சொல்லக் கூடாது பாரு!... சாட்டர்ஜீ அதிலேயும் ஒரு ஒற்றுமையைக் கண்டு பிடிச்சுட்டார் !

நீலா: எனக்குப் பயமாக இருக்கு அண்ணு! இந்த 'டச்' விட்டுப் போன சாட்டர்ஜீ திடீரென்று கையைக் காலைச் சுளுக்கிக் கொண்டு அப்புறம் திட்டப் போகிறார்.

நீலகண்டன் (திடீரென்று உள்ளிருந்து எட்டிப் பார்த்து): என்னடா, வேணு.... யாராவது வந்தார்களா ?

வேணு: அப்பா! சாட்டர்ஜீ தான் இப்போது வந்தார். அவரைச் சமாளிச்சு அனுப்பிச்சேன்.

நீலகண்டன்: அந்த ஆசாமி வரலியே?

நீலா: வேறே யாரும் வரலே!.... நீங்க இப்படி எட்டி எட்டிப் பார்த்தால், கரெக்டாக அந்த ஆசாமி நுழையும்போது நீங்களும் தலையை நீட்டி வைப்பீர்கள். அப்புறம் நாங்கள் ஜவாப்தாரி இல்லே....!

நீலகண்டன்: ரைட்!.... ரைட்.... நான் சாப்பிட்டுவிட்டு டியூட்டிக்குக் கிளம்பற வரை எட்டிப் பார்க்கலே...... சரிதானே ?

(உள்ளே போகிறார்.)

நீலா: அண்ணு....! இப்போ பலதேவ் சிங்கோ கன்யாலாலோ அப்பாவைக் கூப்பிட்டுக்கொண்டுவந்தால் எப்படிச் சமாளிப்பாய்?

வேணு: இன்னிக்கு நியூஸ் ஹெட்லைன்ஸ் 'ஆசனம்' தானே. இதைத்தான் கடைசி வரை கையாளணும். நீலகண்டன்ஜீ ஆசனங்கள் போட்டுக் கொண்டிருக்கிறார். அவர் ஒரு ஆசன எக்ஸ்பெர்ட்......!

(வாயிலிலிருந்து ஒரு நடுத்தர வயதுக்காரர் ஜிப்பா அங்கவஸ்திர சகிதமாக உள்ளே நுழைகிறார்.)

ஜிப்பாதாரி : வாட் ! மிஸ்டர் நீலகண்டன் ஆசனங்கள் போடறாரா? இந்த வயசிலா? ஃபோம் ரப்பர் ஆசனம், ஈஸிச்சேர் ஆசனம் போட வேண்டிய வயசிலே காலைக் கையை மடக்கிண்டு ஏன் அவஸ்தை...? (உட்பக்கம் பார்த்து) மிஸ்டர் நீலகண்டன்! மிஸ்டர் நீலகண்டன் !

வேணு (பதற்றத்துடன்): மிஸ்டர் நீலகண்டன் இல்லே! அவர் எப்போதோ போட்ட ஆசனங்களைப் பற்றிச் சொன்னேன்.... உட்காருங்கோ! நீங்க.... நீங்க...

ஜிப்பாதாரி : நான் வரப் போறேன்னு மிஸ்டர் நீலகண்டனுக்குத் தெரியுமே !.... அப்படியுமா ஆசாமி ஆப்ஸெண்டாயிட்டார்....... !

நீலா: ஓர் அர்ஜெண்ட் விஷயமாக வெளியிலே போயிருக்கிறார். நீங்க யாருன்னு சொன்னு.....

ஜிப்பாதாரி : அவசியம் சொல்றேன், அம்மா!.... சொல்லாமல் போவேனு?... நீதான் நீலகண்டன் பெண்ணு? உன் பேர்கூட.... எஸ்! எஸ் ! நீலா. எம். ஏ.!... இது உங்க அண்ணு மிஸ்டர் வேணுவா ?

(உட்காருகிறார்)

நீலா: ஆமாம்! வேணு. பி. ஏ. பி.எல். !

ஜிப்பாதாரி : என்னம்மா ! பி. ஏ. பி. எல். என்கிற இடத்திலே ஓர் அழுத்தமும் கார்வையும் கொடுக்கிறே ?

நீலா: நீங்க என் பேரைச் சொல்லிவிட்டுத் தொடர்ந்து எம்.ஏ.ன்னு சொன்னீர்கள். அதனலே என் அண்ணு மனத்தாங்கல் பட்டுக் கொள்ளக் கூடாதே !

ஜிப்பாதாரி : நல்ல பொண்ணு அம்மா நீ! ரைட்....ரைட்.... உங்க அப்பா வர நேரமாகுமா ?

வேணு : தெரியலியே!.... ஏதோ ஒரு கழுத்தறுப்பு வந்து சேர்ந்தது! பெண் பார்க்கவோ, பிள்ளை பார்க்கவோ, துணைக்கு வரணும்னு பிராணனை வாங்கி இழுத்துண்டு போயிருக்கு! எப்ப விடறதோ ?

ஜிப்பாதாரி : உங்க அப்பா சரியான பித்துக்குளி போலிருக்கே! இன்னிக்கு நான்



வருவது தெரிஞ்சும் எவன் பின்னுலேயோ போயிருக்கான்.

வேணு: எக்ஸ்கியூஸ் மீ! இவ்வளவு உரிமையோடு பேசுகிற நீங்கள் யாருன்னு இன்னும் தெரிஞ்சுக்கலியே!

ஜிப்பாதாரி: சொல்றேன்! சொல்றேன்! சொல்லாமலா போகப் போறேன்? உனக்கும் உங்க அப்பா மாதிரி ஞாபகமறதி உண்டா?.....

வேணு (கிண்டலாக): சொல்றேன்!... சொல்றேன்! சொல்லாமலா போகப் போறேன்! இப்போ உங்களுக்குத்தான் ஞாபக மறதி ஜாஸ்தி போலிருக்கு! உங்க பேரு உங்கள் நினைவுக்கு வரவேமாட்டேன் என்கிறதோ?

ஜிப்பாதாரி: வெரிகுட்! வெரிகுட்! நான் உன் கேள்வியையும் பேச்சையும் ரசிக்கிறேன்! இளைஞர்களெல்லாம் இப்படித்தான் இருக்கணும்!.... இந்த டெலிபோனை ஒரு காலுக்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாமா? நீ வாங்கிக் கொள்வதாக இருந்தால் நான் இருபத்தைந்து பைசா கொடுக்கத் தயார்.

வேணு: நீங்க யாருன்னு இன்னும் தெரிந்து கொள்ளாத நிலையில் நீங்க நாலணு கொடுத்து விட்டே பேசுங்கள்.....! அப்புறம் அவசியமானுல் 'ரீஃபண்ட்' பண்ணி விடலாம்.

ஜிப்பாதாரி! சபாஷ் மாப்பிள்ளே!.... சபாஷ் மாப்பிள்ளே!

நீலா: நீங்க எம். ஜீ. ஆர். விசிறியா?

(காதில் போட்டுக் கொள்ளாமல் டெலிபோனை நெருங்கி நம்பரைச் சுற்றுகிருர்.)

ஜிப்பாதாரி: (டெலிபோனில்): ஆமாம், பத்மா! நான்தான் பேசறேன்! உன் வருங்கால மாமனுர் ஆளேயே காணும்!... உன் காதலன்தான்.... கோவிச்சுக்காதே....! மிஸ்டர் வேணு.... போதுமா.... இங்கே அட்டகாசம் பண்ணிண்டு இருக்கார்.... நீலகண்டன் வரவரை இருந்து பார்த்துட்டு வருகிறேன்.... (டெலிபோனை வைத்துவிட்டு வேணுவைப் பார்த்து)... மாப்பிள்ளே! நான் உங்க பெரிய மாமனுர்! பிளாஸ்டிக் மகாதேவன் பிரதர்!

வேணு: சார் சார்! எக்ஸ்கியூஸ் மீ....! நீங்க யாருன்னு தெரியாததினுலே....

நீலகண்டன் (திடீரென்று உள்ளிருந்து வந்து): ஐ ஆம் வெரி ஸாரி! உங்களை வேறு யாரோன்னு 'கன்ஃப்யூஸ்' பண்ணிண்டு உள்ளே ஒளிஞ்சுண்டு இருந்தேன்! வயிற்றெரிச்சல்.....

(எதிரே நிற்பவரைப் பார்த்துத் திடுக்கிடுகிருர்.)

ஜிப்பாதாரி: நீலகண்டா! நான் வராக சாமிதான்! பிளாஸ்டிக் மகாதேவன் பிரதர் இல்லே! நீ உள்ளே ஒளிஞ்சிண்டு ஆள் இல்லேன்னு சொல்றேன்னு ஆரம்பத்திலேயே கண்டுக்கட்டேன். அதனுல்தான் இப்படி ஒரு வேடிக்கை பண்ணினேன். ராங் நம்பர் ஃபோன் பண்ணி பத்மாவோட பேசற மாதிரி நடிச்சேன்! உன் பசங்க பிரமாதமா சமாளிச்சாங்க. ஆனுல் என் கிட்டே அவங்க ஜம்பம் சாயுமா? இப்போ மரியாதையா கொடுத்த வாக்குப் பிரகாரம் என்னேடு கிளம்பி வா! பிள்ளை வீட்டாரை உனக்குத் தெரியும். நீ வந்தால் உபயோகமா இருக்கும்.

வேணு: அது சரி, பிளாஸ்டிக் மகாதேவனை உங்களுக்குத் தெரியுமா?

வராகசாமி: ஏன் தெரியாது? அவன் நான் எல்லா விவரமும் உன்னையும் தன் மகளையும் பற்றி எனக்குச் சொன்னுன்..... என்னை யோசனை கேட்டான். இப்போ உன் அப்பாவை என்னேடு அனுப்பி எனக்கு உதவச் சொல்லு. நான் உன் கேஸிலே உனக்கு ஹெல்ப் பண்றேன். மகாதேவன் நான் சொன்ன வார்த்தையைத் தட்டமாட்டான்!

வேணு: அப்பா! கிளம்புங்கள், சீக்கிரம்!

நீலகண்டன்: வேறே வழி?

நீலா: ஒரு நிமிஷம். இதோ எல்லாருக்கும் காப்பி கொண்டு வரேன்!

(காட்சி முடிவு)

கழுதைகள் சங்கத்தில் மனிதர்கள்

மைசூர் மாநிலத்திலுள்ள ஹானிபால் என்ற ஊரில் புதுமையான ஒரு சங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தச் சங்கத்தின் பெயர், 'கழுதைகள் பொழுது போக்குச் சங்கம்'.

இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள் எடுத்துக் கொள்ள வேண்டிய உறுதி: ''நாட்டுக்காகவும் மனித இனத்தின் முன்னேற்றத்துக்காகவும் பாடுபடுவேன்!''

எதையும் பொருட்படுத்தாமல் சிரித்துக் கொண்டேயிருக்கும் ஆண்களும் பெண்களும் இந்தச் சங்கத்தில் சேரலாம்.



கழுதைக்குரிய குணங்களான பொறுமையையும் தளராத உழைப்பையும் மக்கள் மனத்தில் பதியச் செய்வதே இந்தச் சங்கத்தின் குறிக்கோள்.

இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள் தற்போது பஞ்சாப் மாநிலத்தில் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கிளைச் சங்கங்கள் நிறுவ முயற்சி செய்து கொண்டிருக்கிருர்கள்.

ஆதாரம்: கரெண்ட். தகவல்: எம். என். சுந்தரராஜன்.

அட்டைப்படக் கதை

பத்திரிகையில் இப்படி ஒரு செய்தி வெளியாகி யிருந்தது. ''அஞ்சலை கொலை வழக்கில், பூங்காவனம் என்கிற பெண் கொலைகாரியெனக் குற்றம் சாட்டப்பட்டு, விசாரணை நடந்து வருவது தெரிந்ததே. நகரில் இதைப் போல எந்த வழக்கும் பரபரப்பூட்டவில்லை. விசாரணை முடிந்து செஷன்ஸ் கோர்ட்டில் நேற்றுப் பிற்பகல் தீர்ப்பு வழங்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி, பூங்காவனம் வேண்டுமென்றேதான், அஞ்சலையை விரோதத்தின் காரணமாகக் கொன்றிருக்க வேண்டும் என்று முடிவு செய்து, பூங்காவனத்துக்குத் தூக்குத் தண்டனை விதித்தார் ! அஞ்சலையைப் போன்று பூங்காவனமும் இளம் பெண் என்பது குறிப்பிடத்தக்கது.''

வண்டியில் டிரைவர் ஸ்தானத்தில் அமர்ந்திருந்த அப்பாசாமி ஒரு தடவைக்கு இரண்டு தடவையாக அந்தச் செய்தியைப் படித்தான். பெருமூச்சு விட்டான். அவன் எதிர்பார்த்தது தான் நடந்திருக்கிறது என்றாலும் அவன் உள்ளத்தை ஏதோ ஒன்று கசக்கிப் பிழிந்தது. காரணம், அஞ்சலை அவனது மனைவி. பூங்காவனம் அவனது ஆசைநாயகி!


அஞ்சலையை, அவனது பெற்றோர்கள் அவனுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். கலியாணமான புதிதில் அவள்கூட நன்றாகத்தான் இருந்தாள். டிரைவர் வேலை செய்யும் ஒருவனுக்கு இந்த அளவுக்கு மனைவி வாய்த்தால் போதாதா? அப்பாசாமிக்கு அப்போது திருப்தியாகத்தான் இருந்தது. அந்தத் திருப்தி நாளாவட்டத்தில் குறைந்துகொண்டே வந்தது. அதற்குக் காரணம் அஞ்சலை, அடிக்கொரு தடவை நோயில் விழுந்ததுதான்! கட்டின பெண்டாட்டிக்கு வைத்தியம் செய்யக் கணவன் கணங்கமாட்டான். அப்பாசாமியும் அப்படிப்பட்ட கணவர்களின் வரிசையில் சேர்க்கப்பட வேண்டியவன்தான் ! மாதத்தில் 'ரெஸ்ட்' கிடைத்த நாட்களில்கூட அவன் 'ட்யூட்'டிக்குப் போய்க் கைநிறையச் சம்பாதித்தான். மனைவியின் வைத்தியச் செலவுக்குப் பணம் வேண்டுமே! தனக்காகக் கணவன் இப்படி உழைக்கிறான் என்பது அஞ்சலைக்குத் தெரிந்த விஷயந்தான். இருந்தாலும், அதைப் பெரிதாக எண்



பெண்ணென்று ஒருத்தி!

ரா. வேங்கடசாமி

ளுமல் கட்டினவன் கடமை என்கிற முறையில் அவன் நடத்துகொண்டான். இதற்காகக் கணவனைப் பாராட்டாமல் போகட்டும். முகத்தையாவது சுளித்துக் காட்டாமல் இருக்கக் கூடாதா? ஓயாத சுளிப்பு! சுளிப்பு, வேலை முடிந்து அவன் களைப்புடன் வரும்போது, வீட்டில் வரவேற்பு சரியாக இருக்காது. அத்துடன் சமையலும் ஆகியிருக்காது. படுக்கையில் கிடக்கும் அவளுக்காக, அவன் ஹோட்டலுக்குப் போய்ச் சாப்பாடு வாங்கிக் கொண்டு வந்து கொட்ட வேண்டும்! அதற்குப் பிறகுதான் அவன் தன் வயிற்றுப்பாட்டைக் கவனித்துக் கொள்ள வேண்டும். வீட்டில் எல்லாச் சாமான்களும் போட்டது போட்டபடியே கிடக்கும். அதையெல்லாம் அவன்தான் ஒழுங்காக எடுத்து வைத்துக் கூட்ட வேண்டும். உடம்பு சுகமாக இருந்தாலும் அதே நிலை யென்றால், அப்பாசாமிக்குக் கோபம் வராமல் இருக்குமா? எத்தனையோ தடவை அவளுக்கு அவன் சாந்தமாகப் புத்தி சொல்லி யிருக்கிறான். எதையும் கேட்டு அவளுக்குப் பழக்கமில்லை. வீட்டில் சமையலறை ஒழுங்காக இருக்க வேண்டாமா? கணவனின் படுக்கை அறை நாளுக்கொருதடவை கூட்டப்பட வேண்டாமா? வீட்டுக்குள் நுழையும்போதே முழங்கால் அளவுக்குக் குப்பை இருந்தால், அந்த வீட்டில் எப்படித்தான் உட்காருவது? வீடு இருக்கட்டும். தன்னையாவது அஞ்சலை சுத்தமாக வைத்துக் கொண்டாளா என்றால் அதுவும் இல்லை! எதுவும் எப்படியாவது இருந்து தொலைந்து விட்டுப் போகட்டும், கணவன் வீட்டுக்குத் திரும்பும் நேரத்திலாவது முகத்தை நன்றாகக் கழுவிப் பொட்டிட்டுக் கொண்டு, தலையில் கொஞ்சம் பூவை வைத்துக் கொண்டு சிரித்த முகத்துடன் காட்சியளிக்க வேண்டாமா? அப்பாசாமிக்குக் கொஞ்சம் கொஞ்சமாக இந்த வாழ்க்கை சலிப்பைக் கொடுத்ததில் வியப்பென்ன இருக்கப் போகிறது? போதாத குறைக்கு, அவனுடன் வேலை செய்யும் டிரைவர்களும், கண்டக்டர்களும் தங்கள்



தங்கள் மனைவிமாரைப் பற்றி வாளளாவப் புகழ்ந்து கொண்டு இருந்ததோடு நில்லாமல் வீட்டுக்குத் திரும்பும்போது கையில் பூவுடனும் தின்பண்டங்களுடனும் திரும்புவதைக் கண்ட அவன், தானும் இப்படிச் செய்தால் என்ன என்று நினைத்து, அவ்வாறே இரண்டொரு தினங்கள் செய்தும் பார்த்தான், தன் மனைவியின் அன்பை அப்போதாவது பெற முடிகிறதா என்ற ஆசையில். அது விபரீத பலனையே அளித்தது.

''உக்கும்.... இது ஒன்னுதான் குறைச்சல்!'' என்று அவள் சலித்துக் கொள்ளத்தான் செய்தாள்.

தெரிந்தவர்கள் — தெரியாதவர்கள் பக்கத்து வீட்டுக்காரர்கள் அவ்வளவு பேரும், அஞ்சலைக்கு அப்பாசாமியின் சார்பாகப் புத்தி சொல்லிப் பார்த்தார்கள். பலன் பூஜ்யம்.

இந்தச் சமயத்தில்தான் பூங்காவனம் அவன் வாழ்க்கையில் நுழைந்தாள். பாலைவனத்தில் ஒதுங்கப் பசுஞ்சோலை கிடைத்தது போல் — அஞ்சலையைக் கட்டிக் கொண்டு அவதிப்பட்ட அவனுக்கு, பூங்காவனம் கொஞ்சம் ஆறுதல் தந்தாள் என்றால் அது உண்மை. இரண்டொரு தடவை அவள் அவனது பஸ்ஸில் ஏறும்போது அவளை அப்பாசாமி பார்த்திருக்கிறான். அவள் பார்வையை அவன் கனிவாகத் திருப்பவே, அடுத்த உறவுக்கு அதுவே பாதையாகிவிட்டது. பூங்காவனத்தைப் பற்றி மற்றவர்கள் கேலி செய்தார்கள். அவளைப் பற்றி எவ்வளவோ சொன்னார்கள். இருப்பினும் அப்பாசாமி அவற்றையெல்லாம் பொருட்படுத்தவேயில்லை. யார் என்ன சொன்னால் என்ன, அவன் மனத்துக்குப் பிடித்திருந்தால் சரி.... மற்றவர்களைப் பற்றி அவன் ஏன் கவலைப்பட வேண்டும்? அவள் உள்ளூர்க்காரிதான். வியாபாரி. யாருமில்லாதவள் — இதெல்லாம் அப்பாசாமிக்கு மிகவும் சௌகரியமாகப் போய் விட்டது.

''என்ன அப்பாசாமி நீயா இப்படி? போயும் போயும் இந்தப் பூங்காவனம்தானா உனக்குக் கெடைச்சா?'' என்று சலித்துக் கொண்டவர்களுக்கு, அஞ்சலையைப் பற்றித் தெரியாது. அதைப் பற்றி அவன் ஏன் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும்?

பூங்காவனத்தைப் பற்றி மற்றவர்கள் என்ன சொன்னாலும் சரி..... அவளை அப்பாசாமிக்குப் பிடித்திருந்தது. ஏன், அவள் உறவு கிடைத்த பிறகுதான் அவனுக்கு வாழ்க்கையிலேயே கொஞ்சம் ருசி ஏற்பட்டது. வாரத்தில் மூன்று நாட்கள் அவள் வீட்டில் அவன் 'கேம்ப்' போட்டான். அவள் கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுத்தான்; மகிழ்ந்தான். பூங்காவனமும் அப்பாசாமியின் தொடர்பு ஏற்பட்டதிலிருந்து, வெளியில் போவதையே நிறுத்திக் கொண்டாள். ஒருவனிடம் இருக்கும்வரையில் அவனிடம் நன்றியுடன் இருக்க வேண்டாமா?

பூங்காவனம் ஒரு கோடியிலும், அஞ்சலை மற்றொரு கோடியிலும் இருந்ததால், அஞ்சலைக்குப் பூங்காவனத்தைத் தெரிந்திருக்காது என்று அப்பாசாமி நினைத்தான். ஆனால் உண்மை வேறு — பூங்காவனத்துக்குத் தெரியும், அப்பாசாமி திருமணமானவன் என்று! அதைப்பற்றியெல்லாம் அவள் ஏன் கவலைப்பட்டுக் கொள்ளவேண்டும்? வேளைக்கு நல்ல சாப்பாடும்.... உடுக்க நல்ல உடையும், கைச் செலவுக்குக் காசும் இருந்துவிட்டால், அவன் யாராக இருந்தால்தான் என்ன? இதைப் போன்று அஞ்சலை இருக்க முடியுமா?

கணவனின் மாறுதலைப் பற்றி அவள் அறியாமல் இல்லை. எப்போதோ வருகிறான். வந்தாலும் அதிக நேரம் தங்குவதில்லை. சாப்பாடு இருக்கிறதா இல்லையா என்று கவலைப்பட்டுக் கொள்வதில்லை. வீடு சுத்தமாக இருக்கிறதா இல்லையா என்று பார்ப்பதில்லை. வருகிறான்..... போகிறான்... அவள் உடல் நிலையைப்பற்றிக்கூட முன்போல் கவனிப்பதில்லை..... செலவுக்குப் பணம் கேட்டால் மட்டும் தருகிறான்...... இதற்கெல்லாம் என்ன அர்த்தம்? இந்த ஒரு விஷயம் மட்டும் பெண்ணுக்கு எளிதில் புரிந்துவிடும்...... பக்கத்து வீட்டுக்காரி ஒருத்தி, தான் காதில் வாங்கிக்கொண்ட விஷயத்தை இலேசாக அஞ்சலையிடம் சொல்லி வைத்தாள். அதைக் கேள்விப்பட்டவுடன், அஞ்சலைக்குக் கோபம் வரத்தான் செய்தது. ஆனால் அவள் அவனிடம் கோபித்துக் கொண்டு என்ன செய்ய முடியும்? கேட்காமல் இருப்பதுவும் நன்றாக இல்லையென்று ஒரு தினம், அவன் செலவுக்குப் பணம் கொடுக்காத போது, பெரிதாகக் கூ போட்டு ரகளை செய்து பார்த்தாள்.

''இந்தா அஞ்சலை! சும்மா கூச்சல் போட்டுக் கலாட்டா பண்ணாதே... பணம் இருந்தால்தான் தரமுடியும்.... இல்லேன்னா இல்லைதான்.....! உன்னாலே முடிஞ்சதை நீ செஞ்சுக்க.....!'' என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டான் அப்பாசாமி. எதிர்த்து அவளால் எதும் பேச முடியவில்லை. பேசிவிட்டு அவள் எங்கே போவாள்? அவளுக்குத்தான் யாருமே இல்லையே? அடங்கிப் போய் விட்டாள்.

தன்னைப் பிடிக்காமல், கணவன் வேறொருத்தியைப் பிடித்துக் கொண்டான் என்பதால் அதிர்ச்சியடைந்து அஞ்சலை தன்னைத் திருத்திக் கொண்டாளா என்றால் அதுதான் இல்லை! அவள் பழையபடியே தான் இருந்தாள். திருந்திவிட்டால் மட்டும் தன் கணவன் தன்னிடம் வந்துவிடப் போகிறானா என்கிற எண்ணமோ, என்னவோ? அப்பாசாமியோ முன்னைப்போல் தன் மனைவியைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொள்ளவே இல்லை. பெயருக்கு அவள் தன் மனைவியாகவே இருந்து விட்டுப் போகட்டும் என்று நினைத்திருந்தான் அவன்!

ஒரு வருடம்கூட முழுமையாக ஓடியிருக்காது. அப்பாசாமிக்குச் சுற்றுவட்டாரத்தில் கொஞ்சம் கடன் ஏற்பட்டுவிட்டது. பார்ப்பது டிரைவர் வேலை. சம்பளமோ குறைச்சல். இந்த அழகில் இரண்டு பெண்களை வைத்துக் கொண்டு சமாளிப்பது என்பது லேசான காரியமா? பணக்காரனே சில சமயத்தில் திண்டாடுகிறான்! பூங்காவனம் கொஞ்சம் செலவாளிதான்! அப்பாசாமி வந்துவிட்டுப்

கல்கி


சந்தா விகிதம்

	ஒரு வருஷம் ரூ. பை.	ஆறு மாதம் ரூ. பை.
இந்தியா	20 00	10 00
பர்மா, மலேயா இதர நாடுகள்	40 00	20-00
இலங்கை (இலங்கை நாணய மதிப்புப்படி)	21-00	10 50

சந்தா தொகை முன்னதாக அனுப்பப் பட வேண்டும். வி. பி. பி. கிடையாது

மானேஜர்:

காரியாலயம் :: சென்னை -10


டாட்ஜ் /:.பார்கோ
இப்பொழுது
அதிக சக்தியையும்
அதிக சிக்கனத்தையும்
அதிக வசதியையும்
அளிக்கின்றன
உங்கள் அபிமான ட்ரக் முன்பு எப்போதையும் விட இப்போது சிறந்து விளங்குகிறது.
...இயந்திரத்தின் இன்னும் பல விசேஷ அம்சங்களையும் கொண்ட இதுவே நீங்கள் வாங்கக் கூடிய தலைசிறந்த ட்ரக் என்பதை நீங்களும் ஒப்புக்கொள்வீர்கள் என்பதில் சந்தேகமில்லை. அதிக லாபம் பெற டாட்ஜ்/பார்கோ ட்ரக்கையே வாங்குங்கள்.
தி ப்ரீமியர் ஆட்டோமோபைல்ஸ் லிமிடெட்
PAL
SISTA'S-PAL-MSA TAM
உங்கள் அருகாமையிலுள்ள டீலர்களை அணுகவும்

போகும்போதெல்லாம், கையில் பணம் கொடுத்து விட்டுப் போவதோடு நில்லாமல் புடவை ரவிக்கை என்று ஏதாவதொரு பொருள் வாங்கித் தந்துதான் ஆகவேண்டும் என்கிற நிலையை அவள் உருவாக்கி வைத்திருந்தாள். அவள் கோபத்தை அவனால் எளிதில் சமாளிக்க முடியாத அளவுக்குப் பூங்காவனம் நடந்து கொண்டாள். இவளையும் சமாளித்து.... அஞ்சலை உயிரோடு இருப்பதற்கும் பணம் கொடுக்க வேண்டுமென்றால் ? ஆரம்பத்தில் மிகவும் சாதாரணமாக இருந்த விஷயம் நாளடைவில் அப்பாசாமியை மிகவும் பாதித்தது. ஆகையால் கொஞ்சம் கொஞ்சமாக அவன் கடன் வாங்க ஆரம்பித்தான். அது எங்கே போய் முடியும் என்று அவன் அப்போது யோசித்துப் பார்க்கவில்லை. மாத ஆரம்பத்தில் கடன்காரர்கள் பஸ் நிலையத்துக்கே வந்து கடனை வசூலித்துக் கொண்டு போன போதுதான் அப்பாசாமி தனது இரட்டை வாழ்க்கை எவ்வளவு சிக்கலைத் தருகிறது என்பதைத் தெரிந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்தது. இவன் இப்படிச் சிரமப்படுகிறான் என்று தெரிந்தும் பூங்காவனம் தனது தேவைகளைக் குறைத்துக் கொள்ள விரும்பவில்லை. அவனுடைய ஆசை நாயகியாக இருக்க வேண்டுமென்றால், இந்தச் செலவெல்லாம் அவசியம்தான் என்பதை அவள் சொல்லாமல் சொல்லிக் காட்டினாள்.

இந்த நிலை அவனை அஞ்சலையே தேவலை என்று நினைக்கும்படி செய்தது. ஆனால் அவள் அப்படி நடந்து கொள்ளவில்லையே, என்ன செய்வது? இருந்தாலும் செலவுக்காகப் பயந்து அப்பாசாமி, பூங்காவனத்தின் வீட்டுக்குப் போவதையே நிறுத்திக் கொண்டான். அவன் நிறுத்தியதும் ஆபத்தாயிற்று. அவளே அவனைத் தேடிக்கொண்டு வரலானாள். வருவதோடு மட்டுமா? பணம் வாங்கிக் கொள்ளாமல் நகருவதும் இல்லை. என்னதான், அவன் விஷயம் மற்றவர்களுக்குத் தெரிந்திருந்தாலும், பூங்காவனம் இப்படிப் பலர் எதிரில் வந்து உரிமை கொண்டாடுவது அப்பாசாமிக்குப் பிடிக்கவில்லை. அதை அவளிடம் சொன்ன போது, ''பணமில்லாமே நான் - எப்படிப் பொழைக்கிறது ? உன்னை நம்பி என் வியாபாரத்தையும் உட்டுட்டேனே?'' அவனது மனைவி என்பதை அவள் பேச்சினால் நிலைநிறுத்திக் காட்டினாள். கடன் வாங்க இடமில்லாத போது, அவன் என்ன செய்ய முடியும் ?

மனைவியோ அப்படி இருக்கிறாள்! ஆசை நாயகியோ இப்படி இருக்கிறாள்!

'இரண்டு பேரும் இல்லாவிட்டால்கூட வாழ்க்கை நிம்மதியாக இருக்கும்போலிருக்கிறதே' என்கிற எண்ணம் அவன் மனத்தில் தோன்றிய போது. அந்த எண்ணமே அவனுக்கு நிம்மதி கொடுப்பதாக இருந்தது ! இருவரையும் விட்டுவிட்டு எங்காவது கண் காணாத இடத்துக்கு ஓடிப் போய்விட்டால் என்ன என்றுகூட அவன் நினைத்துப் பார்த்தான். சே ! பெண்களுக்குப் பயந்து ஓடுவதா ? கோழைத்தனம். இதற்குப் பயந்தால், மற்றவர்கள் தன்னைப் பற்றி என்ன நினைத்துக் கொள்வார்கள்.....?

இதைப் போன்ற சிந்தனைகள் அவன் மனத்தில் தோன்ற ஆரம்பித்தவுடன், அவனுக்குத் தானாகப் பல யோசனைகள் வரத் தொடங்கின !

அஞ்சலையும் வேண்டாம் — பூங்காவனமும் வேண்டாம்..... அதற்கு என்ன வழி? ஒரு வழி தோன்றியது. அதன்படி நாடகமாடினான். பூங்காவனம் எப்படிப்பட்டவள் என்பதை அவன் அறிவான். அவளுக்கு வெறி கொடுக்கிறாற்போல் ஏதாவது செய்தால், அவள் தன்னை விட்டுப் போய்விடுவாள் என்று அவனுக்குத் தெரியும். அப்புறம் அஞ்சலையை ஒதுக்கிவிட்டால் போயிற்று.

மனத்தில் யோசனை தோன்றியவுடன், அதைச் செயலாக்க முனைந்தான். காற்று அஞ்சலையின் பக்கம் வலை வீச ஆரம்பித்தது. அஞ்சலையை அழைத்துக் கொண்டு, பூங்காவனத்தின் கண்களில் படும்படியாக வெளியில் போய்விட்டு வந்தான். பூங்காவனத்தின் வீட்டுக்குப் போவதையே சுத்தமாக நிறுத்திக் கொண்டான். அப்பாசாமியின் பணத்தில் வசதியாக இருந்தவளுக்கு, அவன் வராமல் நிறுத்திக்கொண்டது பேரிழப்பாகத் தோன்றியது. அவளால் பேசாமல் இருக்க முடியுமா? அப்பாசாமியைத் தேடிக்கொண்டு வந்துவிட்டாள்!

''நான் என்ன செய்வேன், பூங்காவனம்? தாலி கட்டிக் கொண்டவ, என்னைக் கொன்னுடுவேன்னு சொல்றப்போ நான் பயப்படாம இருக்க முடியுமா ? உன்னையாவது சமாளிக்கலாம்.... அவளைச் சமாளிக்க முடியுமா ? அதனாலேதான் நான் என் பெண்டாட்டிகிட்டேயே திரும்பிப் போயிட்டேன். என்னை மறந்துடு, பூங்காவனம்!''

அழாத குறையாக அப்பாசாமி சொன்னதைப் பூங்காவனம் அப்படியே நம்பிவிட்டாள். ''பொம்பளைக்குப் பயந்துட்டா என்னை வுட்டுட்டு ஓடிப் போயிட்டே? அந்தச் சிக்காளி உன்னை என்ன பண்ணிடுவா பார்க்கலாம்......வா !''

''அம்மா, தாயே நான் வரல்லை. என்னை இதோடு விடு.... நான் இப்படியே இருந்துவிடறேன்.''

பூங்காவனம் இதில் சமாதானமடைந்து விடுவாளா ? எவ்வளவு வசதிகள் அநுபவித்தாள் அவள்? எவ்வளவு தூரம் பேசினாலும் அப்பாசாமி அசைந்து கொடுக்கமாட்டான் என்பதை அவள் நன்றாகப் புரிந்து கொண்டாள். புரிந்து கொண்டதோடு மட்டுமல்லாமல், இழந்த வாழ்க்கையை மீண்டும் அடைந்தே தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டு விட்டாள்.

இப்படிக் கொலையில் போய் முடியும் என்று தெரிந்திருந்தால் அப்பாசாமி கட்டாயம் அப்படி ஒரு நாடகம் ஆடியிருக்க மாட்டான்! தன் செயலால் இப்படி நடந்துவிட்டதே என்று எண்ணியபொழுது, இரு கொலைகளையும் தானே செய்துவிட்டது போன்றதோர் உணர்வு அவனைக் கசக்கிப்பிழிந்தது. பிழியப் பிழிய அழலானான்.

வட்டமேஜை

- மறைமுகமான கட்டாயம்
- முடித்த விதம் அற்புதம்
- மனத்தைக் கவருகின்றன!
- அடித்துக் கூறுவேன்!

மத்திய அரசின் ஆட்சிமொழி பற்றிப் பேசுகையில் குழப்பம் ஏற்படும் சில சொற்களைத் தவிர்த்தல் நலம். இணைப்புமொழி, தேசிய மொழி என்ற சொற்கள் குழப்பத்துக்கே துணை புரியும்.

இக்கிளர்ச்சியின் நியாயத்தையும் வன்மையையும் நன்கு உணர்ந்த நேரு அவர்கள் ஒரு வாக்குறுதி கொடுத்தார்கள். அது வருமாறு:

1. மத்திய அரசின் இணை ஆட்சிமொழியாக ஆங்கிலம் தொடர்ந்து இருக்கும்.
2. அதன் காலவரையறையை ஹிந்தி பேசாதோரே தீர்மானிப்பார்கள்.
3. ஹிந்தி மொழி தெரியாது என்ற காரணத்துக்காக எந்த இந்தியனுக்கும் வேலை வாய்ப்போ, பதவி உயர்வோ மறுக்கப்பட மாட்டாது.

இதில் மூன்றாவது பகுதிதான் உறுதியின் உயிர்நாடி போன்றது. இதனைக் காங்கிரஸ் தலைமை அறவே மறந்து செயலாற்றி வருவது விநோதமாக இருக்கிறது!

இப்பொழுது அண்மையில் நிறைவேற்றப் பட்ட சட்டமும், தீர்மானமும், நேரு அவர்களின் உறுதிமொழியைக் காற்றில் பறக்க விட்டுள்ளன.

'மும்மொழித் திட்டத்தை, ஏதோ அற்புத சஞ்சீவிபோல் காங்கிரஸ் மேலிடம் பேசுகிறது. பீகார்வாசியைத் தமிழ் படி என்று கட்டாயப்படுத்துவதில் பொருள் உண்டா? துவேஷம்தானே வளர ஏதுவாகும்?

இப்பொழுது உடனடியாகச் செய்ய வேண்டியவை:

1. நாடாளுமன்றத் தீர்மானம் ரத்து செய்யப்பட வேண்டும்.
2. மொழிச் சட்டத்துக்குக் கொண்டுவந்த திருத்தங்கள் நீக்கப்பட வேண்டும்.
3. மும்மொழித் திட்டம் கைவிடப்பட வேண்டும்.

நிரந்தரமான பரிகாரம் அரசியல் சட்டம் 343வது பிரிவை ஆங்கிலத்தை யூனியன் ஆட்சி மொழியாக்கும் வகையில் திருத்துவதேயாகும்.

பயிற்றுமொழி சம்பந்தமாக, வரும் ஆண்டிலிருந்து அரசினர் கல்லூரிகளில் தமிழ் ஒன்றே இருக்கும் என்று தமிழக அரசினர் அறிவித்துள்ளனர். இந்தத் திட்டம் சரியன்று. ஆங்கிலம், தமிழ் என்ற இரு மொழிகளையுமே பயிற்று மொழியாக ஏற்பாடு செய்து மாணவர்களின் பிரியத்துக்கு விட்டுவிட வேண்டியதே, யாவருக்கும் பொதுவான அரசின் கடமையும் பொறுப்புமாகும். தமிழ்மொழியை மட்டும் வைப்பது மாணவர்களை மறைமுகமாகக் கட்டாயப் படுத்துவதாகும். இரண்டையும் வைத்தால் பெரும்பாலான மாணவர்கள் ஆங்கிலத்தைத் தானே தேர்ந்தெடுப்பார்கள் என்று வாதிக்கப்படுகிறது. அது உண்மைதான்!

மாணவர்களுக்கும் அவர்கள் பெற்றோர்களுக்கும் அவர்கள் நலன்கள் தெரியாதா? மேலும், தமிழ் தம் தாய்மொழி பேசாத பலரும் வாழும் நம் மாநிலத்தில், தமிழை மட்டும் ஒரே போதனுமொழியாக வைப்பது முறையாகாது.

சென்னை — 31
28-2-68 எல். கிருஷ்ணசாமி பாரதி

கமலியின் குழந்தை என்ற சிறப்புச் சிறு கதையைச் சுவைத்தேன்.

கதை இறுதியில் வேலம்மாதான் தன் தாயார் என்ற உண்மையை அறிந்த கமலி தன் கணவன் சொன்ன உயர்ந்த சொற்களால் உந்தப்பட்டுக் குழந்தையைப் பாசத்தோடு வாரியெடுத்து மார்பில் அணைத்துக் கொண்டாள் என்று முடித்திருக்கும் விதம் அற்புதமாக இருந்தது.

பெர்கேரா
5-3-68 எஸ். ராஜகோபாலன்

'கமலியின் குழந்தை' என்ற சிறப்புச் சிறுகதை ஓர் உயர்தரமான படைப்பு. ஆஸ்பத்திரிச் சூழ்நிலைக்கு நம்மை அழைத்துச் செல்லும் கதாசிரியர் பிறகு பாசத்தின் மகிமையை விளக்குகிறார். திரு ஜெகசிற்பியன் அவர்களின் எழுத்துத் திறமையை, அவரது சரளமான நடையைக் 'கமலியின் குழந்தை'யில் மறுபடியும் அநுபவித்தேன்.

குரோம்பேட்டை
5-3-68 தெ. சி. சாம்பமூர்த்தி

'கல்கி'யில் தற்போது வரும் அட்டைப் படங்கள் மிகவும் சிறந்த முறையில் அமைந்திருக்கின்றன. மனத்துக்குப் பிடித்தமாய் இருக்கின்றன. வண்ணமும் அழகும் மனத்தைக் கவருகின்றன.

பாபநாசம்
7-3-68 வி. ப. க. மூர்த்தி


கல்கி 17-3-68 தேதி இதழில் வட்ட மேஜைப் பகுதியில் நண்பர் நாராயணன் எழுதிய கடிதம் கண்டேன். பதினாறு ஆண்டுகளாகத் தமிழக அரசு போக்குவரத்தில் பிரயாணம் செய்தவன் என்ற முறையிலும் பல்வேறு ராஜ்யப் போக்குவரத்துகளில் பிரயாணம் செய்தவன் என்ற முறையிலும் இந்த ராஜ்யத்தில் உள்ள அளவுக்குப் போக்குவரத்து வசதி எவ்விடத்திலும் இல்லை என்று நான் அடித்துக் கூறுவேன்.

சென்னை — 20
15-3-68 வி. ஆர். தியாகராஜன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam

GRASIM

STAPLE FIBRE A SUPPLEMENT TO COTTON AND OTHER FIBRES



Among Indian technological achievements Gwalior Rayon's success in producing Rayon Grade Pulp from indigenous raw materials without any foreign aid or collaboration has, perhaps, been the most remarkable. The staple fibre produced from the pulp has been a boon to the hard-pressed textile industry which was deprived of valuable raw materials when vast areas of cotton-growing land were lost to Pakistan as a result of Partition.

Grasim Staple Fibre is unique in many respects, and is, in effect, a supplement to all natural fibres including cotton, wool, silk, jute, as well as to synthetic fibres. When blended or mixed with other fibres, it increases the usefulness of the resultant fabrics, making them cooler, softer, and more comfortable while at the same time helping to lower costs.

Today Gwalior Rayon contributes substantially to the national economy. It keeps hundreds of textile mills busy, gives employment to thousands of people, helps clothe lakhs more, saves crores of rupees in foreign exchange, contributes handsomely and in ever-increasing amounts to the national exchequer—these are just a few of the calculable benefits.

Besides Rayon Grade Pulp and Staple Fibre, Gwalior Rayon also produces high quality fabrics and fabricates its own machinery and equipment.

As the needs of the nation for the basic necessities of life are constantly growing, Gwalior Rayon, conscious of its responsibilities, has already made plans to expand its production. It is the constant endeavour of the Company to serve the country to its utmost ability.

THE GWALIOR RAYON SILK MANUFACTURING (WVG.) CO. LTD.

Birlagram, Nagda.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 சதம்
தபால் செலவு தனி